Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

# தினமுரசு
தினப்பதிப்பு
THINAMURASU

முரசு – 02 | திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆடி 19 வெள்ளிக்கிழமை (03.08.2012) பக்கங்கள் 20 | ஓசை – 307

யாழ். நகரின் லுமாலா மிதிவண்டியின்
ஏக விநியோகஸ்தர்

வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
0212228306
பொதிகள் ஏற்றி
இறக்குவதில்
நம்பிக்கை பெற்றோர்
(C/1630)
வெங்கடேஸ்வரா 125, 127 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



03



05



09



10



17

### பரிந்துரைகளின் அமுலாக்கம்

# தேசிய செயற்திட்டம் வரவேற்கிறது அமெரிக்கா

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் சிபாரிசுகள் அமுலாக் கம் தொடர்பான இலங்கை அர சாங்கத்தினால் தேசிய செயற் திட்டம் வெளியிடப்பட்டதை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

இது தொடர்பில் இலங்கை யிலுள்ள அமெரிக்க உயர்ஸ் தானிகராலயம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கை அரசாங்கம், தேசிய செயற் திட்டம் வெளியிட்டமையை ஐக்கிய அமெரிக்கா வரவேற்கின்றது. கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் முழுமையான நடை முறை ப்படுத்துதலை நாம் நீண்ட நாட் களாக ஊக்குவித்து வந்துள்ளோம்.

தேசிய செயற்திட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்தல், நீண்டகால இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் மற்றும் நிலையான சமாதானம் ஆகியவ ற்றை மேலும் வலுவூட்டி அனைத்துக் குடி மக்களுக்கும் நன்மை பயக்கும் என நாம் நம்புகின்றோம் என்று அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இஸட் புள்ளி விவகாரம் மாணவர்கள் போர்க்கொடி

இஸட்புள்ளி விவகாரத்தினால் பாதிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கை யான மாணவர்கள் மற்றும் பெற்றோ ர்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அலுவலகத்திற்கு முன் னால் நேற்று பகல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் அப்பகுதியில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட் டது. பல்வேறு மாவட்டங்களைச் சேர் ந்த சுமார் 1500 மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினர். பல் வேறு மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 1500 மாணவர்கள் இந்த ஆர்ப்பாட்டத் தில் பங்கு பற்றினர். அமைச்சர்கள், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக குழுவினர் ஆகியோருக்கு எதிராக

(19) ஆம் பக்கம் பார்க்க

## யாழ். நுழைவாயிலில் புதிய மகரதோரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நுழைவாயிலுக்குப் புதிய மகர தோரணம் மிகவிரைவில் நல்லூர் பிரதேச சபையினால் அமைக்கப்பட இருக்கிறது. யாழ்ப்பாணத்திற்குள் வருபவர்களுக்கு யாழ்ப்பாணத்தின் பழமையினையும் வர லாற்றையும் பறைசாற்றக்கூடிய விதத்தில் இந்த புதிய மகரதோரணம் அமைக்கப் பட இருக்கிறது.

தற்போது அமைக்கப்பட்டு வரும்துரித வீதி அகலிப்புப் பணிகளுக்காக ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த யாழ். வளைவு மகர தோரணம் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அகற்றப்பட்டு வீதி அகலிப் புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருந் தது.

அகற்றப்பட்ட மகரதோரணம் மீண்டும் அமைக்கப்படுமா? என்ற கேள்வி பல மக களின் கேள்வியாக இருந்தது தற்போது இதற்கு விடிவுகாலம் கிட்டியுள்ளது. நல் லூர் பிரதேச சபை முதல் அமைக்கப்பட் டிருந்த இடத்தில் புதிய யாழ். வளைவு மகர தோரணம் அமைப்பதற்கான படவரை புகள் வரையப்பட்டு அதற்கான அங்கீகா ரமும் தற்போது கிடைக்கப்பட்டதுடன் அதனை மீண்டும் கட்டுவதற்கு வீதி அபி விருத்தி அதிகார சபை பத்து இலட்சம் ரூபா நிதியினை நல்லூர் பிரதேச சபைக்கு வழங்கியுள்ளது.

நல்லூர் பிரதேச சபை யாழ். வளைவு மகரதோரணம் கட்டுவ தற்கான கேள்விப்

(19) ஆம் பக்கம் பார்க்க


புத்தத்திற்குப் பிந்திய யாழ்ப்பாணம் இப்போது எப்படி உள்ளது, நேற்று யாழ், வந்து நாடித்துடிப்பறியும் பிரிட்டிஷ் எம்.பி.க்கள் குழுவினர். (02)

## புங்குடுதீவில் நெருப்புக் காய்ச்சல்
### மருத்துவர்கள் எச்சரிக்கை!

புங்குடுதீவுப் பிரதேசத்தில் தற்போது நெருப்புக் காய்ச்சல் வேக மாகப் பரவிவருகிறது. கடந்த பத்து நாட்களினுள் 11 நெருப்புக் காய்ச்சல் நோயாளர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு வேலணை புங்குடுதீவுப் பகுதிகளில் மேலும் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவாது தவிர்த்துக் கொள்வதற்கு பொதுமக்களை பின்வரும் சுகாதாரப் பழக்கவழக்கங் களைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொண் டுள்ளது. போதுமான

(19) ஆம் பக்கம் பார்க்க

## தொடரும் மோசடி அபிவிருத்தி படுகுழியில்
### வலி. கிழக்கின் யதார்த்தம்

(யாழ்ப்பாணம்)

நிறைவேற்றப்பட்ட தீர்மானங் களைச் சீராக நடைமுறைப்படுத் தாது தொடரும் மோசடி நடவ டிக்கைகளினால் மக்களின் நலனு க்கு விரோதமாகச் செயற்படும் வலி. கிழக்குப் பிரதேச சபை தவிசாளரின் முறைகேடான செயற்பாடுகளைக் கண்டித்து கடந்த மூன்று சபைக்கூட்டத்தில் தாம் வெளியேறியிருப்பதாக வலி.கிழக்குப் பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவரும் ஈ.பி.டி. பி.யின் பிரதேச அமைப்பாளரு மான இராமநாதன் ஐங்கரன் தெரிவித்தார்.

அப்பிரதேச சபையில் அங் கம் வகிக்கும் ஐந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சார்பில் சபை யின் ஒழுங்கற்ற செயற்பாடுக ளைக் கண்டித்து பிராந்திய உள் ளூராட்சி உதவி ஆணையாளரு க்கு அனுப்பி வைத்துள்ள அறிக் கையிலேயே ஐங்கரன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

சபையின் அபிவிருத்தி நடவ டிக்கைகளில் நீண்டகாலம் இடம் பெற்றுவரும் முறைகேடுகள் ஒழுங்கீனங்களைக் கண்டித்து கடந்த மூன்று சபைக் கூட்டங் களிலிருந்து வெளியேறியமைக் கான காரணங்களை விளக்கிப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு எழுதியுள்ள அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

மக்களது வரிப்பணத்தின் மூலம் சபையால் மேற்கொள் ளப்படும் திட்டங்களில் காணப் படும் குறைபாடுகள் பற்றி மக் களால் தெரிவுசெய்யப்பட்ட எமது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல

(19) ஆம் பக்கம் பார்க்க

## வர்த்தகர்கள் மீது கடும் கண்காணிப்பு
### விதிகளை மீறினால் சட்ட நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில் உள்ள வர்த்தக நிலையங்களில் காலாவதி யான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாக பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்துள்ளார். வர்த்தகர்கள் பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது பொருட் களின் தரம், காலாவதியாகும் திகதி என்பவற்றைக் கருத்திற் கொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்வது அவசியமானதா கும்.காலாவதியான

(19) ஆம் பக்கம் பார்க்க

## நிறைவடையும் நிலையில் முல்லை மீள்குடியமர்வு

முல்லைத்தீவு மாவட்டத்தின் செம்மன்குன்று கிராமத்தில் மேலும் 40 குடும்பங்களைச் சேர் ந்த மக்களை மீள்குடியேற்றுவத ற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது. யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வவுனியா மெனிக் பாம் நலன்புரி நிலையத்தில் வசி த்து வந்த மக்களே இவ்வாறு மீள்குடியேற்றப்படுவதாக முல் லைத்தீவு மாவட்ட அரசாங்க அதி பர் நாகலிங்கன் வேதநாயகம் தெரிவித்தார். நேற்று வவுனியா வில் இருந்து முல்லைத் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள குறித்த 40 குடும்பங்களைச் சேர்ந தவர்களும் பாட சாலையொன் றில் தற்காலிகமாகத் தங்கவைக கப்பட்டுள்ளனர்.

இவர்கள் இன்றைய தினம் அவர்களது சொந்த இடங்களில்

(19) ஆம் பக்கம் பார்க்க

# நாகர்கோவில் மகா வித்தியாலயத்திற்கு புதிய கட்டடம் அமைக்க ஏற்பாடு



(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் மகா வித்தியாலய புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

யுத்த சூனியத்திற்குள் அகப்பட்டு சின்னாபின்னமாகிப் போன நாகர்கோவில் மகா வித்தியாலயத்திற்கு, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் முயற்சியால் புதிய கட்டடம் கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் வித்தியாலய அதிபர் நா.கண்ணதாஸன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் வடமராட்சி அமைப்பாளருமான ஜயாத்துரை சிறிரங்கேஸ்வரன், வடமராட்சி கல்வி வலயப்பணிப்பாளர் சி.நந்தகுமார், மருதங்கேணி கோட்டக்கல்வி அதிகாரி க.பொன்னையா உட்பட பலர் கலந்து கொண்டு அடிக்கல்லை நாட்டினர்.

நாகர்கோவில் மகா வித்தியாலய அபிவிருத்திக்குழுக் கூட்டம் கடந்த மாதம் 18 ஆம் திகதி இடம்பெற்றபோது, சேவா லங்கா நிறுவனத்தின் ஊடாக 80 அடி நீளமுள்ள பாடசாலைக் கட்டடமும் மேலும் 120 அடி நீளமுள்ள ஒரு கட்டடமும் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் ஜயாத்துரை சிறிரங்கேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அதனடிப்படையில் ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், குழுக்களின் பிரதித் தலைவருமான முருகேசு சந்திரகுமாரின் ஏற்பாட்டில் நிக்கொட் நிறுவனத்தினூடாக 38 இலட்சம் ரூபாவில் 100 அடி நீளமுள்ள வகுப்பறைக் கட்டடத்திற்கான அடிக்கல்லே நாட்டப்பட்டுள்ளது.

இக்கட்டடம் ஒரு மாத காலத்திற்குள் கட்டி முடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் நாகர்கோவில் கிராமப் பெரியோர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ள நாகர்கோவில் கரையோரப் பிரதேசத்தில் தபால் நிலையத்தை அமைத்துத் தருமாறு அப்பகுதி கிராம மட்ட அமைப்புக்களால் கோரிக்கை விடப்பட்டுள்ளன. ஆயினும் இதுவரை புலோலி, உபயகதிர்காமம் பகுதியில் செயற்பட்ட நாகர்கோவில் தபால் நிலையம், தற்போது மீள்குடியேற்றம் செய்யப்படாத நாகர்கோவில் நாகதம்பிரான் ஆலயத்தை அண்டிய தெற்குப் பகுதியில் இயங்க ஆரம்பித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# லயன்ஸ் கழகம் தெரிவு

(கோப்பாய்)

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் புதிய அங்கத்தவர் தெரிவு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் ஞானம்ஸ் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றுள்ளது.

கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் முன்னாள் தலைவர் தியாகராசா தலைமையில் நடைபெற்ற இந்தப் புதிய அங்கத்தவர் தெரிவில் பிரதம அதிதியாக லயன்ஸ் கழகத்தின் இக்கேசியஸ் கமிலஸ் கலந்துகொண்டார். 2012, 2013 ஆம் ஆண்டுக்கான புதிய அங்கத்தவராக 7 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (02)

# மின் விளக்குகள் திருட்டு

குறிகாட்டுவான் பேச்சியம்மன் கோவில் பகுதியிலுள்ள பிரதான வீதியில் பொருத்தப்பட்டுள்ள சோலர் மின்விளக்குகள் மற்றும் பற்றரிகள் இனந்தெரியாதோரால் திருடப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திற்கு மின்சார விநியோகம் இல்லாத நிலையில் சோலர் மின்விளக்குகளே பொருத்தப்பட்டது. இதனால் இரவு வேளைகளில் மக்கள் பயணம் செய்யக்கூடியதாக இருந்தது.

தற்போது இந்நடவடிக்கையால் மேற்படி வீதி இருளில் மூழ்கிக் காணப்படுவதுடன் மக்கள் அச்சத்துடன் தாம் பயணம் செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, குறித்த வீதி பிரதான வீதியாகக் காணப்படுவதால் வெளிச்சமின்றி மக்கள் போக்குவரத்தை மேற்கொள்ள சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கின்றனர். (175)

# சைக்கிள் பாதுகாப்பு கட்டண விபரம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உற்சவகால தற்காலிக துவிச்சக்கர வண்டிகள் பாதுகாப்பு நிலையத்தின் கட்டண விபரங்கள் குறித்து யாழ். மாநகர சபையில் முதல்வர் தலைமையில் நேற்றுக் கூடி ஆராய்ந்து கட்டணம் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தின்படி துவிச்சக்கர வண்டி ஒன்றின் பாதுகாப்புக் கட்டணம் ஐந்து ரூபாவாகவும் மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கான பாதுகாப்புக் கட்டணம் பத்து ரூபாவாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட மோட்டார் சைக்கிளில் வருபவர்கள் தலைக்கவசம் அணிந்து வருமிடத்து தலைக்கவசம் இரண்டாக இருந்தாலும் ஐந்து ரூபாவை அறவிட சைக்கிள் பாதுகாப்பு நிலைய உரிமையாளர்களுக்கும் பக்தர்களுக்கும் இடையில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது.

வரும் நாட்களில் இந்த நடைமுறையே பின்பற்றப்படும் என்று யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

இதனை மீறுபவர்களுக்கான துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய அனுமதி இரத்துச் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மைய நல்லூர் திருவிழாவிற்கு வரும் பக்தர்களிடம் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய உரிமையாளர்கள் சிலர் துவிச்சக்கர வண்டிக்கு 10 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு 20 ரூபாவும் அறவிட்டனர். இதற்கு கடந்த ஆண்டு அச்சிடப்பட்டு மாநகர சபையினால் வழங்கப்பட்ட சிட்டைகளில் மாற்றம் செய்து வழங்கியிருக்கின்றனர்.

இவ்வாறு சில தன்னிச்சையான சம்பவங்கள் நடைபெற்றிருப்பதை அடுத்து யாழ். மாநகர சபை குறித்த துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலைய உரிமையாளரை அழைத்து நேற்று கூட்டமொன்றை நடத்தியிருந்தது. இந்தக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. (பா)

# வெள்ளிக்கிழமை மின்வெட்டு

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காகவும் உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்வதற்காகவும் புதிய உயர்அழுத்த மின்மார்க்கங்களை இணைப்பதற்காகவும் 03.08.2012 வெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரையும் மல்லாகம் ஒரு பகுதி, அளவெட்டி, பன்னாலை, வித்தகபுரம், சிறுவிளான் ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.


கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

තල් පොල් නිෂ්පාදන සමුපාකාර(සි ස)සංගමය කිලිනොච්චිය

KILINOCHCHI PALM DEVELOPMENT CO.OPERATIVE SOCIETY LTD.

A9 வீதி கரடிப்போக்கு சந்தி. கிளிநொச்சி. A9 කරඩිපොක්කු හන්දිය කිලිනොච්චිය A9 KaradiphokkuJunction,Kilinochchi


## முக்கிய அறிவித்தல்

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் கடந்த கால அனர்த்தத்தின்போது இறந்திருந்தால் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் யாராவது இதுவரை காலமும் எமது சங்கத்துடன் தொடர்புகொள்ளாது இருப்பின் எதிர்வரும் 20.08.2012 இற்கு முன்னர் தலைவர், கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு எழுத்து மூலம் தங்களது விபரத்தை அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மா.மாயழகு
தலைவர்,
கிளி. ப.தெ.வ.அ.கூ.சங்கம்
கிளிநொச்சி.

தொடர்புகொள்ள:- 0217901723
0772066617

(C/1661)

நல்லூர் பத்தாம் திருவிழாவான நேற்று முருகப் பெருமான் பக்தர்கள் புடைசூழ அழகிய மஞ்சத்தில் பவனிவருவதைக் காணலாம். (137)

# சிறுமி மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பகுதியில் சிறுமி ஒருவர் நஞ்சருந்தி மரணமடைந்துள்ளார்.

நேற்றிரவு 7.30 மணியளவில் குறித்த சிறுமி தனது வீட்டுக்கு வந்த சமயம் அச்சிறுமியின் தாத்தா இவ்வளவு நேரம் எங்கு சென்று வந்துள்ளாய் எனக் கேட்டு பேசியதையடுத்து விரக்தியுற்ற குறித்த சிறுமி நஞ்சருந்தியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த சிறுமியை அயலவர்கள் கிளிநொச்சி மருத்துவமனைக்கு கொண்டுசென்ற சமயம் அவர் அங்கு உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் டி3 பன்னங்கண்டி கிளிநொச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த ஞானரத்தினம் நிரோஜினி (வயது - 15) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவர் தாய் தந்தையை இழந்த நிலையில் தாத்தாவுடன் வசித்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.


## சிறு விளம்பரம்

### வீடு விற்பனைக்கு

மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைதியான சூழலில் சகல வசதிகளுடனும் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0758118526 (R/151)

### புதுக்குடியிருப்பு பிரதேசத்தில்

# பொதுநூலகம் இன்மையால் மாணவர்கள் பாதிப்பு

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தின் மத்தியில் பொதுநூலகம் ஒன்று இல்லாததினால், வாசகர்கள் உட்பட மீள்குடியேறிய பாடசாலை மாணவர்கள் பலரும் நாளாந்தம் சிரமப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

போருக்கு முன்னையகாலங்களில் புதுக்குடியிருப்பு பிரதேச சபையில் இயங்கிய பொது நூலகத்தின் மூலம், பலவாசகர்கள் தம் தேடல்களைப் பூர்த்தி செய்ததோடு, பாடசாலை மாணவர்கள் எனப் பலதரப்பினரும் நூல கத்திலுள்ள பல நூல்களைப் பயன்படுத்தி வந்தனர்.

தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசசபையில் இயங்கி வந்த பொது நூலகமானது கடந்த காலப் போர் அனர்த்தத்தின் விளைவாக நூலகக்கட்டடத்தின் ஓடுகள் சிதிலமடைந்தும், கட்டடங்கள் சேதமடைந்தும் காணப்படுகின்றன.

விசுவமடுப் பிரதேசத்தில் தங்காலிகமாக இயங்கிவந்த புதுக்குடியிருப்பு பிரதேச சபையானது தற்போது அதன் பழைய இடத்தில் புதுப் பொலிவுடன் இயங்குவதால், அதற்கு அருகில் உள்ள சேதமடைந்திருக்கும் பொது நூலகத்தின் ஒரு பகுதியையாவது புனரமைத்து, வாசகர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய புதுக்குடியிருப்பு பிரதேச சபை முன் வர வேண்டுமென சமூக அபிமாணிகள் மற்றும் நலன் விரும்பிகள் ஆகியோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (138)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று...

(நல்லூர்)

நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த திருவிழாவினை முன்னிட்டு ஆலய சூழலில் உள்ள அனைத்து மன்றங்களிலும் தெய்வீக நிகழ்வுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தவகையில் இன்று வெள்ளிக்கிழமை 11ஆம் திருவிழாவினை முன்னிட்டு தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரனையுடன் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் தெய்வீக இசையரங்கில் திருமதி. பங்கயச்செல்வி முகுந்தன் அவர்களின் பாட்டுக் கச்சேரி இடம்பெறவுள்ளது இந் நிகழ்வில் திரு.ஏ. ஜெயராமன் வயலினினையும், திருமதி.கானகோகிலம் ஜெயம் அவர்கள் மிருதங்கத்திதையும், திரு.ரீ.சண்முகசுந்தரம் கெஞ்சிராவினையும் இசைக்க உள்ளனர்.

✡ ✡ ✡ ✡ ✡

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் நடாத்தும் ஆன்மிக சிந்தனையும் சமயச் செற்பொழிவும் தொடரில் சைவப்புலவர் நவராஜ் 'எமது வழிபாடு' என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழி ஆற்ற உள்ளார். தொடர்ந்து சங்கானை நிச்சாமம் ஞானவைரவர் அறநெறிப்பாடசாலை, இணுவில் சிவகாமி அம்மன் அறநெறிப் பாடசாலை, காரைநகர் திக்கரை முருக மூர்த்தி அறநெறிப் பாட சாலை என்பவற்றின் கலை நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

✡ ✡ ✡ ✡ ✡ (42)

நடராஜா பரமேஸ்வரி மணி மண்டபத்தில் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் இடம்பெற்றுவரும் தெய்வீகப் பேருரையில் இன்று வெள்ளிக்கிழமை திருமுறை என்னும் விடயம் பற்றி சைவப் புலவர் கு.சுமுகலிங்கம் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார். (60,42)

## கோலத்திறன் விழா

(யாழ்ப்பாணம்)

அமரர் சிவஸ்ரீ த.ஞானபண்டிதக் குருக்களின் 30ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு வலிமேற்கு முன்பள்ளி ஆசிரியர் சங்கம் சித்தன்கேணி ஞானரத்தினம் ஆன்மிக அமைபபினருடன் இணைந்து வலிமேற்கு முன்பள்ளிச் சிறார்களின் பிரதேசமட்ட கோலத்திறன் விழாவை நடத்தவுள்ளனர்.

இந் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சித்தன்கேணி ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான மண்டபத்தில் வலிமேற்கு சபை நிகழ்சசித்திட்ட உதவியாளர் செல்வி மாதினி சபாரத்தினசர்மா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் திருமதி.கலைவாணி இராமநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

## நல்லூர் முருகனுக்கு இன்று 11ஆம் திருவிழா



### முருகா நீ வரவேண்டும்!

நாளை நமக்கொரு காலம் பிறக்க,
நல்லூர் முருகானகி வரவேண்டும்
நல்ல பின்னையாக நீ வரவேண்டும் - இந்த
நாட்டுக்கும் நீ உழைக்க வேண்டும்,
வேளை அறிந்து நீ வாழ வேண்டும்
வெறுப்பை மட்டும் சம்பாதிக்காதே,
வெல்வதும் தோற்பதும் உன் வாழிவில்
விடிவுக்காக வரவேண்டும் அறி!

-கே.எஸ்.சிவஞானராஜா (கொக்குவில்)-

### சூழலும் அவன் வேல்!

சூரனை அழித்தோன் கரத்தில்
சுழலுமே என்றும் அவன் வேல் - வீரனாய்
வீழாவுன் நடுவில் நின்றே
விரைந்துனைக் காப்பான் காண்!

-அன்பரசி - மயிலட்டி-

### பக்கத்துணையே உந்தன் வேல்!

தென்றல் அசைந்தாட தேன்வண்டு பாட்டிசைக்கும்
மன்றம் வளர் நல்லைப் பதியதனில் - என்றும் முயர்
பக்தி நெறிபெருகிப் பற்றின் வலுதளர எந்தன்
பக்கத்துணை உன்தன் வேல்.

-ரிஷிகர்-




# பஸ் நிலையம் இன்றி சிரமம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மத்திய பேருந்து நிலையம் ஒன்று இல்லாததினால் தம் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகள் மிகவும் அல்லற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.


புதுக்குடியிருப்பு - ஒட்டுசுட்டான் சாலையில் உள்ள மத்திய பேருந்து நிலையப்பகுதியானது இன்னமும் விடுவிக்கப்படாத இடமாக இருப்பதோடு, அப்பகுதியில் உள்ள கட்டடங்கள் அழிந்தும், பற்றைகள் வளர்ந்தும் காணப்படுகின்றன.

தற்போது புதுக்குடியிருப்பு -பரந்தன் வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் மத்தியபேருந்து நிலையத்துக்கென காணியொன்று ஒதுக்கப்பட்டுள்ளதாக 'அறிவித்தல்' ஒன்று தொங்கவிடப்பட்டுள்ள போதிலும் இதுவரையிலும் முன்முயற்சிகளில் எவரும் ஈடுபட்டதாகத் தெரியவர வில்லை.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பயணிகளின் அவலத்தைக் கருத்தில் கொண்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மத்திய பேருந்து நிலையம் அமைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என இப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (138)

## பட்டதாரி பயிலுனர்களுக்கான விளக்கக் கருத்தரங்கு

கடந்த திங்கட்கிழமை தெல்லிப்பளை பிரதேசசெயலக மகாநாட்டு மண்டபத்தில் செயலகத்தைச்சேர்ந்த பட்டதாரி பயிலுனர்களுக்கு கருத்தரங்கு இடம்பெற்றது. இக்கருத்தரங்கில் உளவளத்துறை உத்தியோகத்தர் கலாசார உத்தியோகத்தர், சமூக சேவை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர் பயிலுனர்கள் அலுவலகங்கள் திணைக்களங்களில் பணியாற்றும்போது கடைப்பிடிக்கவேண்டிய ஒழுங்கு விதிமுறைகளை விளக்கி கூறியதுடன், தங்களது பதவிக்குரிய தொழிலின் தன்மையினையும் தெளிவுபடுத்தினர். இக்கருத்தரங்கு தங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததாக பட்டதாரி பயிலுனர்கள் தெரிவித்தனர். (22)



வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகி அம்மன் ஆலய மகா சங்காபிஷேகத்தின் போது...

# தொண்டர் சேவை நல்லூரில் விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழா காலங்களில் வழமை போல் இலங்கை செஞ்சிலுவை சங்க யாழ்.கிளையின் சேவைகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன.

ஆலயத்தின் தெற்கு வீதியில் கூடாரத்தினை அமைத்து சேவையினை ஆற்றிவரும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் ஆலயத்திற்கு வரும் பக்தர்களுக்கு ஏதாவது அசௌகரியங்கள் ஏற்பட்டு காயங்கள் ஏற்பட்டால் அல்லது திடீர் நோய் வாய்ப்பட்டால் அவர்களை அழைத்து செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டியினையும் சேவையில் ஈடுபடுத்தியுள்ளனர்.

அத்துடன் உடன் வைத்திய உதவிகளை வழங்குவதற்காக செஞ்சிலுவை சங்க யாழ்.கிளை தலைவரும் உடன் இருக்கின்றார். மேலும் பல செஞ்சிலுவை தொண்டர்கள் சீருடையில் ஆலய சுற்றுச் சூழல் முழுவதும் தொண்டர் பணிகளில் ஈடுபடவுள்ளதுடன் உற்சவ காலத்தில் முக்கிய தினங்களில் நல்லூர் ஆலய சூழலின் சகல திசைகளிலும் அம்புலன்ஸ் வாகங்களினை நிறுத்தி வைத்து தமது சேவையினை விஸ்தரிக்க உள்ளதாக செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (42)

# வடிகால் மூடி சேதம்; புனரமைக்க கோரிக்கை

(குருநகர்)

யாழ்.அரசினர் வைத்தியசாலை முன்பாக ஆஸ்பத்திரி வீதி ஓரமாக உள்ள நடைபாதையில் வடிகாலின் மேல் மூடி சேதமடைந்துள்ளதால் நடைபாதையால் செல்வோர் அதில் வீழ்ந்து பாதிப்புக்கு உள்ளாகும் அபாயம் தோன்றியுள்ளது.

கடந்த சில தினங்களாக மூடிக்குப் பதிலாக பாதுகாப்பற்ற முறை யில் தடி மற்றும் பலகைகளால் தற்காலிக நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் இரவு நேரங்களில் குழியில் வீழ்ந்து விடும் அபாயம் இருந்து வருவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியால் வெளியேறுவோர் உள்நுழைவோர் என்றில்லாமல் வீதியைப் பயன்படுத்தும் பாதசாரிகள் அனைவரும் மேற்படி அபாய நிலையால் பாதிக்கப்படுவதை சம்மந்தப்பட்டவர்கள் விரைந்து நிறுத்த வேண்டுமென மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (68)

எல்லாருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம் ஒரு சிலரிடம மட்டுமே வாயைக் கொடுக்கலாம். - பொன்மொழி

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, விளம்பரப் பணிமனை: 0212220188
thinamurasu@live.com

## தோற்கடிக்கும் திருப்தியுடன் வாழ்தல்!

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கு இன்னும் ஒரு மாதமே இருக்கிறது. இனவாதம், பிரதேச வாதம், மற்றும் தமிழ்த் தேசியத்தின் சிறப்பாயுதமான துரோகவாதம் ஆகியவற்றுடன் பிரசாரங்கள் களைகட்டியிருக்கின்றன.

இம்முறை அங்கு நான்குமுனைப் போட்டி நிலவுகிறது. கிழக்கில் மீண்டும் மாகாண ஆட்சியைக் கைப்பற்ற வேண்டியதை கௌரவப் பிரச்சினையாக எடுத்துக்கொண்டு அரசாங்கக் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி போட்டியிடுகின்றது. அதில் முன்னாள் முதலமைச்சர் சந்திரகாந்தனின் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி, றிசாட் பதியுதீனின் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ், அதாவுல்லாவின் முஸ்லிம் தேசிய காங்கிரஸ் என்பன இணைந்து போட்டியிடுகின்றன.

வடக்கிற்கு தமிழ் முதலமைச்சர் போல கிழக்கிற்கு அங்கு மற்றைய இரு இனங்களையும் விட மக்கள் தொகையில் பெரும்பான்மையாகவுள்ள முஸ்லிம் முதலமைச்சர் ஒருவரே வரவேண்டும என்கிற முஸ்லிம் மக்களின் ஆதங்கத்தைப் பூர்த்தி செய்துவிடும் திட்டத்துடன் முஸ்லிம் காங்கிரஸ் தனியாக களமிறங்கியுள்ளது.

அரசாங்கக் கட்சி அங்கு ஆட்சியமைப்பதைத் தடுக்க முடிந்தால் அதுவே தனக்கு அரசியல் வெற்றியாக அமையும் என்னும் நோக்கத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் போட்டியிடுகிறது. தனது நீண்டகாலக் கூட்டாளிக் கட்சிகளான முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தமிழரசுக் கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிடவே அக்கட்சி விரும்பியிருந்தது. எதிர்க்கட்சியுடன் ஆட்சியமைத்து சமூகத்திற்கு அபிவிருத்திச் சேவைகள் எதனையும் செய்ய முடியாது என்பதாலும், இதன்மூலம் அமைச்சுப் பதவிகளையும் துறந்துவிட விரும்பாததாலும் முஸ்லிம் காங்கிரஸ் இத்தேர்தலில் ஐ.தே.க.வுடன் கூட்டு வைக்கவில்லை. வெளிப்படையாக சிங்களக் கட்சியுடன் தேர்தல் கூட்டு வைத்துக் கொண்டால், 'தமிழ் தேசியம்' என்கிற தங்களிடமிருக்கும் ஒரேயொரு பிரசார ஆயுதத்தையும் இழந்துவிட நேரும் என்பதால் தமிழரசுக் கட்சிக்கும் அதனுடன் சேரமுடியவில்லை.

தமிழரசுக் கட்சியும் தனித்துப் போட்டியிடுகிறது. அரசாங்க சார்புத் தமிழ்க் கட்சியை வெல்ல விடாமல் தடுக்கவே தாங்கள் போட்டியிடுவதாக அக்கட்சி கூறியுள்ளது. தேர்தல்களின்போது இப்படியான உணர்ச்சிகர ஏமாற்று வார்த்தைகள் வாக்குகளைத் தரும் என்பதை தமிழரசுக்கட்சி நீண்டகாலமாகவே கண்டுவருகிறது.

தமிழ்மக்களின் இத்தனை துன்பங்களுக்கும் ஒரே காரணம் அரசாங்கம். ஆகவே அரசாங்கம்தான் தமிழ்மக்களின் எதிரி. அந்த எதிரியையும் அதனுடன் சேர்ந்து நிற்பவர்களையும் வெல்லவிடாமல் தடுப்பதே தமிழ்மக்கள் திருப்தியடைப் போதுமானது. அதற்குமேல் தமிழ்மக்களுக்கு வேறென்ன வேண்டும் என்ற இலகுவான வாய்பாடு தமிழ்மக்களை உணர்ச்சிவசப்படுத்திவிடப் போதுமாக இருப்பதை அவர்கள் அறிந்து வைத்திருக்கி றார்கள். ஆதலால் தேர்தலுக்குத் தேர்தல் அரசாங்கத்தைத் தோற்கடித்துக் கொண்டிருக்கும் திருப்தி ஒன்றுடனேயே தமிழ்மக்கள் வாழ்ந்து(?) கொண்டிருக்கும்படியாக வைத்திருக்கிறார்கள்.

வாழ்க்கைப் பிரச்சினைகளும், அரசியலுரிமைப் பிரச்சினைகளும் தீர்க்கப்படாமலேயே – தீர்ப்பதற்கான முயற்சிகளையும் சரியான முறையில் செய்யாமலேயே ஒவ்வொரு தேர்தலுக்கும் தமிழ்மக்களின் பலத்தை நிரூபித்துக் காட்டிக் கொண்டிருப்பதிலேயே எங்கள் அரசியல் தந்திரோபாயங்கள் முடிவுக்கு வந்துவிடுவது இதனால்தான்.

குறைந்தபட்சம் தமிழ் முதலமைச்சர் ஒருவரை அங்கு கொணடுவருவதற்கான நடைமுறைத் திட்டங்களையும் அதற்கான இன உறவு நம்பிக்கைகளையும் முன்வைத்துத் தேர்தலில் நின்றிருந்தாலாவது, இவர்கள் கூறிக்கொண்டிருக்கும் வடக்கு கிழக்கு இணைப்பையோ முறையான அதிகாரப்பகிர்வையோ கொண்டுவருவதற்கான முயற்சியிலாவது ஈடுபட்டிருக்கிறார்கள் என்று மக்கள் நம்பியிருக்கலாம்.

எதுவும் இல்லாமல் தங்களுக்கு வாக்களித்து தமிழ்ப்பலத்தை நிரூபியுங்கள் என்றே தொடர்ந்து கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மக்களும் தொடர்ந்து ஏமாந்து கொண்டேயிருப்பார்களா?

- ஆசிரியர்

# கைவிடப்பட்ட வீதிப்புனரமைப்பு;
# புழுதி கிளம்பும் கிரவல் மண்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் சில வீதிகளில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு தற்போது அவையனைத்தும் அரைகுறை நிலையில் கைவிடப்பட்டுள்ளதாக இவ்வீதிகளூடாகப் பயணிப்போர் தங்கள் அதிருப்தியையும் கவலையையும் வெளிப்படுத்தி வருகின்றனர்.

புதுக்குடியிருப்பு-ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில இருந்து கோம்பாவில் -பாண்டியன் சந்தி வரையான வீதியும், உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இருந்து காட்டாமணக்கு விநாயகர் ஆலயம் வரையான வீதியுமே இவ்வாறு கைவிடப்பட்ட நிலையில் பல நாட்களாகக் காட்சியளிக்கின்றன.

மேற்படி குறித்த இரு வீதிகளிலும் கிரவல் மண் நிரவப்பட்டு சல்லிக்கற்கள் பரப்பப்பட்ட நிலையில், கனரக உருளைகள் மூலம் கற்கள் நெரிக்கப்படாமல் இருப்பதால் சாதாரண பொது மக்களில் இருந்து மிதிவண்டி மற்றும் வாகனங்கள் அனைத்தும் பயணம் செய்வதில் மிகுந்த அசௌகரியத்தையும் அவலத்தையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே இவ்வீதிப்புனரமைப்போடு தொடர்புடைய அதிகாரிகள் இவ்வீதியால் பயணம் செய்யும் பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு கூடியவிரைவில் செப்பனிட்டு சீர் படுத்திக் கொடுக்க வேண்டுமென பலரும் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

இதேவேளை பாண்டியன் சந்திவீதியானது ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் கல்விபயிலும் மாணவர்கள், மற்றும் ஆசிரியர்கள் அதிகம் பயன்படுத்துவதென்பது குறிப்பிடத்தது. (138)

# கூட்ட அறிக்கைகளில் இருட்டடிப்பு
# எதிர்க்கட்சித் தலைவர் கண்டனம்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் கூட்ட அறிக்கைகளில் உட்சேர்க்கப்பட வேண்டிய பல விடயங்கள் சேர்க்கப்படாத நிலையில் வேறு சில விடயங்கள் உட்புகுத்தப் படுகின்றது. இதுபோன்ற சிறுபிள் ளைத்தனமான செயற்பாடுகளினால் மக்கள் பிரதேச சபை மீது நம்பிக்கை இழந்துவிடக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளதாகப் பிரதேச சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் முன்னாள் பிரதேச சபைத் தலைவரும் மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான வெ.அன்ரன ஜோன்சன் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், மாதாந்தக் கூட்டங்களில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவிக்கின்ற கருத்துக்கள் மட்டுமின்றி ஆளும் கட்சி உறுப்பினர்களின் கருத்துக்களும் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன. இது ஆளும் கட்சி உறுப்பினர் களுக்கிடையே உட்பூசல் ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தி உள்ளது.

கூட்ட அறிக்கைகளிலேயே மோசடி செய்கின்றவர்கள் நிதி போன்ற வேறுவிடயங்களில் மோசடியில் ஈடுபடதயங்க மாட்டார்கள் எனவே இது போன்ற செயற்பாடுகள் இனிமேலும் தொடரக்கூடாது என அவர் தெரிவித்துள்ளார். (54)

## வவுனியாக் கொள்ளைச் சம்பவம்;
## நால்வர் கைது

(வவுனியா)

வவுனியா மறவன்குளம் பகுதியில் கொள்ளைச்சம்பவத்தில் ஈடுபட்ட சந்தேகத்தின் பேரில நால்வர் வவுனியா மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் நேற்று முன்தினம் மாலை கைது செய்யப்பட்ட இவர்களிடமிருந்து 7740 ரூபா பணம், 15 பவுண் தங்க நகைகள், கைத்தொலைபேசிகள் இரண்டு மற்றும் அதற்கான பண அட்டைகள், கொள்ளைச்சம்பவத்திற்கு பயன்படுத்திய பொருட்களுடன் வீட்டுச் சாவி ஒன்றும் கைப்பற்றப்பட்டன.

நேற்று இப் பொருட்களை வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் பொறுப்பதிகாரி கேமந்த பார்வையிட்டதுடன் அவை ஊடகவியலாளர்களுக்கும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. (160)

# வவுனியா பூவரசங்குளத்தில் மோட்டார் குண்டு மீட்பு

(வவுனியா)

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் இருந்து நேற்று முன்தினம் மாலை வவுனியா பொலிஸ் விசேட பிரிவினரால் 81 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளது.

விசேட பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி உப பரிசோதகர் பராக்கிரம தலைமையிலான குழு வினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பூவரசங்குளத்தில் தேடுதல் நடத்திய போதே பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் இருந்து இம் மோட்டார் குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக விசேட பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட மோட்டார் குண்டுகளை வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேமந்த நேற்று பார்வையிட்டிருந்தார். இதேவேளை மேற்படி மீட்கப்பட்ட குண்டுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் விசேட பொலிஸ் பிரிவினர் தெரிவித்தனர். (160)

# இலங்கை வங்கியின் 73 ஆம் ஆண்டு நிறைவு விழா

(வவுனியா)

இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு நிறைவு விழா இலங்கை வங்கியின் வவுனியா நக்ரக்கிளையினால் நேற்று அனுஸ்டிக்கப்பட்டது.

நகரச வங்கியின் முகாமையாளர் றோய் ஜெயக்குமார் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வுகளில் மதத்தலைவர்களின் ஆசியுரைகள் இடம் பெற்றதுடன் இலங்கை வங்கியில் சேமிப்புக் கணக்குகளை மேற்கோள்ளும் சாரண மாணவர்களுக்கு விசெட பண வைப்புகள் இலங்கை வங்கியினால் வழங்கப்பட்டு சேமிப்பு புத்தகங்களும் வழங்கப்பட்டிருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த முகாமையாளர் றோய் ஜெயக்குமார், இலங்கை வங்கி ஆரம்பிக்கப்ட்ட காலத்தில் இருந்தே முதல் தர வங்கியாகச் செயற்படுவதுடன் கிராமி மக்களின் தேவையுணர்ந்து கிராம மட்டத்தில் வங்கிச் சேவைகளை விஸ்தரிப்பு செய்கின்ற ஒரேயொரு வங்கி எனவும் தெரிவத்திருந்தார். (160)

# வவுனியாவில் விழிப்புலனற்றோருக்கு கணினி பயிற்சி

(வவுனியா)

வட மாகாண விழிப்புலனற்றோருக்கான கணினி பயிற்சி நெறி அவுஸ்ரேலிய அரசாங்கத்தின் நிதியனுசரணையுடன் உலக தொழிலாளர் ஸ்தாபனத்தின் 'லீட்' திட்டத்தின் கீழ் இலங்கை தொழில் தருநர் சங்கத்தினால் வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வதிவிடப்பயிற்சியாக இடம்பெறவுள்ள இப் பயிற்சி நெறிக்கான ஆரம்ப நிகழ்வு நேற்றுக் காலை 9 மணிக்கு வவுனியா மாவட்ட வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவன கேட்போர் கூடத்தில் நிறுவனத்தின் தலைவர் வே. சுப்பிரமணியம் தலைமையில் இடம்பெற்றது.

ஆறு மாத காலத்தை உள்ளடக்கிய இப்பயிற்சி நெறியில் வட மாகாணத்தை சேர்ந்த மூவினத்தவர்களும் பயிற்சியில் பங்கு கொள்வதற்காக இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த பயிற்சி நெறியின் ஏற்பாட்டாளர்கள் இப்பயிற்சி நெறியானது கடந்த வருடமும் 5 விழிப்புலனற்றோருக்கு வழங்கப்பட்டதாகவும் அவர்கள் பயிற்சி நெறியை பூரணமாக நிறைவு செய்துள்ளதாகவும் தெரிவித்தனர். இவ் ஆரம்ப நிகழ்வில் வவுனியா தெற்கு வலய கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விப்பணிப்பாளர் திருமதி நா.மாணிக்கவாசகம், இலங்கை தொழில் தருநர் சங்கத்தின் கணினி பயிற்சி உத்தியோகத்தர் செல்வி. மெனிக் குணரத்தின, லீட் திட்ட ஒருங்கிணைப்பாளர் முகமட் பர்கான், வவுனியா மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் ஸ்ரீநிவாசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (160)



# வன்னிப் பெருநிலம்:

## பதற்றமும் நம்பிக்கையின்மையும்

- ஸர்மிளா ஸெய்யித் கட்டுரையிலிருந்து

மே 2009இல் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதிப்போரின் போதான கொலைக்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் உலகத்தின் கவனத்தைப் பெற்றுள்ளன. ஜெனிவா, மனித உரிமைப் பேரவையானது தமிழீழப் போராட்டத்தின் தோற்றுவாயாக அமைந்த இன முரண்பாடுகளுக்கான, சிறுபான்மைத் தமிழ் மக்களின் அரசியல் அந்தஸ்துக்கான தீர்வைப் பெற்றுத் தருமென்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் எழுந்துள்ளது அல்லது வலிந்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சூழ்நிலையில் வன்னிப் பெருநிலப்பகுதிக்குச் சென்றுவரும் எவருக்குமே எழக்கூடுமானதொரு கேள்வி போரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்குத் தேவை நீதியா நிவாரணமா என்பதே. போரால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுப் பல்வேறுபட்ட இழப்புகளுக்கும் மன நெருக்கடிகளுக்கும் ஆளானவர்கள் வடக்கு மக்கள். பாதிக்கப்பட்டவர்கள், உடனடியாக கிடைக்க வேண்டிய நிவாரணங்கள், அடிப்படை உதவிகள் கூட இன்னும் முழுமையாகக் கிடைக்கப் பெறாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

போரால் ஏற்பட்ட மன வடுக்களிலிருந்து விடுபடாத நிலையாலும் விரக்தி, வெறுப்பு, வறுமை ஆகிய காரணங்களாலும் இப்பகுதிகளில் குற்றச் செயல்கள் அதிகரிக்கின்றன. வவுனியா வைத்தியசாலையில் தினமும் சிகிச்சைக்கு வருகிறவர்களில் 27 சதவீதமானவர்கள் போரால் வலுக்குறைவுக்கு ஆளானவர்கள். 14 சதவீதமானவர்கள் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களும் மனப்பிறழ்வு நிலைக்குத் தள்ளப்பட்டவர்களும்.

குறிப்பாக இப்பகுதிகளில் வாழும் போராளிகளின் நிலைமை கவலையளிப்பதாக உள்ளது. மே 2009இல் சரணடைந்த பல்லாயிரக் கணக்கான போராளிகளில் இது வரை 10,874 பேர் விடுவிக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சரணடைந்த போராளிகளின் எண்ணிக்கை குறித்த தகவல்களில் மாறுபட்டதும் முரண்பாடானதும் சந்தேகமானதுமான நிலையே காணப்படுகிறது. கள நிலவரங்களின் அடிப்படையில் சரணடைந்த போராளிகளின் எண்ணிக்கையை விடவும் சுற்றிவளைப் பின்போது பலவந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்கலாம் என்ற சந்தேகம் எழுகிறது.

புலிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்தவர்கள் என்ற அடிப்படையில் மாற்றுத் தெரிவுக்கு இடமற்ற நிலையில், புலிகளின் அரச உட்கட்டமைப்பில் மாதாந்த, நாளாந்த வருமானத்திற்காகப் பணியாற்றிய சிவிலியன்களும் புலிகளால் பலவந்தமாகப் போராட நிர்ப்பந்திக்கப்பட்ட - பயிற்சியே பெறாத - அப்பாவிகள் பலரும் சுற்றி வளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளின்போது கைதாகியுள்ளனர். இவ்வாறு கைதாகித் தடுப்புக் காவலில் இருந்து விடுதலை பெற்றவர்கள் வடக்கை மட்டும் சேர்ந்தவர்களல்ல. சரணடைந்த போராளிகளில் 65 சதவீதமானவர்கள் கிழக்கைச் சேர்ந்தவர்கள் என நம்பப்படுகிறது.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் பின்னணிகள் மறைக்கப்பட்டுத் தமிழ் இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன என்ற அனுதாப அடிப்படையிலும் அரசியல்சார் இலக்குகளை மையமாகக் கொண்டதுமான வியூகத்துடனுமே நகர்த்தப்படுகின்றன. அபிலாஷைகளினதும் இருப்பின் பேரிலுமாகத் தமிழ் மக்களை உணர்வுபூர்வமாகக் கவரும் முலாம் பூசப்பட்ட அப்பட்டமான அரசியல் கண்ணோட்டங்களுக்கு அப்பால், அறிவுபூர்வமாக மக்களின் சமகாலத் தேவைகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டியிருப்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

புனர்வாழ்வளிப்பு என்னும் பெயரில் தடுப்பு முகாமிலிருந்து விடுதலை செய்யப்படும் போராளிகள் சமூக அங்கீகாரம் இழந்தவர்களாகவும் வாழ்வை நடத்துவதற்கான அடிப்படைக் காரணிக்களை இழந்தவர்களாகவும் விரக்தியின் விளிம்பில் வாழ்கின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் வலுக்குறைந்தவர்களாக இருப்பதும் மற்றுமொரு கோணத்தில் வாழ்வின் சவால்களை அதிகப்படுத்தியுள்ளது.

மிக இறுக்கமான விதிகளையும் கட்டுக்கோப்பான நடைமுறைகளையும் கொண்ட புலி உறுப்பினர்களுக்கே உரிய தனித்துவங்களிலிருந்து விடுபட்டுச் சமூக வாழ்வுக்குள் இணைவது அத்தனை எளிதான காரியமல்ல.

யாரை எதிர்கொள்வதாக இருந்தாலும் பதற்றமான நிலை. நம்பிக்கையற்ற சூழ்நிலை. சமூகத்தில் போராளிகளும் போராளிகள் சமூகத்திலுமாக நம்பிக்கையற்ற சந்தேகத்துடனான நோக்குதல்களால் பாரிய சிக்கல்கள் உருவெடுத்துள்ளன.

"எனக்கென்டா ஒரே வெறுப்பாக் கிடக்குது. எங்கடை சமூகத்தின் விடுதலைக்காகத்தான் போராடினம். இப்ப எங்கடை சமூகமே எங்களை ஏற்குதில்லை. போராளி என்டாலே முகத்தைத் திருப்புற நிலைதான் இருக்குது."

இது பாவாவின் குரல். கொக்கட்டிச் சோலையில் வசிக்கும் 29 வயதான பாவா, 14 வயதுச் சிறுமியாக இருக்கும்போதே புலிகள் இயக்கத்தில் இணைந்துள்ளார்.

"விரும்பித்தான் போராட்டத்தில் என்னைச் சேர்த்துக் கொண்டேன். இப்ப தான் அது எத்தனை முட்டாள்தனம் எண்டு தெரியுது. எதிர்காலம் என்ற ஒரு விடயத்தைப் பற்றிச் சிந்திக்கவே முடியேல்ல. பள்ளிக்கூடம் போற வயசில போராட்டத்தில் இணைந்து இப்ப படிப்பும் இல்லை, தொழிலும் இல்லை, நிம்மதியான வாழ்க்கையும் இல்லை" என மனம் சலிக்கிறார் பாவா.

பாவா மட்டுமல்ல பெண் போராளிகளில் பெரும்பகுதியினர் இந்த நிலைப்பாட்டைத் தான் கொண்டுள்ளனர்.

மட்டக்களப்பு, கிரானைச் சேர்ந்த சுதா, 27 வயதுப் பெண். ஒரு கையைப் போரில் இழந்தவர். புலிகள் இயக்க உறுப்பினராகச் சரணடைந்து விடுதலை பெற்றுள்ளார்.

"பள்ளிக்கூடத்திலிருந்து வந்த என்னைக் கதறக் கதற இழுத்துக் கொண்டு போச்சினம். கொஞ்சமும் விருப்பமில்லாமல் கொண்டையை வெட்டி எங்கடை கோலத்தையே மாத்திச்சினம். இப்ப எங்கடைவாழ்க்கையே தலைகீழாய்ப் புரட்டிப்போட்டினம்.நான் ஓஎல் பரீட்சையில சித்தியடைஞ்சிருந்தனான். படிச்சிருந்தா எப்படியாச்சும் வாழ்ந்திருக்கலாம்."

புலிகள் இயக்க உறுப்பினர்களின் சமூக நிலைப்பாட்டில், அணுகு முறைகளில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. சமூக வாழ்வின் நீரோட்டத்தில் ஓர் அங்கமாக இணைந்து கொள்வதிலுள்ள சவால்களை அவர்கள் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகின்றனர். பெண் உறுப்பினர்கள் விரக்தி காரணமாக மனநிலை பாதிக்கப்படுகின்றனர். தற்கொலைக்கு உந்தப்படுகின்றனர். வறுமை, வாழ்தலுக்கு வழியற்ற நிலையால் விபச்சாரத்திற்கும் தள்ளப்படுகின்றனர். ஆண் உறுப்பினர்கள் போதைப்பொருள் பாவனை, களவு, கொள்ளை நடவடிக்கைகளில் ஈடுபட முற்படுகின்றனர்.

இந்நிலைகூட ஆழமான ஜனநாயக அடிப்படை வாழ்தலுடனான உரிமைகளுடன் தொடர்புபட்ட விடயங்களாகவே கணிக்கப்பட வேண்டும்.

மூன்று தசாப்த போரியல் வரலாற்றில் இலங்கை மக்கள்பல்வேறு கொலைக்களங்களைச் சந்தித்தவர்கள். மனித உரிமை மீறல்களை இதயசுத்தியோடு ஆராய்வதெனில் பாதகமான குற்றச் செயல்களைப் புரிந்ததிலும் மனித இனத்திற்கு எதிரான அனைத்துத் தாத்பரியங்களையும் மீறிக் குற்றம் புரிந்ததிலும் புலிகளின் பங்களிப்பு அளப்பரியது என்ற நிலைப்பாட்டை மறுக்கவே முடியாது.

சிறுவர்களைப் போரிட நிர்ப்பந்தித்துப் புலிகள் இயக்கம் மீறிய மனித உரிமை மீறலானது இன்றும் சமூகத்திலிருந்து அழிக்க முடியாத வடுவாக மாறியுள்ளது. சிறுவர்களின் கல்வி உரிமையை மறுத்தது, பாது காப்பாற்ற சூழலில் உத்தரவாதமற்ற நிலையில் போராடக் கட்டாயப்படுத்தியது போன்ற பல குற்றங்களைப் புலிகள் இயக்கம் மேற்கொண்டது உலகறிந்த உண்மை. இந்தக்குற்றங்களை உலகம் இன்று மறந்திருந்த போதும், அவற்றின் எதிரொலிகளை இன்றும் சமூகத்தில் காணமுடிகிறது.

வடக்கில், மன்னார் பகுதியைச் சேர்ந்த சுகிதா 18 வயதுச் சிறுமி. "2008 போர் உக்கிரமாக நடந்த காலத்தில் வீட்டிலிருந்த என்னைப் பலவந்தமாக இழுத்துப் போயினர். 2 நாள்தான் பயிற்சி தந்திச்சினம். எனக்கென்டால் துப்பாக்கியத் தூக்குவதற்கே பயமாக இருந்தது. அதைவிடத் தூக்க முடியாத அளவு பாரமாகவும் இருந்தது. வீட்டிலிருந்து வந்ததிலிருந்து அழுதுகொண்டே இருந்தேன். அதைக்கூடப் பொருட்படுத்தாமல் என்னைச் சமருக்கு அனுப்பிச்சினம். போனதுதான் காயத்தோடும் ஒற்றைக் காலோடும் தான் தப்பினேன்."

இன்று ஒற்றைக் காலை இழந்து, செயற்கைக் காலில் நடக்கிறாள் 18 வயது சுகிதா.

இப்படி ஒரு சுகிதா அல்ல. நூற்றுக்கணக்கான சுகிதாக்கள் வாழ்கின்றனர். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் போரால் வலுக்குறைவுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை அண்ணளவாக 5,000 ஆக இருக்கலாம். இந்த எண்ணிக்கை அதிகரிக்க இடமுண்டே தவிர, குறைவடையாது. தமிழ் ஈழத்திற்காகப் போராடி எதிர்காலத்தை இழந்து நிற்கும் இவர்களுக்குச் சுபிட்சமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பது மிகப் பிரதான கடமை என்பதை மறந்த நிலையிலேயே தமிழ் அரசியல் தலைவர்கள் செயற்படுகின்றனர்.




முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளின் பின்னணிகள் மறைக்கப்பட்டுத் தமிழ் இனத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்டன என்ற அனுதாப அடிப்படையிலும் அரசியல்சார் இலக்குகளை மையமாகக் கொண்டதுமான வியூகத்துடனுமே நகர்த்தப்படுகின்றன. அபிலாஷைகளினதும் இருப்பின் பேரிலுமாகத் தமிழ் மக்களை உணர்வுபூர்வமாகக் கவரும் முலாம் பூசப்பட்ட அப்பட்டமான அரசியல் கண்ணோட்டங்களுக்கு அப்பால்,அறிவுபூர்வமாக மக்களின் சமகாலத் தேவைகள் பற்றியும் கவனம் செலுத்த வேண்டியிருப்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# ஆளும் கட்சியை வெற்றிகரமாக ஜனாதிபதி வழிநடத்தி வருகின்றார்



(கொழும்பு)

பல கட்சிகள் அங்கம் வகிக்கும் ஆளும் கட்சியை வெற்றிகரமாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழிநடத்தி வருவதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து கொள்ள உள்ளதாக அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியமான ஐந்து உறுப்பினர்களே இவ்வாறு சில தினங்களில் ஆளும கட்சியுடன் இணைந்துகொள்ள உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை மிகவும் பலவீனமடைந்து செல்கின்றது.

கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க சர்வாதிகாரப் போக்கைப் பின்பற்றி வருகின்றார்.

இதனால் கட்சி உறுப்பினர்களுக்கு இடையில் பாரியளவில் அதிருப்தி நிலவி வருகின்றது.

கட்சியின் தலைமை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் செயற்பட்டால் கட்சியை கட்டியெழுப்புவதில் சிக்கல் இருக்காது.

# எதிர்காலத்தில் மக்கள் போராட்டங்களை ஐ.தே.க முன்னெடுக்க முடியாது



(கொழும்பு).

மககள் போராட்டத்தை முன்னெடுக்கிறோம் என்று கூறிக்கொண்டு ரணில் விக்கிரமசிங்கவால் வீதியில் இறங்க முடியாது என்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக இவ்வாறு தெரிவித்துள்ளார். மக்கள் போராட்டத்தினை முன்னெடுக்கிறோம் என்று ரணிலுக்கு வீதியில் இறங்க முடியாது.

ரணில் விக்கிரம சிங்க தற்போது செல்லாத காசு.

மேலும் இந்த நாட்டில் ஜனநாயகத்தை ஏற்படுத்தவோ, மக்கள் போராட்டத்திற்கு தலைமை தாங்கவோ ரணிலுக்கு முடியாது.

இனி மக்கள் போராட்டம் ஜே.வி.பியாலேயே முன் எடுக்க முடியும் என மேலும் அவர் குறிப்பிட்டார்.

# முக்கிய பரிந்துரைகளை அமுல்படுத்தாத தேசிய வேலைத்திட்டம் பயனற்றது



(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக் குழு வெளியிட்டுள்ள பரிந்துரைகளில் காணாமல் போனவர்கள் போன்ற முக்கியமான பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தேசிய வேலைத்திட்டம் தயாரிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லகஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கத்தினால் தேசிய செயற்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளமை குறித்து விபரிகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக் குழுவானது முக்கியமான சில பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.

குறிப்பாக அரசியல் தீர்வு காண்பது சுயாதீன ஆணைக் குழுக்களை நியமிப்பது மற்றும் தகவல் அறியும் உரிமைக்கான சட்டமூலத்தை கொண்டு வருதல் உள்ளிட்டவற்றை குறிப்பிடலாம்.

அத்துடன் காணாமல் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் குறித்தும நல்லிணக்க ஆணைக் குழு பரிந்துரைகளை வெளியிட்டுள்ளது.


இந்நிலையில் இது போன்ற முக்கியமான பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத அரசாங்கம் தேசிய வேலைத்திட்டம் தயாரிப்பதில் எந்தப் பயனும் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

அரசியல் தீர்வு என்பது மிக முக்கிய விடயமாகும். பலவேறு தரப்பினர் அரசியல் தீர்வு குறித்து வலியுறுத்தி வருகின்றனர்.

குறிப்பாக ஜெனிவா மனித உரிமைப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான பிரேரணையிலும் அரசியல் தீர்வு உள்ளி[illegible] நல்லிணக்க ஆணைக் குழுவின் முக்கிய பரிந்துரைகள் குறித்து குறிப்பிடப் பட்டுள்ளது.

எனவே நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கிய பரிந்துரைகளை அமுல்படுத்த அரசாங்கத்திடம் எந்தத் திட்டமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும் என்றார்.

# ரயில் இயந்திரங்களுக்கு சுப்பர் டீசல் பயன்பாடு



(கொழும்பு)

ரயில் இயந்திரங்களுக்கு சுப்பர் டீசல் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என ரயிலவே திணைக்களம் தெரிவித்துளளது.

எவ்வாறாயினும் கோரப்பட்டிருந்த சுப்பர் டீசல் ரயில்வே திணைக்களத்திற்கு கிடைத்துள்ளதாக பொது முகாமையாளர் மேலும் குறிப்பிட்டார்.

தம்மால் தரம் குறைந்தமையே ரயில் இயந்திரங்களின் வேகம் குறைவடைந்தமைக்கான காரணமாக இருக்கலாம் என்பதை உறுதி செய்து கொள்வதற்காக அதன் மாதிரிகள் தொழிநுட்ப நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பழுதடைந்துள்ள 10 ரயில் இயந்திரங்களை பரிசோதனைக்குட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை நிறைவு பெறும் வரை ரயில் இயந்திரங்களுக்கு சுப்பர் டீசலை பயன்படுத்துவதற்குத் தீர்மானிககபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பணிப் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க பிரதிநிதிகளுக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவிற்கும் இடையில் இடம்பெற்ற பேசசுவார்த்தை இணக்கப்பாடுகள் எதுவும் இன்றி நிறைவு பெற்றுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவும் கலந்து கொண்ட இப்பேச்சுவார்த்தை சுமார் மூன்று மணித்தியாலங்கள் நீடித்துள்ளது. தமது பிரச்சினைக்கு தீர்வு காண அரச பிரதிநிதிகள் இப்பேச்சுவார்த்தையில் இணக்கம் தெரிவித்ததாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்க சம்மேளனத்தின் செயலாளர், கலாநிதி டெரன்ஸ் மதுஜித் தெரிவித்தார்.

எனினும் தெளிவான இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள முடியவில்லை எனவும் இன்னும் ஓரிரு நாட்களில் இணக்கப்பாடு ஏற்படும் என நம்புகின்றோம்

மீண்டும் பேச்சுவார்த்தை இடம்பெறவுள்ளதாகவும் அதுவரை தமது தொழிற்சங்க நடவடிக்கை தொடரந்து முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்தியாவிற்கும் சீனாவிற்கும் ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்

(கொழும்பு)

இந்தியாவிற்கும் சீனாவிற்குமான ஏற்றுமதிகளை அதிகரிக்க இலங்கை முயற்சிக்க வேண்டுமென சர்வதேச நாணய நிதியம் ஆலோசனை வழங்கியுள்ளது.

ஏற்றுமதியை அதிகரிக்கவும், பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும் சீனா மற்றும் இந்தியாவிற்கான ஏற்றுமதிகள் வழியமைக்கும் என தெரிவித்துள்ளது.

அந்நிய செலவாணி வீதம், மின்சாரக் கட்டண உயர்வு, கடுமையான தொழிலாளர் சட்டங்கள் என்பனவற்றினால் ஏற்றுமதி வருமானம் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மற்றும் மாலைதீவிற்கான சர்வதேச நாணய நிதிய வதிவிடப் பிரதி நிதி கோஷி மாததாய் தெரிவித்துள்ளார்.

ஏற்றுமதி வர்த்தகம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படாவிட்டால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோகக நேரிடும்.

2011 ஆம் ஆண்டில் மொத்த ஏற்றுமதியில் 4.9 வீதமான அளவே இந்தியாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடு களுக்கான ஏற்றுமதிகளை உயர்த்துவது குறித்து கவனம் செலுத்தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# தேர்தல் தந்திரோபாயங்களை ரணில் அம்பலப்படுத்தினார்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் 1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளரான காமினி திசாநாயக்கவின் தேர்தல் தந்திரோபாயங்கள் அனைத்தையும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்கவிடம் ரணில் விக்ரமசிங்க திருட்டுத்தனமான முறையில் அம்பலப்படுத்தியதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

தேவை ஏற்பட்டால் உரிய ஆதாரங்களுடன் அதனை தம்மால் நிரூபிக்க முடியும் என அமைசசர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாக சுகாதார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலனறுவை சிரிபுர பகுதியில் நடைபெற்ற தேர்தல் கூட்டமொன்றில் அமைச்சர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டதாக அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது நான் அரசியல் மேடையில் வாக்குகளை பெறுவதற்காக கூறும் கருத்துக்கள் அல்ல, காமினி திசாநாயக்க தேர்தலில் போட்டியிட்டபோது, 1994 ஆம் ஆண்டு புலிகளின் குண்டுத் தாக்குதலில் உயிரிழப்பதற்கு முன்னதாக காமினி திஸாநாயக்கவை ஜனாதிபதி தேர்தலில் தோற்கடிக்க வேண்டும் என சந்திரிக்கா குமாரத்துங்கவிடமும் எம்மிடமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நடைபெறும் விடயங்களை காமினி திஸாநாயக்கவின் தேர்தல் நடவடிக்கையில் உள்ள உபாயங்கள் தொடர்பான தகவல்களை கூறியது யார்? இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவராக செயற்படுகின்ற ரணில் விக்கிரமசிங்கவே அதனை கூறினார்.

1994 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் காமினி திஸாநாயக்கவை தோற்கடிப்பதற்கான அனைத்து தகவல்களையும் ரணில்விக்ரமசிங்க எம்மிடம் வழங்கினார். இவவாறு தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எமக்கு கூறினார். அப்படி என்றால் ரணில் விக்ரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களிப்பது ஏற்புடையதா என மக்கள் சிந்திக்க வேணடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தெரிவுக்குழு விடயத்தில் அரசு வெற்றிகொள்ள வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

நல்லிணக்க ஆணைக் குழு விடயத்திலும், நாடாளுமனறத் தெரிவுக்குழு விவகாரத்திலும் அரசாங்கம் வெற்றிகொள்ளாவிடின் அடுத்த மாதம் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனத உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் இலங்கைக்கு சவாலானதாக அமைந்து விடும் என்றும் குறுகிய காலத்திற்குள் சாதிக்க வேண்டிய விடயங்கள் குறித்து அரசு முழுமையான அவதானத்தை செலுத்த வேண்டும் என்று அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.


நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்கவின் தலைமையில் அமைக்கப்பட்ட குழுவின் முக்கிய பணி நாடாளுமனறத் தெரிவுக் குழுவிற்குள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை உள்வாங்குவதாகும்.

இதன்போது நிபந்தனைகளை இருதரப்பும் முன்வைக்கக் கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமைச்சர் திஸ்ஸ விதாரண தொடர்ந்தும் கூறுகையில் இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கான தீர்விற்கு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் முக்கிய விடயமாக அமைந்துள்ளன.

ஏனெனில் இப் பரிந்துரைகளில் அரசியல் தீர்வு ஒன்றிற்கான வழிகாட்டி முன்வைக்கப்பட்டுள்ளது. எனத் தெரிவித்தார்.

# தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்விச் செயற்பாட்டை மேம்படுத்தும் முகமாக மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.குடா நாட்டில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்காக ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் நேற்று முன்தினம் புதன்கிழமை இவற்றை வழங்கிவைத்தார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்புரைக்கமைய தெரிவு செய்யப்பட்ட 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட அலுவலகத்தில் வைத்து அமைப்பாளர் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாக ஒருங்கிணைப்பாளர் வசந்தன் கலந்து கொண்டார்.

## இணையத்தள ஆரம்ப விழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இயங்கிய சரஸ்வதி வித்தியாசாலையின் நூற்றாண்டு மலரான சரஸ்வதி வெளியீட்டு விழாவும் கோப்பாய் இணையத்தளத் தொடக்க நிகழ்வும் அண்மையில் நீர்வேலி திருமுருகன் திருமண மண்டபத்தில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி ஆசிரியர் ச.மார்க்கண்டு, நயப்புரையை கலாநிதி ஆறு.திருமுருகன்,இணையத்தளம் குறித்த அறிமுகவுரையை கலாநிதி கு.திருக்குமரன் ஆகியோர் ஆற்றினர்.

# ரமழான் சிந்தனை



*நீங்கள் பிறையைப் பார்த்து நோன்பு பிடியுங்கள்;*
*பிறையைப் பார்த்தே நோன்பை விடுங்கள்.*
*பிறையைப் பார்ப்பதற்கு தடையாக மேக மூட்டம் -*
*- காணப்பட்டால்*
*மாதத்தின் எண்ணிக்கையை 30 ஆக பூர்த்தி -*
*- செய்து கொள்ளுங்கள்.*
*(அத்திர்மிதி)*

(105)

# சிறுவர் பாதுகாப்பு ஆலோசனைக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அமரர் சிவஸ்ரீ த.ஞானபண்டிதக் குருக்களின் 30 ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய அதிபர் ஆசிரியர்களும் இணைந்து பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களுக்கு சிறுவர் பாதுகாப்பு ஆலோசனை கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளனர்.

இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடத்தப்படும் இக்கருத்தரங்கில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட உளநல இணைப்பாளர் கௌதமன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.கோதை பெண்கள் அபிவிருத்தி அமைச்சின் மாவட்ட இணைப்பாளர் என்.உதயணி ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

# பால கதிர்காம ஆலய ஆடிவேல் உற்சவம்

(நல்லூர்)

நல்லூர் பால கதிர்காமம் ஆடிவேல் உற்சவம் வழமை போல் இம்முறையும் சிறப்பாக நடாத்துவதற்கு ஆலயத்தின் ஆடிவேல் உற்சவ ஏற்பாட்டாளர்கள் மேற்கொண்டுள்ளார்கள்.

இவ் ஆடிவேல் பவணி மேற்படி ஆலய முன்றலில் இருந்து 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வீதி உலா வந்து எதிர்வரும் 5 ஆம் திகதி ஆலயத்தினை மீண்டு வந்து அடையவுள்ளது.

வழமை போல பொய்கால் குதிரை ஆட்டம், பொம்மைகள் என்பவற்றுடன் விசேட நாதஸ்வர கச்சேரிக்கு ஏற்பாடு செய்துள்ளதாக விழா அமைப்பாளர் தெரிவித்தார். (42)

# மீளக்குடியமராத வீடுகளை அசிங்கப்படுத்தும் மக்கள்

(புதுக்குடியிருப்பு)

மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்படாத பகுதிகளில் கணிவெடியகற்றும் பிரிவினர் தங்கள் பணிகளை செய்து முடித்த பின்பு அங்கு உள்நுழையும் சில நபர்கள் அநாகரிகமான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதிக் குடியிருப்பாளர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு மேற்குப் பகுதியில் உள்கைவேலி முதலாம் வட்டாரத்தில் பற்றை மறைவுகள் தற்போது கண்ணிவெடியகற்றும் பிரிவினர் வெட்டித்துப்புரவு செய்துள்ளதால் மேற்படி நபர்கள் தங்கள் இயற்கைக் கடன்களை மக்கள் குடியமராத அங்குள்ள வீடுகளில் மேற்கொள்வதாக அக்குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

மீள்குடியேற்றம் செய்யப்படும் தினத்தை எதிர்பார்த்திருக்கும் இவ்வேளையில் அப்பகுதியில் ஏற்கனவே மீள்குடியேறியவர்களின் இப்படியான அநாகரிகமான செயற்பாடுகள் தங்களுக்கு மேலும் கவலை அளிப்பதாக அக்குடியிருப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (138)

# கிளினிக் சேவைக்கு வைத்தியர் பற்றாக்குறை

(குருநகர்)

நாளாந்தம் இரு வேளைகளில் காலையும், மாலையுமாக நடைபெற்று வருகின்ற வைத்திய சிகிச்சைகளுக்கான வைத்தியர் பற்றாக்குறை யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவுவதாக நோயர்ளர் தெரிவிக்கின்றனர்.

நோயாளிகளைப் பார்வையிடல் மற்றும் மாதம் தோறும் வழங்கும் மருந்துகளை சிறிய கொப்பியில் பதிவு செய்து வழங்கல் வைத்திய அதிகாரிகளின் பற்றாக்குறையால் தாமதம் அடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாக நோயாளர்கள் பாதிக்கப்படுவதாகவும், நோயாளரை அழைத்துக் கொண்டு வருவோர் தங்குவதற்கு போதனா வைத்தியசாலையில் இடம் ஒதுக்கப்படாததால் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் இருதரப்பினரும் தெரிவிக்கின்றனர். (68)

# முரசின் இன்றைய பலன்

(03.08.2012 - வெள்ளிக்கிழமை)

நந்தன வருஷம் ஆடி மாதம் 19 ஆம் திகதி. பிரதமை. சித்தயோகம் முற்பகல் 8.34 வரை. நட்சத்திரம் அவிட்டம். மரணயோகம். முன்னிரவு 10.52 வரை இராகுகாலம் 10.34 - 12.04 வரை. சுபநேரம் 06.04 - 7.34 வரை. எமகண்டம் 3.04 - 4.34 வரை. குளிகன் காலம் 7.34 - 9.04 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வெற்றிகள், உறவினர் ஆதரவு, கல்வியில் மேன்மை, புதிய முயற்சிகளில் கவனம். |
| ரிஷபம் | திடீர் நன்மை, எதிர்பாராத தனவரவு, வழக்குகளில் வெற்றி, வியாபாரத்தில் முன்னேற்றம். |
| மிதுனம் | ஆயாசம், சுபகாரியங்கள் கைகூடும், முயற்சியில நிதானம் வேண்டும், குடும்ப அன்னியோன்யம். |
| கடகம் | சந்திப்புகள், கடன்பட நேரிடும், ஆரோக்கியத்தில் கவனம், கருத்து வேறுபாடு. |
| சிம்மம் | பொன் பொருள் சேரும், புத்திரர் வழியில் சுப செலவு, ஆரோக்கியத்தில் பாதிப்பு, இலாபம். |
| கன்னி | உதவிகள், தொழிலாளரால் பிரச்சினை, அதிகாரிகள் ஒத்துழைப்பு, கடன்கள் தீரும். |
| துலாம் | கடன்கள் தீரும், அனுசரித்துப் போகவும், கஷ்டங்கள் குறையும், பொருளாதாரக் கஷ்டம். |
| விருச்சிகம் | சந்தேகம், உடல் நலக்குறைவு, எதிர்பாராத இடமாற்றம், மனதில் கவலை. |
| தனுசு | அதிகாரிகள் அனுசரணை, திருமண வாய்ப்பு, நண்பர்களால் உதவி, குடும்ப அன்னியோன்யம். |
| மகரம் | நற்கீர்த்தி, பதவியுயர்வும் மற்றமும், கூட்டுத் தொழிலில் மனஸ்தாபம், அதிகாரிகளை அனுசரி. |
| கும்பம் | சுப நிகழ்ச்சி, எதிர்பாராத நற்செய்தி, புகுந்த வீட்டு ஆதரவு, பணிச்சுமை அதிகரிப்பு. |
| மீனம் | அலைச்சல், செலவினங்கள், பிரிந்தவர் ஒன்று சேரலாம், குடும்பத்தில் வாக்குவாதம். |



ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.சிவானந்தராஜா மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களையும் காணலாம்.

# திட்டமிட்டுத் தோற்றதால் தகுதி நீக்கம்



(லண்டன்)


விலகல் சுற்றில் பலமான அணியுடன் மோதுவதை தவிர்ப்பதற்காக, வேண்டுமென்றே சில லீக் ஆட்டங்களில் மோசமாக விளையாடி தோற்றதாக புகார் எழுந்ததை அடுத்து 8 பட்மின்ரன் வீராங்கனைகள் லண்டன் ஒலிம்பிக் போட்டியில் இருந்து அதிரடியாக தகுதிநீக்கம் செய்யப்பட்டனர். தென் கொரியாவை சேர்ந்த 2 ஜோடிகளும், சீனா மற்றும் இந்தோனேசியாவை சேர்ந்த தலா ஒரு ஜோடியும் தொடர்ச்சியாக 2 லீக் ஆட்டத்தில் வென்று கால் இறுதி வாய்ப்பை உறுதி செய்துவிட்டதால், கடைசி லீக் ஆட்டத்தில் வெற்றி பெற வேண்டும் என்ற ஆர்வம் இல்லாமல் ஏனோதானோ என்று விளையாடி வேண்டுமென்றே விட்டுக் கொடுத்தனர். இந்த சம்பவம் ஒலிம்பிக் போட்டியில் பெரும் சர்ச்சையை கிளப்பியது. அடுத்த சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்த சில அணிகள், இதை எதிர்த்து ஒலிம்பிக் போட்டி நிர்வாகக் குழுவிடம் புகார் செய்தன. இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட 8 வீராங்கனைகளும் அதிரடியாக தகுதிநீக்கம் செய்யப்பட்டனர். தங்கள் நாட்டுக்கு பெரும் தலைக்குனிவை ஏற்படுத்தியுள்ள இந்த சம்பவம் குறித்து சீனா, தென் கொரியா, இந்தோனேசிய ஒலிம்பிக் சங்கங்களும் விசாரணை நடத்த உத்தரவிட்டுள்ளன. இதே சர்ச்சை தொடர்பாக, ஜப்பான் அணிக்கு எதிராக இந்தியாவின் ஜுவாலா , அஷ்வினி ஜோடி செய்த புகார் மனுவை ஒலிம்பிக் நிர்வாகம் தள்ளுபடி செய்துள்ளது.

# மன்னிப்புக் கோர சீனா தீர்மானம்

(லண்டன்)

லண்டன் ஒலிம்பிக் விழாவில் பங்கேற்ற சீன பட்மின்ரன் வீரராங்கனைகள் இருவரும் பொதுமன்னிப்பு கோரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அத்துடன் அவர்களின் அணித் தலைவரும் மன்னிப்பு கோரவுள்ளதாக சீன அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது. குழு நிலைப் போட்டிகளில் தோல்வியடைய முயற்சி செய்த குற்றச்சாட்டில் சீன வீராங்கனைகள் இருவர் தகுதி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர். விலகல் சுற்றில் சாதகத்தைப் பெற்றுக்கொள்வதற்கென குழு நிலைப் போட்டிகளில் இந்த வீராங்கனைகள் தோல்வியடைய முயற்சித்ததாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இவ்வாறான குற்றச்சாட்டில் தென்கொரியா மற்றும் இந்தோனேஷிய போட்டியாளர்களும் தகுதிநீக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எலிசபெத்தின் பேர்த்திக்கு வெள்ளிப் பதக்கம்



(லண்டன்)

ஒலிம்பிக் மகளிர் குதிரையேற்றம் 'ஷோ ஜம்பிங்' குழு பிரிவில் இங்கிலாந்து இராணி 2ஆம் எலிசபெத்தின் பேர்த்தி சாரா பிலிப்ஸ் வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தினார்.இந்த போட்டியில் ஜேர்மனி அணி (133.7 புள்ளி) தங்கப் பதக்கமும், இங்கிலாந்து வெள்ளி (138.2), நியூசிலாந்து வெண்கலம் (144.4) வென்றன. குதிரையேற்றத்தில் வீரர், வீராங்கனைகள் செய்யும்தவறுகளுக்கே புள்ளிகள் வழங்கப்படுவதால், குறைவான புள்ளி பெறும் அணியே வெற்றி பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. இளவரசர் வில்லியம், அவரது மனைவி கத்தரீன், சகோதரர் ஹாரி ஆகியோர் கிரீன்விச் பார்க் மைதானத்திற்கு வந்திருந்து சாரா பிலிப்ஸை ஊக்குவித்தது குறிப்பிடத்தக்கது. வெள்ளி வென்ற மகிழ்ச்சியில் ஆர்ப்பரித்த சாரா மைதானத்தை உற்சாகமாக வலம் வந்து இங்கிலாந்து இரசிகர்களின் வாழ்த்தை ஏற்றார்.

# 39 வயதில் தங்கம்



(லண்டன்)

பெண்களுக்கான சைக்கிள் பந்தயப் போட்டியில் அமெரிக்க வீராங்கனை கிறிஸ்டின் ஆம்ஸ்ட்ராங் தங்கம் வென்று புதிய சாதனை படைத்தார்.

உலக சம்பியனான ஜேர்மனியின் ஜூடித் அர்ன்ட்டை முந்திய ஆம்ஸ்ட்ராங் 29 கிலோ மீற்றர் தூரத்தை 37 நிமிடம் 34.82 வினாடிகளில் கடந்து இந்த வெற்றியை பெற்றார்.

வருகிற 11ஆம் திகதி 39 வது பிறந்த நாளை கொண்டாட உள்ள ஆம்ஸ்ட்ராங், ஒலிம்பிக் சைக்கிள் பந்தயத்தில் வயதான சம்பியன் வீராங்கனை என்ற சிறப்பை பெற்றுள்ளார்.

இதற்கு முன்பு கடந்த 1996ஆம் ஆண்டு ஒலிம்பிக் சைக்கிள் பந்தயப் போட்டியில் பிரான்ஸ் வீராங்கனை லாங்கோ சிப்ரெலி 37, தங்கம் வென்றதே இந்த வகையில் சாதனையாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற ஆம்ஸ்ட்ராங் அதன் பிறகு குடும்ப வுாழ்க்கையில் கவனம் செலுத்துவதற்காக ஓய்வு பெற்றார்.

கடந்த 2010-ம் ஆண்டு குழந்தை பெற்ற பிறகு ஓய்வில் இருந்து விடுபட்ட அவர் மீண்டும் களமிறங்கி வெற்றி வாகை சூடியுள்ளார்.

# முஸ்லிம்களுக்காக விதியில் தளர்வு




(லண்டன்)

முஸ்லிம்களுக்காக பளு தூக்குதல் போட்டியில் முதன் முறையாக ஆடை விதி முறைகள் தளர்த்தப்பட்டது. அதன்படி முழு உடலையும் மறைக்கும் உடையணிந்து ஒலிம்பிக் பளு தூக்குதலில் பங்கேற்றார் துனிஷிய வீராங்கனை காதா ஹசீன். பளு தூக்குதலில் பங்கேற்பவர்கள் தங்கள் கைகளையும், கால்களையும் முழுமையாக மறைக்கும் வகையில் உடையணியக் கூடாது என்பது பொதுவான விதி.

இந்நிலையில் கடந்தாண்டில் அமெரிக்கா சார்பில் இந்த விதியை மாற்ற வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது. முஸ்லிம் பெண்களுக்கு ஆதரவாக அமெரிக்கா இந்த கோரிக்கையை முன்வைத்தது. அதன்படி பளு தூக்குதலில் முழு உடை அணிந்து பங்கேற்கலாம் என்று விதி மாற்றப்பட்டது.

இந்நிலையில் ஒலிம்பிக் போட்டியில் முதன் முறையாக முழுமையாக உடலை மறைக்கும் உடையை அணிந்து போட்டியில் பங்கேற்றார் துனிஷிய வீராங்கனை காதா ஹசீன். 19 வயதாகும் அவர் 69 கிலோ எடைப்பிரிவில் பங்கேற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

# காலிறுதியில் பெடரர்



(லண்டன்)

ஒலிம்பிக் ரென்னிஸ் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதியில் விளையாட, முதல் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்) தகுதி பெற்றார். உஸ்பெகிஸ்தானின் டெனிஸ் இஸ்டோமினுடன் நேற்று மோதிய பெடரர் 7-5, 6-3 என்ற நேர் செட்களில் வென்றார். கால் இறுதியில் அவர் செர்பியாவின் ஜன்கோ திப்சாரெவிச் அல்லது அமெரிக்காவின் ஜான் ஐஸ்னருடன் மோ[illegible]வுள்ளார்.

# தொடரை வென்றது மகிழ்ச்சி

(கொழும்பு)

இலங்கை அணிக்கெதிரான ஒரு நாள் தொடரை வென்றது மகிழ்ச்சி அளிக்கின்றது என இந்திய அணித் தலைவர் டோனி தெரிவித்தார்.

பிரேமதாஸ விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நான்காவது ஒரு நாள் போட்டியில் இந்திய அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்று ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியது. இது குறித்து கருத்துத் தெரிவித்த டோனி, ஹோலி மிகச் சிறப்பாக ஆடி வருகின்றார்.' அவரின் துடுப்பாட்டத்தில் நிறைய முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது. ஒரு அனுபவ வீரர் போன்று களத்தில் நிலைத்து நின்று ஆடுகின்றமை இந்திய அணிக்குப் பெரும் பலம். இத் தொடரை வெல்வதற்கு அவரின் துடுப்பாட்டமும் முக்கிய காரணம். ஒவ்வொரு போட்டியையும் வெல்ல வேண்டும் என்பதே எமது நோக்கம் என்றார்.

# ஒலிம்பிக் போட்டியைக் காண லண்டன் செல்லும் புட்டின்



(லண்டன்)

ஒலிம்பிக் விழாவில் ஜூடோ போட்டிகளைப் பார்வையிடுவதற்காக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் லண்டனுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

ஏழு ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாக விளாடிமிர் புட்டின் லண்டனுக்கு விஜயம் செய்யவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜூடோவில் கறுப்பு பட்டியை பெற்றுள்ள விளாடிமிர் புட்டின் சென் பீற்றர்ஸ்பேர்க்கின் முன்னாள் ஜூடோ சாம்பியன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த விஜயத்தின் போது பிரித்தானிய பிரதமர் டேவிட் கெமரனுடன் சிரிய நெருக்கடி குறித்து புட்டின் கலந்துரையாடுவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிரியாவில் இடம்பெறும் வன்முறைகளில் பல்லாயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி பஷார் அல் அசாத்திற்கு ரஷ்யா தொடர்ந்தும் ஆதரவு வழங்கி வருகின்றது.

# அவுஸ்ரேலிய வீரர் கைது

(லண்டன்)

லண்டனில் ஒலிம்பிக் போட்டிகள் அமைதியாக நடைபெற்று வருகின்றன. நேற்று முன்தினம் போட்டிகளில் ஆண்களுக்கான துடுப்பு போட்டிகளும் நடைபெற்றன. 8 பேர் கொண்ட அணி பிரிவில் அவுஸ்ரேலிய அணி 6ஆவது இடம் பிடித்தது.

போட்டி முடிந்த சில மணி நேரங்களுக்கு பின் இந்த அணியை சேர்ந்த ஜோஷ் பூத் என்ற 21 வயது வீரர் லண்டன் கடை வீதிக்கு சென்றுள்ளார். அப்போது மது தொடர்பான ஏதோ தகராறு ஏற்பட்டதாக கூறப்படுகிறது. இதில் அங்குள்ள ஒரு கடையில் சிறிதளவு சேதம் ஏற்பட்டுள்ளதாக புகார் எழுந்தது.

இதனை தொடர்ந்து அவரை லண்டன் பொலிசார் கைது செய்தனர். பின்பு அவுஸ்ரேலிய தலைமை அதிகாரியான நிக் கிரீன் காவல் நிலையம் வந்தபோது ஜோஷ் மயக்கம் அடைந்தார் என்றும் பின்பு அவர் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என நிக் கூறியுள்ளார்.

# இலங்கை கிரிக்கெட் சபையின் விசேட ஆலோசகர்



(கொழும்பு)

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் முன்னாள் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூண் லோகார்ட் – இலங்கைக் கிரிக்கெட் சபையால் பணிக்கமர்த்தப்பட்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபைக்கான விசேட ஆலோசகராகவே அவர் இலங்கைக் கிரிக்கெட் சபையுடன் இணைந்துள்ளார்.

இலங்கையின் உள்நாட்டுக் கிரிக்கெட் கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்புவதற்காகவும், கிரிக்கெட் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்குமாக இலங்கைக் கிரிக்கெட் சபையின் விசேட ஆலோசகராக அவர் பணிபுரிவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அறிக்கையொன்றை வெளியிட்ட இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் உபாலி தர்மதாச, ஹரூண் லோகர்ட்டிற்கு பரந்தளவு அறிவும், அனுபவமும் காணப்படுவதாகவும், அவர் இலங்கைக் கிரிக்கெட் சபையோடு இணைந்து செயற்பட சம்மதம் தெரிவித்தமை குறித்துத் தாங்கள் மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்தார்.

ஒரு கிரிக்கெட் சபையாக தாங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், சவால்களையும் சிறப்பாக எதிர்கொள்ளவும், இலங்கையில் கிரிக்கெட் நிர்வாகத்தை மேம்படுத்தவும், உள்ளூர் கிரிக்கெட் கட்டமைப்பை மீளக் கட்டியெழுப்பவும் ஹரூண் லோகார்ட்டின் ஆலோசனைகள் தங்களுக்கு உதவியாக அமையும் என நம்புவதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நான்காண்டுகள் பதவி வகித்த ஹரூண் லோகார்ட் கடந்த ஜூன் மாதம் அப்பதவியிலிருந்து நீங்கியிருந்தார். இதற்கு முன்னர் தென்னாபிரிக்கக் கிரிக்கெட் சபையுடன் பிரதம தேர்வாளராகவும், பின்னர் 2003ஆம் ஆண்டு உலகக்கிண்ண ஏற்பாட்டுக் குழுவில் நிதி மற்றும் ஏற்பாட்டுக் குழுவிலும் அவர் பதவி வகித்திருந்தார்.

# மூன்றாவது முறையாக இறுதிப் போட்டியில் சென்றலைட்ஸ்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் மாவட்ட அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்திற்கு தொடர்ந்து மூன்றாவது முறையாக யாழ். சென்றலைட்ஸ் அணி தகுதி பெற்றுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.


இதில் ஜொனியன்ஸ் அணியை எதிர்த்து யாழ். சென்றலைட்ஸ் அணி மோதியது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென்றலைட்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய ஜொனியன்ஸ் அணி சென்றலைட்ஸ் அணித் தலைவர் பிரசாத்தின் பந்து வீச்சை எதிர்கொள்ளத் திணறியதுடன் விக்கெட்டுக்களையும் விரைவாகப் பறிகொடுத்தது. இருப்பினும் லாவேந்திராவின் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அணியைக் கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் ஜொனியன்ஸ் அணி 48.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 213 ஓட்டங்களைப் பெற்றது. இதில் லாவேந்திரா 62, குமணன் 38, காண்டீபன் 31 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரசாத் 9 ஓவர்கள் பந்து வீசி 29 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், ஜொனோஜன் 8 ஓவர்கள் பந்து வீசி 20 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும், மதுசன் 8 ஓவர்கள் பந்து வீசி 37 ஓட்டங்களைக் கொடுத்து இரண்டு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 214 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்றலைட்ஸ் அணி கனிஷ்டனின் நிதானமான ஆட்டத்தில் மூலம் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் சென்றலைட்ஸ் அணி 47.2 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து மூன்று விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் கனிஷ்டன் ஆட்டமிழக்காது 43 ஓட்டங்களையும், ஜெயம் யன்சன் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 42 ஓட்டங்களையும், ஜெனோஜன் 38 ஓட்டங்களையும், ஜெரிக் துசாந் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் காண்டீபன் மூன்று, விதுசன், லாவேந்திரா தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் யாழ். சென்றலைட்ஸ் அணி யாழ். மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டிக்கு மூன்றாவது முறையாகத் தகுதிபெற்றுள்ளது.

கடந்த 2010ஆம் ஆண்டு சம்பியனான அதேவேளை, 2011ஆம் ஆண்டு இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது. இவ் இறுதி ஆட்டம் போட்டி ஏற்பாட்டாளர்கள் நடாத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## செந்தில்மாறன், சுரேஜினி சதுரங்கத்தில் முதலிடம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரச அதிபர்வெற்றிக் கிண்ணத்திற்கான செஸ் போட்டியின் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்துறையைச் சேர்ந்த ஆர். செந்தில்மாறன் முதலாம் இடத்தினையும், பெண்கள் பிரிவில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எஸ். சுரேஜினி முதலாம் இடத்தினையும் பெற்றுள்ளனர்.

கடந்த 26 மற்றும் 27ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில். யாழ். மாவட்ட செயலக நலன்புரிச் சங்கம் நடத்திய செஸ் போட்டியில் 3 சுற்றுக்களிலும் ஆண், பெண் இரு பிரிவுகளிலும் 10 பேர் வெற்றி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ். மத்திய கல்லூரியை வென்றது சென். ஜோன்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் கிரிக்கெட் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் லீக் ஆட்டமொன்று கடந்த 21ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் ஆடிய யாழ். மத்திய கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜது 40, அலன்ராஜ் 64 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் லிஜோனி இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு 169 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி 39.3 ஓவர்கள நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிளெமிங் 30, நிலோஜன் 50, தேவபிரசாத் 47 ஓட்டங்களைப் பெற்று அணியின் வெற்றிக்குத் துணைபுரிந்தனர்.

இதேவேளை, சென். ஜோன்ஸ் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு அணி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எஸ்.பி.)

## கிண்ணம் வென்றது முழுமதி



(கோப்பாய்)

மென்பந்து கிரிக்கெட் போட்டித் தொடரில் ஞானகலா அணியை வீழ்த்தி முழுமதி அணி கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

கோப்பாய் தெற்கு முழுமதி விளையாட்டுக்கழகம் நடாத்திய 10 பந்துப் பரிமாற்ற மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த 29ஆம் திகதி மாலை 3.00 மணியக்கு முழுமதி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

ஒன்பது பேர் கொண்ட இந்த இறுதிப் போட்டியில் கோப்பாய் முழுமதி . அணியும், மயிலங்காடு ஞானகலா அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானகலா அணி 7.2 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. துடுப்பாட்டத்தில் எந்தவொரு வீரரும் சிறப்பாக ஆடவில்லை. பந்து வீச்சில் நா.கனிஸ்ரன், ம.நிருசன், இ.சிவகுமார், சி.கிரிதாஸ் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு 30 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய முழுமதி அணி 8.5 பந்துப் பரிமாற்றங்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 32 ஓட்டங்களைப் பெற்று வெற்றியை தனாக்கிக் கொண்டது.

இந்தப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஞானகலா அணியைச் சேர்ந்த் சனந்தனும், தொடர் நாயகனாக முழுமதி அணியின் நா.கனிஸ்ரனும் தெரிவுசெய்யப்பட்டனர். (சி)



**வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடப்பாண்டு நடைபெற்ற மாகாண மட்ட சதுரங்கப் போட்டியில் 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட பெண்களுக்கான குழுப் போட்டியில் இரண்டாமிடத்தைப் பிடித்துக் கொண்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியினரை யும், வடமாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் கே. சத்தியவலன், ஆசிரியர், பயிற்றுநர் ஆகியோரைக் காணலாம்.**

## கொக்குவில் இந்து தோல்வி

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரி அணிக்கெதிரான ஒரு நாள் போட்டியில் சென். ஜோன்ஸ் கல்லூரி 'ஏ' அணி பெரு வெற்றிபெற்றது. இலங்கை பாடசாலை கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான ஒரு நாள் கிரிக்கெட் போட்டித் தொடரின் லீக் ஆட்டமொன்று கடந்த 19ஆம் திகதி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி 50 ஓவர்கள் நிறைவில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 262 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜெனி பிளெமிங் 83, நிலோஷன் 21, சிவதர்சன் 24, லியோனி ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சன்ஜீவன், டிலுக்ஷன் தலா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 263 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 22.5 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று படுதோல்வியடைந்தது. இதில் சஜீவன் 32 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில் சிலுமில் 12 ஓட்டங்களைப் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களையும், நிரோஜன் மூன்று விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். (எஸ்.பி.)

# சந்திரன் தோன்றியது எப்படி?

சூரியன் தோன்றியது எப்படி? தெரியும். பூமி தோன்றியது எப்படி? தெரியும். சந்திரன் தோன்றியது எப்படி? விஞ்ஞானிகள் இக்கேள்விக்கு விடை காண இன்னமும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக ஒரு கொள்கை கூறப்பட்டுள்ளது.

சந்திரன் தோன்றியது எப்படி என்ற கேள்வியை வேறு விதமாகவும் கேட்க முடியும். பூமிக்கும் சந்திரனுக்கும் என்ன உறவு? சந்திரன் பூமியின் சகோதரனா? அல்லது பூமியின் புதல்வனா? அல்லது பூமியின் அடிமையா?

பூமியும் சந்திரனும் ஒரே சமயத்தில் சூரியனிலிருந்து தோன்றியிருந்தால் பூமிக்கு சந்திரன் சகோதரன். அப்படியில்லை என்பது ஏற்கனவே நிரூபணமாகி விட்டது.

பூமியிலிருந்து சந்திரன் தோன்றியிருந்தால் சந்திரன் பூமியின் புதல்வன். அப்படியும் இல்லை என்பதை விஞ்ஞான பூர்வமான ஆய்வுகள் காட்டுகின்றன. மூன்றாவதாக எங்கோ இருந்து வந்து பூமியின் ஈர்ப்புப் பிடியில் சிக்கிக் கொண்டது என்றால் சந்திரன் பூமியின் அடிமை என்று சொல்லலாம். அப்படியும் இல்லை என்றாகி விட்டது.


நான்காவதாக ஒரு கொள்கை உண்டு. செவ்வாய் கிரகம் அளவில் ஒரு கிரகம் பூமியின் மீது மோதியிருக்க வேண்டும். அந்த மோதலின் விளைவாக ஏற்பட்ட சிதறல்களே ஒன்று திரண்டு சந்திரனாக உருவெடுத்திருக்க வேண்டும். பூமியின் மீது மெதுவாக வந்து மோதியதாகக் கருதப்படும் கிரகத்துக்கு விஞ்ஞானிகள் தைய்யா(Theia) என்று பெயர் வைத்தனர். இந்த கொள்கைக்குத் தான் இப்போது ஓரளவுக்கு ஆதரவு உள்ளது.

ஆனாலும் பூமியில் வந்து மோதிய அக்கிரகம் எவ்வளவு பெரியதாக இருந்திருக்கும் என்பது குறித்தும் அது எந்த வேகத்தில் மோதியிருக்கும் என்பது பற்றியும் விஞ்ஞானிகளிடையே கருத்து வேற்றுமை இருந்து வருகிறது.

இப்போது சுவிஸ்சர்லாந்தில் பெர்ன் நகரில் உள்ள Center For Space and Habitability என்னும் அமைப்பைச் சேர்ந்த அன்ட்ரியாஸ் ரைபர் என்ற விஞ்ஞானியும் அவரது சகாக்களும் சந்திரன் எப்படி உருவாகியிருக் கலாம் என்பது பற்றி கம்பியூட்டரில் பாவனையாக வெவ்வேறு நிலைமைகளை (simulations) தோற்றுவித்து ஆராய்ந்தனர்.

இவற்றை வைத்து அவர்கள் பூமியில் மோதிய கிரகம் தைய்யாவை விடப் பெரிதாக இருந்திருக்க வேண்டும் என்றும் தவிர, அது மிக வேகத்தில் வந்து மோதியிருக்க வேண்டும் என்றும் கூறுகிறார்கள். இவ்விதம் மோதிய கிரகம் குறைவான பொருளை மட்டும் இழந்து தன் வழியே சென்றிருக்க வேண்டும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

இந்த மோதலின் விளைவாக மிகுந்த வெப்பம் கொண்ட ஒரு வட்டு தோன்றி அதுவே பின்னர் உருண்டு திரண்டு சந்திரனாக உருவெடுத்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். மோதலின் போது தூக்கியெறியப்பட்ட பொருளில் பெரும் பகுதி பூமியிலிருந்து பிய்த்துக் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறுகின்றனர்.




இப்படியான கொள்கைக்கு அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் தேவை. அதாவது பூமியின் மேற்புறம் பற்றியும் பூமியில் உள்ள தனிமங்கள் அவற்றின் ஐசடோப்கள் பற்றியும் நமக்கு நன்கு தெரியும். இந்த விஷயங்களில் பூமிக்கும் சந்திரனுக்கும் சில ஒற்றுமைகளும் சில வேற்றுமைகளும் உள்ளன. சந்திரனிலிருந்து 1969 முதல் 1972 வரை ஆறு தடவைகளில் அமெரிக்க விண்வெளி வீரர்கள் கொண்டுவந்த கற்கள், மண் ஆகியவை விரிவாக ஆராயப்பட்டு சந்திரன் பற்றி மேலும் தகவல்கள் அறியப்பட்டு வருகின்றன.

எந்த விதமான முறையில் மோதல் ஏற்பட்டிருந்தால் பூமி, சந்திரன் இடையே இப்படி ஒற்றுமைகளும் அத்துடன் வேற்றுமைகளும் இருக்கும் என்று கண்டறிவதில் தான் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர். இறுதியில் ஏற்கத்தக்க விடை கிடைக்க சந்திரனின் கற்கள் மேலும் விரிவாக ஆராயப்பட்டு அதே நேரத்தில் கம்பியூட்டரில் பாவனையாக மேலும் பல மோதல்களை நடத்த வேண்டியிருக்கும் என்று கருதப்படுகிறது. இதன் மூலம் சந்திரன் எப்படித் தோன்றியது என்பதற்கு விடை காணலாம் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

- என்.ராமதுரை -




# சாதனைக்கு ஒரு புத்தகம்

தினமும் உலகில் பலர் சாதனை புரிகிறார்கள். அந்த சாதனைகள் வெறும் வார்த்தைகளுடன் மட்டும் நின்றுபோகாமல் உலகம் உள்ளவரை நிலைத்திருக்கும்படி ஒரு புத்தகத்தை உருவாக்க நினைத்தார்கள். அந்த புத்தகம் தான் கின்னஸ். அயர்லாந்து நாட்டை சேர்ந்த சர்க்யூபீவர் என்பவர் தான் கின்னசை உருவாக்கினார். சாதனைகள் அத்தனையும் கொண்ட இந்த புத்தகத்தை தன் ஒருவனால் எழுத முடியாது என்று உணர்ந்தார். அதற்காக லண்டன் சென்று அங்குள்ள அரசாங்கத்திற்கு புள்ளி விவரங்களை சேகரிக்கும் நோரிஸ் மைக் வைகட்டர் என்ற இரட்டையர்களை சந்தித்து தனது யோசனையை தெரிவித்தார். அவர்களும் முழுமனதுடன் ஒத்துழைப்பு தர முன்வந்தார்கள். 1955 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி முதல் கின்னஸ் புத்தகம் வெளிவந்தது. 198 பக்கங்களை கொண்டதாக அது இருந்தது. அன்றிலிருந்து வருடந்தோறும் வெளிவருகிறது. இடையில் 1957, மற்றும் 1959 ஆகிய இரண்டு ஆண்டுகள் மட்டும் வரவில்லை. அதற்கு என்ன காரணம் என்றும் தெரியவில்லை. முன்பெல்லாம் ஆங்கிலத்தில் மட்டுமே வெளிவந்தது. இப்போது 40 க்கும் மேற்பட்ட மொழிகளில் "கின்னஸ் புக் ஒப் வேள்ட் ரெகோர்ட்ஸ்" வந்து கொண்டிருக்கிறது.



கோ - பட நாயகி கார்த்திகா நடிக்க வருவதற்கு முன்னால், அவரது அம்மா ராதாவுடன் எடுத்த ஒரு படம்.



"மற்றவர்கள் ஒளிப்பதிவில் படு சுமாராகத் தெரியும் நீங்கள் பாலுமகேந்திரா ஒளிப்பதிவில் பேரழகியாகத் தோன்றுகிறீர்களே... எப்படி இது?

ஷோபாவிடம் ஒரு நிருபர் கேட்ட இந்த கேள்விக்கு ஷோபா சொல்லியிருந்த பதில்:

"மற்றவர்கள் என்னைக் கமெரா, லைட்ஸ் மற்றும் பிலிம் கொண்டு ஒளிப்பதிவு செய்கிறார்கள். எங்க அங்கிள் என்னை கமெரா, லைட்ஸ், பிலிம் இந்த மூன்றோடும் நிறைய அன்பையும், நிறையப் பாசத்தையும் குழைத்து ஒளிப்பதிவு செய்கிறார். அவர் ஒளிப்பதிவில் நான் பேரழகியாக ஜொலிப்பதற்கு இதுதான் காரணம்...

# இளம் முதல்வரின் இளம் மனைவி

1952 இலிருந்து இன்று வரை இந்திய நாடாளுமன்றத்திற்குப் போட்டியின்றித் தெரிவானோர் வரிசையில் 30வது நபர் டிம்பிள் யாதவ். உத்தரப் பிரதேசத்தில், கன்னோஜ் தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் இரண்டாவது பெண் உறுப்பினர். முன்னதாக, தற்போதைய டெல்லி முதல்வர் ஷீலா தீக்ஷித் 1984இல் இதே தொகுதியிலிருந்து எம்.பி. ஆனார்.

"நான் எனது பதவியை பெண்களின் உரிமைகளுக்குப் போராடுவதற்காகப் பயன்படுத்துவேன்" என்று கூறும் 35 வயதான டிம்பிள், உத்தரப்பிரதேச முதலமைச்சர் அகிலேஷ் யாதவ்வின் மனைவி. சமாஜ்வாதிக் கட்சித் தலைவர் முலாயம்சிங் யாதவ்வின் மருமகள்.

சிட்னி பல்கலைக்கழகப் பட்டதாரியான அகிலேஷ், டிம்பிளை காதலித்துக் கல்யாணம் செய்துகொண்ட சில மாதங்களில் கன்னோஜ் தொகுதியில் போட்டியிட்டு எம்பி ஆனார். 2009ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் கன்னோஜ், ஃபிரோஸாபாத் என்ற இரு தொகுதிகளிலும் வேட்பாளராக நின்று, இரு தொகுதிகளிலுமே பிரம்மாண்ட வெற்றியைப் பெற்றார் அகிலேஷ். பின்னர் அவர் ஃபிரோஸாபாத் தொகுதி எம்பி பதவியிலிருந்து ராஜினாமா செய்ய, இடைத்தேர்தலில் சமாஜ்வாதி வேட்பாளராக நிறுத்தப்பட்டவர் மனைவி டிம்பிள் யாதவ். தன் கணவரின் தொகுதி என்பதால் மிகச்சுலபமாக வென்று விடலாம் என்றே அவர் கணக்குப் போட்டார். ஆனால் யதார்த்தம் வேறு மாதிரி இருந்தது. போட்டிக்கு காங்கிரஸ் வேட்பாளராக நிறுத்தப்பட்டவர் பிரபல நடிகர் ராஜ் பாபர். போதாக்குறைக்கு, ராகுல் காந்தியே காங்கிரஸ் சார்பாக நேரடியாக பிரசாரத்தில் கலந்துகொண்டார். விளைவு, ராஜ் பாபர் சுலபமாக வெற்றிபெற்றார். தன்னுடைய முதல் அரசியல் பிரவேசத்திலேயே மிக மோசமானதொரு தோல்வியைச் சந்தித்தார் டிம்பிள் யாதவ்.




பின் நடந்த 2012 சட்டமன்றத் தேர்தல்களின் போது சமாஜ்வாதி கட்சி பிரம்மாண்ட வெற்றி பெற்று, அகிலேஷ் யாதவ் தன் 39வது வயதில் உத்தரப் பிரதேசத்தின் இளம் முதல்வரானார். இதனால் அவர் கன்னோஜ் தொகுதி எம்பி பதவியை ராஜினாமா செய்ய நேர்ந்தது. அங்கு நடந்த இடைத்தேர்தலிலேயே இப்போது டிம்பிள் யாதவ் எம்.பியாகி இருக்கிறார்.

"வழக்கமான பார்வையில் ஒரு கதாநாயகிக்கான தே
அல்ல சரிதா. குள்ளமான, குண்டான, கரிய பெண். ந
வெளிப்படுத்துவதற்கு ஒத்துவராத சின்ன உதடுகளும்
கொண்ட வட்டப் "பம்ளிமாஸ்" முகம்.
ஆனால் சரிதா அளவுக்கு எந்த நடிகையும் துல்லியமா
வழியாக கதாபாத்திரத்தின் அகத்தைக் காட்சிப்படுத்தி
பிற நடிகைகள் எல்லோரும் செயற்கையான நளினங்க
செயற்கையான உணர்ச்சிகரத்தையும் வெளிப்படுத்துப
இருந்தார்கள். சரிதாவின் அசைவுகளும் சிரிப்பும் பேச்
உருவாக்கிய ஆச்சரியத்தை இன்று சொல்லிப் புரியவ



அழியாத கோலங்கள் அ
வயதிருக்கும், என் அத்தை
வீட்ல தங்கி இருந்த நாட்க
வந்த முதல் பெண். மெல்லி
உடல் பற்றிய ஆர்வம், பா
இளம் மீசை ரோமங்கள் ஆ
இருக்கு..."

# குத்துச்சண்டையில் கியூபா முன்னணிக்கு வந்தது எப்படி?



நீண்ட காலமாகப் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்து வரும் ஒரு ஏழை நாடான கியூபா உலக குத்துச் சண்டை சம்பியன் போட்டிகளிலும் ஒலிம்பிக் போட்டிகளிலும் வல்லரசுகளை அநாயசமாக விஞ்சி தங்கப் பதக்கங்களை தட்டிச் செல்வது விளையாட்டு உலகின் ஆச்சரியங்களில் ஒன்று. 1972 முதல் ஒலிம்பிக் போட்டிகளில் கியூபா வென்றுள்ள தங்கப்பதக்கங்கள் மட்டும் 27.

அடிப்படைத் தேவைகளைச் சமாளிப்பதே பெரும் சவாலாக இருக்கும்போது, விளையாட்டுகளுக்குப் பணத்தை வாரியிறைக்க முடியாது. உலக சம்பியன் போட்டிகளில் வெல்லும் வீரர்கள்கூட பயிற்சிக்கு சைக்கிளில்தான் செல்கிறார்கள். பழைய, நைந்துபோன விளையாட்டு ஆடைகள்தான் அணிகிறார்கள்.

1959இல் ஃபிடல் காஸ்ட்ரோ தலைமையிலான புரட்சிப் படைகள் ஆட்சியைப் பிடிக்கும் வரையில் அங்கு தொழில்முறை விளையாட்டுகள் சிறிய அளவில் நடைபெற்று வந்தாலும், குறிப்பிடத்தக்க சாதனைகள் நிகழ்ந்ததில்லை. கியூப விளையாட்டுத் துறையில் அமெரிக்காவின் ஆதிக்கம்தான் நிலவிவந்தது. முதலீடு செய்யும் அளவுக்குப் பணம் அவர்களிடம்தான் இருந்தது. 1961இல் தொழில்முறையிலான விளையாட்டுப் போட்டிகள் தடை செய்யப்பட்டன. கியூப விளையாட்டுக்களை கியூப அரசாங்கமே ஏற்று நடத்தத் தொடங்கியது.

உதாரணத்துக்கு ஒரு மாணவனுக்குக் குத்துச்சண்டையில் ஆர்வம் இருந்தால், 12 வயது முதல் குறிப்பிட்ட விளையாட்டுக்கென்றே இருக்கும் சிறப்பு பாடசாலைகளில் அவர்களுக்கு முறையான பயிற்சி ஆரம்பமாகிறது. திறமை வளர்க்கப்பட்டு, மேம்படுத்தப்படுகிறது. அதன் பின்னர் போட்டித்திறனை அதிகரிக்கும் இளைஞர் விளையாட்டுத் திட்டங்கள் மூலம் அவர்களுக்கு பயிற்சிகள் தொடர்கின்றன. குத்துச் சண்டையைப் பொறுத்தவரையில், தலைமைப் பயிற்சியாளரின் நேரடி கண்காணிப்பில் பயிற்சியளிக்கப்படுகிறது. சிறந்த திறமைசாலிகள் கண்டறியப்பட்டு, சர்வதேசப் போட்டிகளில் வெல்லும் அளவுக்கு பயிற்சியும், கடுமையான உடற்பயிற்சிகளும் அளிக்கப்படும். ஆர்வமுள்ள ஒரு மாணவர் இங்கே உலகத்தரமான ஒரு குத்துச்சண்டை வீரராக உருப்பெறுகிறார்.

கியூபாவில் 25 வீதத்துக்கு மேற்பட்டோர் விளையாட்டில் ஈடுபடுகிறார்கள். 1.2 கோடி மக்கள் தொகை கொண்ட கியூபா ஒலிம்பிக் போட்டிகளில் பெற்றுள்ள மொத்த பதக்கங்கள் 194 (67 தங்கம், 64 வெள்ளி, 63 வெண்கலம்).

சர்வதேச அளவில் சாதனைகள் புரியும் கியூப வீரர்கள் அந்நாட்டு அரசாங்கத்திடம் இருந்து பெறும் பரிசு என்ன தெரியுமா? அங்கீகாரம் மட்டும்தான். இது போக, வெளிநாடுகளுக்குப் பயணம் செய்வதற்கு வாய்ப்புகளும், ஓய்வு பெற்ற பின்னர் ஒரு பழைய காரும் அளிக்கப்படும்.

போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்ற பின்னர், விளையாட்டுத்துறை நிர்வாகிகளாகவோ பயிற்சியாளர்களாகவோ தங்கள் அறிவையும் அனுபவத்தையும் அடுத்த தலைமுறை விளையாட்டு வீரர்களுக்காக அளிக்கிறார்கள். தொடரும் கியூபாவின் வெற்றிக்கு முக்கிய காரணமே இவர்கள்தான். 185 பயிற்சி நிலையங்களில் 494 முதல்தர பயிற்சியாளர்கள் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

கியூபாவில் குத்துச்சண்டை வீரர்கள் ஒன்றாகவே வளர்கிறார்கள், ஒன்றாகவே பயிற்சி பெறுகிறார்கள். ஒலிம்பிக்கில் தங்கம் வெல்வதைவிட கியூபாவின் தேசிய, பிராந்திய சம்பியன் பட்டங்களை வெல்வதுதான் கடினம்.

கியூபாவின் 99,000 விளையாட்டு வீரர்களில் 19,000 பேர் குத்துச்சண்டை வீரர்கள். அவர்களில் ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளும் தகுதி பெற்றவர்கள் 81 பேர். ஆனாலும் குத்துச்சண்டை அணியில் இடம்பெற்றுள்ளவர்கள் 12 பேர் மட்டுமே. இது வரை ஒலிம்பிக் குத்துச்சண்டை போட்டிகளில் மட்டும் 27 தங்கம், 13 வெள்ளி, 7 வெண்கலம் வென்றுள்ளது கியூபா.

கடைசியாக 2008இல் பெய்ஜிங்கில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் கியூப வீரர்கள் தங்கள் ஆதிக்கத்தை தற்காலிகமாக இழந்தனர். பெய்ஜிங்கில் இழந்த பெருமையை லண்டனில் மீட்டெடுக்க முடியாதா என்ன?

"விளையாட்டின் மீதுள்ள காதல் தவிர, வேறு எதற்காகவும் இவர்கள் விளையாடுவதில்லை. கியூபாவைப் போல பொதிந்துள்ள திறமைகளை அர்ப்பணிப்புடன் கண்டறிந்து, வளர்த்து, சிறந்த திறமைசாலிகளை வளர்த்துக் கொண்டாடும் இன்னொரு நாடு இல்லவே இல்லை. நீங்கள் எவ்வளவு ஏழையாக இருந்தாலும் சரி, கியூபாவின் ஆழ்கடலில் மறைந்திருக்கும் பத்து வயது சிறுவனாக இருந்தாலும் சரி, உங்கள் திறமை கண்டுபிடிக்கப்படும், நீங்கள் வெற்றி பெறுவீர்கள், விரைவிலேயே தேசிய நாயகனாக மக்களால் கொண்டாடப்படுவீர்கள்." கியூபாவுக்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து எழுதிய எஸ். எல்.பிரைஸ் என்பவரின் கூற்று இது.

"பணம் இருந்தால் எதை வேண்டுமானாலும் வாங்கலாம் என்னும் உலகில் வாழும் உங்களால் இதைப் புரிந்து கொள்ள இயலாது" என்கிறார் ஃபிடல் காஸ்ட்ரோ.

- இம்மானுவேல் பிரபு -

# மறைந்து போன மனனம்

- எஸ். ரவீந்திரன் -



உங்க போன் நம்பரை கொஞ்சம் சொல்லுங்க... என்று நண்பரோ, தெரிந்தவர்களோ கேட்டால் உடனடியாக நம்மால் கூற முடியுமா?

ஏறக்குறைய சந்தேகம்தான். ஒரு நிமிஷம் இருங்க என்றவாறு தனது செல்போனைத் திறந்து அதில் எண்ணைப் பார்த்துக் கூறக்கூடிய அளவுக்கு நிலைமை மாறிவிட்டது. இது கைத்தொலைபேசிக்கு மட்டுமல்ல, அனைத்து விஷயங்களிலும் இன்று இதுதான் யதார்த்தம். அந்த அளவுக்கு மனதையும், நேரத்தையும் சுருக்கிவிட்டோம். இப்படியே போனால் இந்தச் சோம்பல் நம்மை எங்கு கொண்டு போய் விடுமோ என்று தெரியவில்லை.

இன்று பல்கிப் பெருகிவிட்ட இணையதளங்கள், நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் மக்களை படுசோம்பேறியாக்கி விட்டதுடன் மெல்ல மெல்ல தங்களையே மாற்றிவிட்டது.

அண்மையில் வெளியான ஓர் ஆய்வில், நமக்கெல்லாம் மறதி நோய் அதிகம் ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரியவந்துள்ளது. அது எந்த அளவுக்கு உண்மையோ தெரியவில்லை. "அம்னீஷியா" என்றழைக்கப்படும் இந்த மறதி நம்மை ரொம்பவே குழப்பிவிடுகிறது.

வீட்டிலிருந்து கதவைப் பூட்டி விட்டு வெளியே வந்தபிறகு நம்மை நாமே நம்பமுடியாத நிலை ஏற்படுகிறது. மின்விசிறியை நிறுத்தினோமோ, வீட்டுக்கு பூட்டு போட்டோமா இப்படி பல்வேறு சந்தேகங்கள். அப்படி ஓர் அவசர உலகில் இயந்திரகதியாக நாம் வாழ்க்கையை ஓட்டுகிறோம்.

குழந்தைகளை எடுத்துக் கொண்டால் அப்படித்தான் படிக்கிறார்கள். ஆசிரியை அடிப்பாரோ, திட்டுவாரோ என்ற பயம்தான் அது. முன்பெல்லாம் புத்தகத்தைக் கரைத்துக் குடிப்பவர்கள் பலர். இன்றோ நிலைமை மாறிவிட்டது.

திருக்குறள், நாலடியார், வெண்பா, கவிதைகள் இவற்றையெல்லாம் யாராவது வாசிக்கிறார்களா அல்லது அதற்கான முயற்சியிலாவது இறங்குகின்றனரா என்றால் இல்லை.

இராமாயணம், மகாபாரதம், இதிகாசங்களையும், தேவாரம், திருவாசகம் போன்றவற்றையும் அக்குவேறு, ஆணிவேராக பிரித்தவர்கள் பலர். இன்றும் ஒருசிலர் இருக்கிறார்கள். அவர்களைப்போல நாம் குழந்தைகளை வளர்க்கிறோமோ? இல்லவே இல்லை.

காரணம் தொலைக்காட்சி, கணினி போன்றவற்றில் இல்லாத விஷயங்களா? இதைப் போய் யாராவது விழுந்து விழுந்து வாசிப்பார்களா? உங்களுக்கு என்ன தகவல் வேண்டும், இணைய தளத்தைத் தட்டி எழுப்பினாலே போதும். மனிதன் செய்ய வேண்டியதை இவை தாராளமாகச் செய்கின்றன.

அதனால் பிரதமர் யார், அமைச்சர்கள் யார் என்றெல்லாம் மண்டை காய வேண்டாம். இதற்காக மனனம் செய்ய வேண்டாம். அதுபோன்ற விஷயங்களை மனதில் வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற கருத்து நிலவுகிறது.

ஆங்கிலத் தேர்வு எழுத வேண்டுமானால் கட்டுரைகளை அர்த்தம் புரியாமலேயே மனனம் செய்து படித்தவர்கள் பலர். இப்போது அவ்வாறு யாராவது சிரமப்பட்டு வாசிக்கிறார்களா என்பது சந்தேகமே.

நாளுக்குநாள் முட்டாளாகி வருகிறோம் என்பதுதான் உண்மை. கிருபானந்த வாரியார், கிவாஜ போன்ற சொற்பொழிவாளர்கள் மணிக்கணக்கில் பாடல்களைப் பாடி அருமையாக விளக்கங்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டே இருக்கலாம். பல பேச்சாளர்கள், இன்னமும் அடிபிறழாமல் கவிதைகள், செய்யுள்கள், பாடல்களை பாடுவதைக் கேட்க முடிகிறது.

காரணம் சிறுவயதில் அவர்கள் விவரம் தெரியா-மலேயே முதலில் அனைத்துப் பாடல்களையும் மனனம் செய்ததுதான். நாளாக நாளாக அதன் அர்த்தங்களை உணர்ந்து பின்னர் கற்றுக் கரை தேர்ந்தனர் என்றுதான் கூறவேண்டும்.

இப்போதும்கூட சிலர் வீடுகளில் அதிகாலையிலேயே சுலோகங்கள், தேவாரம், திருவாசகம், திருப்பாவை, திருவெம்பாவை வாசிக்கின்றனர். குழந்தைகளுக்கும் சொல்லித் தருகின்றனர்.

ஆக, மனனம் செய்வது என்பது தவறானதன்று. அதை மறந்து, புரிந்துகொண்டு படிக்கிறேன் பேர்வழி என்று பலர் எதுவுமே புரியாதவர்களாக நடமாடிக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் முக்கால்வாசி பேர் தேசியகீதத்தையும், கடவுள் வாழ்த்தையும் முழுமையாக வாசிக்க முடியாதவர்களாகத்தான் இருக்கின்றனர். இப்படிப்பட்ட சூழலில் மனப்பாடக் கல்வியை ஒழிக்க வேண்டும். செயல்வழிக் கல்வி, கற்றலின் இனிமை என்றெல்லாம் பல பெயர்களில் மாணவர்களுக்கு கற்பிக்க வேண்டும் என்ற கூக்குரல் எழுகிறது.

ஒரு நல்ல புத்தகத்தை வாசிக்கும்போது அது மனதில் பதியுமாறு இருக்க வேண்டும்.

இன்று வாசிப்பே மறந்து கேட்பது, பார்ப்பது மட்டுமே நடைமுறையில் உள்ளது.

ஆகவே மறதி நோய் வருவது என்று கூறுவதில் எந்த தவறும் இல்லை. நாமாகவே ஞாபகசக்தியை வளர்க்க பயிற்சி மேற்கொள்ள வேண்டும். நவீன விஞ்ஞான சாதனங்கள் வந்து விட்டதால் இதெல்லாம் தேவையில்லை என்று கருத வேண்டாம்.

ஒரு வாதத்துக்காகக் கூறுவதென்றால், கணினி, தொலைக்காட்சி இவற்றுக்கான மின்சக்தி இல்லாத போதும். கைப்பேசி செயலிழக்கும் போதும் என்ன செய்ய முடியும்? திடீரென ஒரு தொலைபேசி எண்ணைத் தேட முடியுமா அல்லது எத்தனை பேர்தான் கையில் குறிப்பேடுகளுடன் அலைகிறார்கள். நேர்முகத் தேர்வுக்கு போகும்போது அத்தனை விஷயங்களையும் மனப்பாடமாக வைத்துக் கொண்டு சென்றதெல்லாம் ஒரு காலம்.

இப்போது அது தேவையில்லை. ஒரு கணினிக்கு முன்னே அமரவைத்து தேர்வே நடத்தி விடுகிறார்கள். அதுவும் இல்லாவிட்டால் கொள்குறித் தேர்வு முறையில் விடைகளைத் தேர்வு செய்யவேண்டும்.

உண்மையில் குருட்டு அதிர்ஷ்டத்தில் தொலைக்காட்சிகளில் வரும் கோடீஸ்வரன் நிகழ்ச்சி போலத்தான் கதை இருக்கிறது. இதனால் மறதி என்பதை நாமே ஏற்படுத்திக் கொள்ள வேண்டாம்.

நிறைய வாசித்து, பொருள் அறிந்து மனதில் நிறுத்துவதே சாலச் சிறந்தது. எந்த விஷயத்தையும் திரும்பத் திரும்ப மனதில் நினைவுப்படுத்திக் கொள்ளும் பயிற்சியை மேற்கொண்டால் எந்த கவலையும்படத் தேவையில்லை.

...நாயகிக்கான தோற்றம் கொண்டவர் ..., கரிய பெண். நடிப்பை ... சின்ன உதடுகளும் சின்ன மூக்கும் ...ம்.
...கையும் துல்லியமான முகபாவங்கள் ...தக் காட்சிப்படுத்தியதில்லை. ...கையான நளினங்களையும், ...ம் வெளிப்படுத்துபவர்களாக ...ளும் சிரிப்பும் பேச்சும், அது ... சொல்லிப் புரியவைப்பது கடினம்...

- ஜெயமோகன்



...த கோலங்கள் அப்படிப் பட்ட கவிதை. "அப்ப எனக்கு பதினைந்து ...கும், என் அத்தை பெண் எங்க கிராமத்து வீட்டுக்கு வந்திருந்தா. அவள் எங்க ...ங்கி இருந்த நாட்கள் ரொம்ப விஷேசமானது, அவள் தான் என் வாழ்க்கைல ...தல் பெண். மெல்லிசா ஒரு குறுகுறுப்பு, ஈர்ப்பு, தயக்கம், வெட்கம், அவள் ...ற்றிய ஆர்வம், பாலுணர்வு பத்தின யோசனைகள் எல்லாம் சேர்த்து முதிராத ...சை ரோமங்கள் ஆக முகத்தில் எட்டிப் பார்த்த ஞாபகம் இன்னும் அப்படியே

- பாலு மகேந்திரா

வாரம் ஒரு பாடசாலை

# யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை




## எமது பாடசாலை பற்றி...

தற்போது நவீன கலாசார மோகங்களாய் பிள்ளைகள் திசைமாறி வளமான எதிர்காலத்தை சீரழிக்காமல் எதிர்கால சிற்பிகளாக மிளிர இப்பாடசாலை சமூகத்துடன் இணைத்து செயற்படுகின்றது. பாடசாலை அபிவிருத்திச் சங்க செயற்பாடுகள் பாடசாலை மேம்பாட்டு அபிவிருத்திக்குழுச் செயற்பாடுகள் மாணவர்களது ஆரோக்கியத்தை மேம்படுத்தும் செயற்திட்டம் போன்றவற்றில் பெற்றோர்கள் பாடசாலையுடன் இணைந்து செயற்படுகின்றனர்.


எமது பாடசாலை 4 ஆண் ஆசிரியர்களையும், 24 பெண் ஆசிரியர்களையும் உள்ளடக்கிய 28 ஆசிரியர்களைக் கொண்டது. இவர்களில் 27 பேர் நிரந்தர ஆசிரியர்களையும் ஒரு ஆசிரியர் தற்காலிக இணைப்புப் பெற்றவராகவும் கடமையாற்று கிறார். தற்பொழுது தரம் 1-5 வரை 180 மாணவர்களும் 6 -11 வரை 386 மாணவர்களும் கல்வி பயில்கின்றனர்.

மாணவர்கள் கல்வியில் மட்டுமல்லாமல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் குடும்ப கோட்ட, வலய மாவட்ட, மாகாண மட்டங்களில் தங்கள் திறமைகளை வெறிப்படுத்தி வருகின்றனர்.

எமக்கு நூலக வசதி இல்லாத போதிலும் எமது வசதிக்கேற்ப நூலக அறையினூடாக நூல்களை வாசிக்கக்கூடிய வகையில் செயற்படுத்தி மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்கவும் தகவல்களை தேடித் திரட்டல் மூலம் அறிவைப் பெறவும் வழி செய்துள்ளோம்.



மாகாணமட்ட மேசைப்பந்தாட்ட அ...

இப்பாடசாலையில் கல்வி கற்கும் விசேட தேவையுள்ள மாணவரை இனங்கண்டு அவர்களுக்குரிய பரிகாரக் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு ஆசிரியர்களின் உதவியுடன் சிறப்பாகசெயற்பட்டு எழுத்தறிவூட்டல், கல்வி வழங்க வழிசெய்துள்ளோம். இவ்வருடம் மெல்லக் கற்கும் மாணவர்களை இவ்வொரு ஆசிரியர்களும் தத்தெடுத்து எழுத்தறிவூட்டி வருகின்றமைக்கு எனது பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவிக்கின்றேன். அத்துடன் விசேட கல்வி மாணவர்கள் கோட்ட, வலய மட்ட போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. இவ்வருடம் வலயமட்டத்தில் பல மாணவர்கள் பங்குபற்றி பிரிசில்கள் பெற்றதுடன் மாணவன் ப.பவிசன் தங்கப்பதக்கத்தையும் பெற்றுக்கொண்டமை பாராட்டத்தக்கது.


ம.தயானி (பாவோதலில் மாகாண மட்டத்தில் முதலாமிடம் பெற்றவர்)

நூலக வசதி இல்லாத போதிலும் எமது
வசதிக்கேற்ப நூலக அறையினூ டாக நூல்
களை வாசிக்கக்கூடிய வகையில் செயற்படுத்தி
மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்க்
கவும் தகவல்களை தேடித் திரட்டல் மூலம்
அறிவைப் பெறவும் வழி செய்துள்ளோம்.

### அதிபர்
### திருமதி. ந. சந்திரகுமார்



யாழ்.ஆனைக்கோட்டை றோ.க.த.க பாடசாலையில் 2008 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை தனது ஆர்ப்பணிப்பான அளப்பரிய சேவையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி ந. சந்திரகுமார் அவர்கள் இப்பாடசாலையில் கடமையேற்ற நாளிலிருந்து இன்று வரைக்கும் மிக அர்ப்பணிப்புடனும், ஆர்வத்துடனும் முயற்சியுடனும் சேவையாற்றி வருகின்றார். இவருடைய காலத்திலே எமது பாடசாலை வரலாற்றிலே படைக்க முடியாத சாதனைகள் பல படைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம், தேசியம் வரை மாணவர்கள் விளையாட்டு நிகழ்வுகளிலும், தமிழ்த்தின போட்டிகளிலும் பங்கு பற்றுகின்றனர்.

சென்றவருடம் க.பொ.த. (சா/த) முன்னைய காலத்திலும் பாடசாலை படைத்திருக்க முடியாத பெறுபேறுகளை மாணவர்கள் பெற்றிருந்தனர். 7A, B, C, 5A, 2B

கிராமப் புற பாடசாலையாக இருந்தாலும் ஆசிரியர், மாணவர்களை தன்னகத்தே ஈர்த்து தனது சிறந்த ஆளுமையால் பாடசாலையின் வள்ர்ச்சிக்கு சேவையாற்றிக் கொண்டிருக்கும் அதிபரை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் மனமார வாழ்த்தி நிற்கின்றோம்.



யாழ். ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலையின் ஆசிரியர்குழாம்...

# பதியப்படாத வீதிகள் புனரமைப்பு மாநகரசபைக் கூட்டத்தில் விவாதம்

(கிரு-சிகரம்)

யாழ். மாநகர சபையில் நிதிப பற்றாக்குறை மாநகர சபைக்குட்பட்ட பகுதி வீதிகள் புனரமைப்பதில் சிக்கல் தோன்றியுள்ளதாக கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற மாதாந்த கூட்டத்திலேயே யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்தார்.

இந்தக்கூற்றை எதிர்த்த எதிர்கட்சி உறுப்பினர் அபபுக்குட்டி பரஞ்சோதி தற்போது மேற்கொள்ளப்பட்ட வீதிககுத் தார் ஊற்றப்படும் திட்டத்தின் கீழ் சோமசுந்தரம் வீதியில் உள்ள ஐந்து குடும்பங்கள் உள்ள தனியார் வீதிக்கு தார் ஊற்றப்பட்டு செப்பனிடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் தற்போது யாழ். மாநகரசபையில் நிதிப்பற்றாக்குறை ஆயின் யாழ். மாநகரசபையில் பதியப்படாத வீதிக்கு எவ்வாறு தார் ஊற்றப்பட்டது எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த யாழ் மாநகர முதல்வர் மக்கள் சந்திப்பின்போது இந்த வீதிக்கு தார் ஊற்றித் தருமாறு தன்னிடம் எழுத்து மூலம் கேட்கப்பட்டதாவும் தான் அந்த எழுத்து மூலத்தினை மதிப்பீட்டுக்குழுவுக்கு அனுப்பியதாகவும் அவர்களும் மதிப்பிட்டு மாதாந்த கூட்டத்தில் 23 உறுப்பினர்களினதும் அனுமதியுடனேயே இந்த வீதிக்கு தார் ஊற்றப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு பதிலளித்த எதிர் கட்சி உறுப்பினர் அப்புக்குட்டி பரஞ்சோதி இவ்வாறு முதல்வர் கூறுவது தவறு எனவும் தங்களை இந்த மாநகரசபை மோசடி செய்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு மாநகர முதல்வர் மோசடியை தாம் செய்ய வில்லை எனவும் 23 உறுப்பினர்களும் சேர்ந்தே செய்துள்ளதாகவும் குறிப்பிட்டதுடன் இந்த தவறினை 23 பேரும் சேர்ந்தே ஏற்கவேண்டும எனவும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து மதிப்பீட்டு குழுவில் உள்ளவர்களுக்கு இங்குள்ள வீதிகளில் எவை மாநகர சபைக்குரிய வீதிகள் என்பது தெரியாது உள்ளதாக குறிப்பிட்டார்.

இதனை ஏற்றுக்கொண்ட எதிர்கட்சி உறுப்பினர்கள் இனி வருங்காலத்தில் உரிய அதிகாரிகள் வீதி அபிவிருத்தியில் ஈடுபடும் போது சரியான விதத்தில் ஆராய்ந்து செயறபட வேண்டும் எனவும் குறிப்பிட்டு மாநகரசபையின் செயற்பாடுகளில் தவறு ஏற்படாது செயற்படவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# கொட்டகை வசதியின்றி புதுக்குடியிருப்பு இந்து மயானம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு - இரணைப்பாலை வீதியில் அமைந்துள்ள இந்து பொது மயானத்திற்கு தம் உறவினரின் சடலங்களைத் தகனம் செய்ய வருபவர்கள், தங்குவதற்கு இடவசதியின்றி வீதியிலும் மர நிழல்களிலும் தங்கி நிற்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அத்தோடு, மழைகாலங்களில் உடல்களைத் தகனம் செய்வதில் பொதுமக்கள் சிரமப்படுவதோடு, உடல்களை வைத்து எரிப்பதற்கான கொட்டகை வசதியுமின்றி அம் மயானம் காட்சியளிக்கின்றது.

எனவே இவ்விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய விரைவில் கவனம் எடுத்து, பொதுமக்கள் தங்கிநிற்பதற்கான இருப்பிடத்தையும், உடலைத் தகனம் செய்வதற்கான கொட்டகையையும் அமைத்துத் தரும்படி புதுக்குடியிருப்பு பிரதேச வாழ் இந்து மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். (138)

# மூன்றாம் தவணை ஆரம்பத்தில் மாணவர்களுக்கு பசும்பால் விநியோகம்

(பருத்தித்துறை)

வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலை மாணவர்களுக்கும் பசும்பால் விநியோகம் 3 ஆம் தவணை ஆரம்பிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக அதிபர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருடன் கலந்துரையாடி தீர்மானம் நிறைவேற்றிய பின்னர் வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

பால் வழங்குவது தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தங்களை மேற்கொண்டு உரியவாறு அறிக்கைகளை சமர்ப்பித்திருப்பின் அவற்றை சம்பவ திரட்டுப் புத்தகத்தில் குறிப்பிட வேண்டும்.

மேலும் 2 வாரங்களில் ஒழுங்குமுறைக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். சகல கோட்டக் கல்வி அதிகாரிகளும் தத்தம் பிரிவுகளில் உள்ள பாடசாலைகளில் பால் வழங்குவதை உறுதி செய்து வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்க வேண்டும்.

வலயக்கல்விப் பணிப்பாளர் இது தொடர்பான அறிக்கையை வடமாகாண கல்விப் பணிப்பாளருக்கு வழங்க வேண்டும். இதன் பின்னரே பிரதம கணக்காளரினால் நிதி விடுவிப்பு மேற்கொள்ளப்படும் என மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தெரிவித்துள்ளார். (109)

## இலங்கை வங்கிக் கிளையின் பிறந்த நாள் நிகழ்வு

(ஆனைக்கோட்டை)

இலங்கை வங்கியின் 73 ஆவது ஆண்டு பிறந்த நாள் நிகழ்வு மானிப்பாய் இலங்கை வங்கி கிளையில் நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது.

வங்கிக் கிளை முகாமையாளர் ஜி.சகாதேவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வாடிக்கையாளர்களுக்கு புதிய கணக்குகள் திறக்கப்பட்டு பரிசில்களும் வழங்கப்பட்டன.

# மது போதையில் வாக்குவாதம்

(கிரு-சிகரம்)

மது அருந்திய நிலையில் நல்லூர் ஆலயச்சூழலில் விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கும் மாநகரசபை உத்தியோகத்தர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை சுவாமி வெளி வீதி உலாமுடிந்ததும் ஆலயச்சூழலில் அலங்காரப் பொருட்களின் விற்பனையில் ஈடுபட்ட ஒருவருக்கும் மாநகரசபை ஊழியர்களுக்கும் இடையில் வாய்த்தகராறு ஏற்பட்டுள்ளது.

இத்தகராறுக்கு முக்கிய காரணமாக அமைந்தது ஆலயச் சூழலில் உள்ள கடைகளில் ஒலி பெருககி பாவணை தடைசெய்யப்பட்டுள்ள போது குறித்த அந்த ஒருவர் மட்டும் ஒலிபெருக்கியை பாவித்து விற்னையில் ஈடுபட்டுள்ளார்.

மாநகர சபை உறுப்பினர்கள் ஒலிபெருக்கி பாவனை சூழலில் தடை செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டதுடன் ஒலிபெருக்கியினை களற்றி வைக்குமாறும் கூறியுள்ளனர்.

கடை உரிமையாளர் தான் ஒரு இலட்சம் ரூபா நில வாடகை மாநகர சபைக்கு செலுத்தியே இந்த கடைப்பகுதியினை பெற்றுள்ளதாகவும் இந்த பகுதியில் தான் எவ்வாறேனும் விற்பனையில் ஈடுபடுவேன் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஏற்பட்ட வாய்த் தகராறு செய்யும் பொழுதே இவர் மதுபானம் அருந்திய நிலையிலேயே விற்பனையில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரிய வந்துள்ளதுடன் மாநகரசபை யின் உறுப்பினர்களை தகாத வார்த்தைகளினாலும் இவர் பேசியுள்ளார்.

இந்த சம்பவத்தை பார்த்துக் கொண்டிருந்த ஏனைய கடை உரிமையாளர்கள் இவ்வாறு இவர் ஒருவர் மட்டும் ஒலிபெருக்கியினை பாவித்து விற்பனையில் ஈடுபட அனுமதித்தால் தாங்களும் இனிவரும் நாட்களில் ஒலிபெருக்கியினை பாவித்து விற்பனையில் ஈடுபட நேரும் எனவும் இதனை உரிய அதிகார்ரிகள் கவனத்தில் எடுதது இதற்கான சரியான தீர்வினை பெற்றுத்தர வேண்டும் என கடை உரிமையாளர்கள் வேண்டுகோள் விடுத்தனர்.

# பதிவிறக்கப் பெட்டகம்

இல்லீரியா என்னும் கற்பனையான கிழக்கு ஐரோப்பிய நாட்டுக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் ஹோடெரெர். கட்சியின் ஒரு பிரிவினர் தலைவர் இலட்சியத்திற்குத் துரோகமிழைப்பதாகக் கருதுகின்றனர். எனவே அவரை ஒழித்துக் கட்ட, கட்சியில் புதிதாகச் சேர்ந்துள்ள ஹ்யூகோ என்னும் இளைஞனைத் தேர்நதெடுக்கின்றனர். தான் செய்யப்போகும் கொலை தன்னை முக்கியமானவனாக்கும் என்று கருதிச் சம்மதிக்கிறான் ஹ்யூகோ. இவனைத் தனது நேர்முக உதவியாளனாக்கிக் கொள்கிறார் ஷோடெரெர். கட்சியில் சேரும் ஒவ்வொருவரும் சுயமரியாதையைப் பெறுவார்கள் என்று தான் கருதியதாலேயே அதில் சேர்ந்ததாக ஹோடெரெரின் மெய்க்காப்பாளர்களிடம் ஹ்யூகோ கூறுகிறான். ஆனால், அவர்களோ தாங்கள் பாட்டாளி வர்க்கத்தைச் சேர்ந்தவர்களென்றும், பசிக்கொடுமை தாங்காததால்தான் தாங்கள் அக்கட்சியில் சேர்ந்ததாகக் கூறுகின்றனர்.

ஹ்யூகோ ஓர் அப்பழுக்கற்ற கறாரான இலட்சியவாதியாகவும் ஹோடெரெர் அரசியல் தீர்வுக்காகக் கொள்கைகளை சமரசம் செய்துகொள்ளும் சமரசவாதியாகவும் காட்டப்படுகின்றனர். வேறு சாத்தியப்பாடுகள் இருக்கும் போது வன் முறையை மட்டும் தேர்ந்தெடுப்பது மனிதர்கள் தமது பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் செயல் என்பது ஹோடெரெர் பாத்திரத்தின் தர்க்கம். ஆனால், ஹ்யூகோ ஓர் அருவமான இலட்சியத்தை, அதன் தூய்மை சிறிதும் கெடாமல் பாதுகாக்க விரும்புகிறவன், அந்த இலட்சியத்தின் பெயரால் எத்தனை பேரை வேண்டுமானாலும் காவு கொடுக்கத்தயங்காதவன் என்பதை நாடகத்தின் உரையாடல்கள் புலப்படுத்து கின்றன.

ஒரு கொள்கையை நிறைவேற்றுவதற்கு எத்தனை பேரை வேண்டுமானாலும் காவு கொடுக்கலாம் என்ற அவனது கருத்தை நிராகரித்து ஹோடெரெர் சொல்கிறார்: ஹ்யூகோ நீ மக்களை நேசிப்பதில்லை. கொள்கைகளைத் தான் நேசிக்கி றாய்.

***ஹ்யூகோ:*** மனிதர்கள்? அவர்களை ஏன் நான் நேசிக்க வேண்டும்? அவர்கள் என்னை நேசிக்கிறார்களா?

***ஹோடெரெர்:*** அப்படியானால் எங்களிடம் ஏன் வந்தாய்? மனிதர்களை நீ நேசிக்கவில்லை என்றால், அவர்களுக் காக நீ போராட முடியாது.

***ஹ்யூகோ:*** கட்சியில் நான் சேர்ந்ததற்குக் காரணம் அத னுடைய இலட்சியம் நியாயமானதாக இருக்கிறது என்பதால் தான். அந்த இலட்சியம் நியாயமானதாக இல்லா மல் போகுமானால் நான் அதைவிட்டு விலகுவேன். மனிதர்களைப் பொறுத்தவரை, அவர்கள் எப்படி இருக்கிறார்கள் என்பதில் எனக்கு ஆர்வம் இல்லை. அவர்களால் எப்படிப்படடவர்களாக ஆகமுடியும் என்பதில்தான் எனக்கு அக்கறை உள்ளது.

***ஹோடெரெர்:*** நானோ, அவர்கள் எப்படி உள்ளார்களோ அதற்காகவே அவர்களை நேசிக்கிறேன். அவர்களது அழுககுகள், தீமைகள் அனைத்தையும் சேர்த்து.. என்னைப் பொறுத்தவரை இந்த உலகில் ஒரு மனிதன் கூடுதலாக இருப்பதோ குறைவாக இருப்பதோ முக்கியமான விஷயம். அது விலைமதிக்க முடியாதது. நீ யார் என்பது எனக்கு இப்போது தெரிகிறது. நீ ஒரு நாசகாரன். உன்னையே நீ வெறுப்பதால் மனிதர்களை நீ வெறுக்கிறாய். உனது இலட்சியத் தூய்மை மரணத்தின் நிழலைக் கொண்டிருக்கிறது. நீகனவு காணும் புரட்சி எங்களுடைய புரட்சி அல்ல. நீ உலகத்தை மாற்ற விரும்பவில்லை. நீ அதை வெடிகுண்டு வைத்துத் தகர்க்க விரும்புகிறாய்.

**– சார்த்தரின் நாடகம் பற்றி எஸ்.வி.ஆர். கட்டுரையிலிருந்து**

வாழ்வு, சுதந்திரம், இன்பம் என்பதைக் கட்டியெழுப்ப அமெரிக்கர்களுக்குத் தேவைப்பட்டவை பூர்வகுடி மக்களின் 75 மில்லியன் மண்டையோடுகளும், ஆபிரிக்க மக்களின் 15 மில்லியன் சங்கிலி பூட்டிய உடல்களும். **– பிரேம் ரமேஷ்**

வன்முறையின் வெளிப்பாடு போர் என்பது எவருக்கும் தெரியும். ஆனால் காலம் காலமாக போருக்கு விதிமுறைகள் இருக்கின்றன. தார்மீகம், சத்தியம் என்பன அங்கு இருக்க வேண்டும். இதற்கு நாங்கள் மேற்கு நாடுகளுக்கோ ஜெனிவாவிற்கோ போகத் தேவையில்லை. பாரதம், இராமாயணம் என்ற எங்கள் செவ்விலக்கியங்களில் எங்கும் நிரம்பி இருக்கிறது. போர் தர்மம் ஒருசாராரிடம் மட்டும் இருக்க வேண்டும் என்பது எப்படி நியாயமாகும்? வன்முறையில் ஈடுபடுபவர்கள் அதிகாரத்தில் இருக்கும் போது தர்மத்தை பற்றி நினைப்பதில்லை. தோல்வியில் முடியும்போது யுத்ததர்மத்தையும் ஜெனிவா போர்முறையையும் பேசுவது பிரயோசனம் அற்றது.

**– நொயல் நடேசன்**

# நெடுந்தீவு கடற்தொழிலாளர்களின் பிரச்சினை தொடர்பாக ஆராய்வு



நெடுந்தீவு கடற்தொழிலாளர் சங்க பிரதிநிதிகளுடன் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக யாழ். மாவட்ட கடற்தொழில் சம்மேளனத் தலைவர் அ. எமிலியாம்பிள்ளை கலந்துரையாடியுள்ளார்.

நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாச தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்றது. இந்நிகழ்வில் நெடுந்தீவிலுள்ள ஐந்து மீன்பிடிச் சங்கங்களின் பிரதிநிதிகள் நெடுந்தீவு பிரதேச சபைத்தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி அமைப்பாளருமான தானியேல் றெக்சியன் ஆகியோரும் கலந்து கொண்டனர். நெடுந்தீவு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க தலைவர் க.ப.அமிர்தநாதர் தலைமைதாங்கினார். இந்நிகழ்வில் நெடுந்தீவு கடற்தொழிலாளர்கள் ஏனைய பகுதிகளைச்சேர்ந்த கடற்தொழிலாளர்களினால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

சம்மேளனத் தலைவர் தனது உரையின் போது நீண்ட காலம் தொடக்கம் எமது யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர்களுக்கு நண்டு வலை தொழிலுக்கு நாள் குறிக்கப்பட்டு வியாழன் வெள்ளி என இவ்வலைகள் படுக்கப்படுவது வழமை. இப்படி இருக்கையில் எமது அயல் தீவுகளையும் அயல் பகுதிகளையும் சேர்ந்த தொழிலாளர்கள் தெரிந்து கொண்டு தம்முடைய வலி வலைகளை அத்தினங்களில் படுத்து எமது சிறு தொழிலாளர்களின் வலைகளையும் சேதமாக்கியுள்ளனர்.

இந்நிலை மூன்றாம் முறையாக இடம்பெற்றபோது எமது தொழிலாளர்களால் தம்முடைய வலைகளுடன் எடுத்து வந்து எமது சங்கத்தில் ஒப்படைத்து உள்ளனர் எமது தீவின் முற்றமாகிய வடக்கு பக்கத்தில் எமக்கு மட்டும் தொழில் செய்ய அனுமதி பெற்றுத் தரவேண்டும் எனக் கூறினார்.

அதைத்தொடந்து ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் திரு க.கமலேந்திரன் (கமல்) தொலைபேசியில் தொடர்பு கொண்டு கருத்துக்களை பகிர்ந்து கொண்டார். இதன் போது நெடுந்தீவு சிறு தொழிலாளர்களின் நண்டு வலைகளுக்குள் ஏனைய பகுதிகளைச் சேர்ந்த கடற்தொழிலாளர்கள் தமது வலைகளை படுத்தது தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கவனத்துக்கு கொண்டு வந்ததாகவும் இப்பிரச்சினைகளை ஒன்றுக்கு ஒன்று முரண்படாது சமரசமாக கதைத்து தீர்த்து கொள்ள வேண்டிய வழிவகைகளைச் செய்யும்படி கேட்டுக் கொண்டுள்ளார்

இதுவரை பதிவு செய்யப்படாத கண்ணாடி இழைப்படகுகளை பதிவு செய்வதற்கு வேண்டிய ஒழுங்குகளை தாம்மேற்கொள்வதாகவும் குறிப்பிட்டதோடு எந்தவேளையிலும் எமது கட்சி தங்களுக்கு உதவிசெய்வதற்கு பின்னிக்காது எனவும் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச சபைத்தவிசாளரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளருமான தானியேல் றெக்சியன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

எமது பகுதி கடற்றொழிலாளர்கள் அயல்பகுதி கடற்றொழிலாளர்களினால் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதை வைத்து முரண்படாமல் நாம் அனைவரும் ஒரே தொழிலாளர்கள் என்ற வகையில் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு நல்ல தீர்ப்பு சமரசமாக தானாகவே வரவேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும் பாஸ்நடைமுறை எமது தீவில் இல்லை என்பதோடு இதற்கு எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முழுமையாக பாடுபட்டுள்ளார் அவரின் பணிப்பின் பேரில் வட மாகாணசபை எமது நெடுந்தீவு சமாசத்துக்கு கடந்த வருடம் கூட மீன்கொள்வனவு நடவடிக்கைக்காக என்றிப் நிதியில் இருந்து 20 இலட்சம் ரூபா வரை பெற்றுக் கொள்வதற்கு வழிவகைகளை மேற்கொண்டு தந்தார். ஈழமக்கள் ஜனநாயகக்கட்சி எமது மக் களுக்கு உதவுவதற்கு எப்போதும் பின்னிக்காது எனவும் தவறுகள் திருத்திக்கொள்ளப்பட வேண்டியது எனவும் எமது கௌரவ அமைச்சர் அவர்களின் வேண்டுகோளின்படியே எமது யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை அவர்கள் இப்பிரதேசத்துக்கு வந்து பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வந்துள்ளார் எனவும் கூறினார்.

# திடீர் மின்சாரத் துண்டிப்பினால் மாணவர்கள் பெரிதும் பாதிப்பு

(மன்னார்)

மன்னாரில் தற்போது இரவு, பகல் பாராது மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுவதினால் நோன்பு கடமைகளில் ஈடுபடும் முஸ்லிம் மக்களும் எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு தம்மை தயாரப் படுத்தும் மாணவர்களும் தொடர்ந்தும் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக எவ்வித அறிவித்தல்களும் இன்றி அடிக்கடி மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது.

இதன் காரணத்தினால் மின் பாவனையாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வந்தனர்.


திடீர்,திடீர் என மின் தடங்கல் ஏற்படுவதினால் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மின் பாவனையாளர்களது பல இலட்சம் ரூபாய் பெறுமதியான மினசாதனப் பொருட்கள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டது.

இந்த நிலையில் மன்னார் மின்சார சபை அதியுயர் மின் கோபுரங்களில் திருத்த வேலைகளை மேற்கொண்டு மின் சாரத்தை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் மன்னார் மின்சார சபை அதிகாரி தெரிவிக்கையில்,

மன்னார் மதவாச்சி பிரதான வீதியில் உள்ள அதியுயர் மின் கோபுரங்களிலேயே தொடர்ந்தும் பிரச்சினைகள் ஏற்படுவதாகவும் அதனை நிவர்த்தி செய்ய மின்சாரசபை துரித நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# நூல்கள் அன்பளிப்பு



(யாழ்ப்பாணம்)

அமெரிக்க சட்ட சங்கத்தின் உறுப்பினரான நிகால் சிறி அமரசேகரவினால் எழுதப்பட்ட 12 நூல்கள் கடந்த செவ்வாய்கிழமை யாழ்.பொது நூலகத்திற்கு கையளிக்கப்பட்டது.

ஊழல், ஒழுங்கீனம், பொருளாதாரக்குற்றங்கள், பொது நிதி, அரசாங்க ஆட்சி முறை போன்ற விடயங்கள் தொடர்பாக அவரால் எழுதப்பட்ட நூல்களே கையளிக்கப்பட்டது.

யாழ்.பொது நூலகம், யாழ் பல்கலைக்கழக சட்ட நூலகம் மற்றும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கும் இந்த நூல்கள் வழங்கப்பட்டுள்ளது. (02)

## – விரைவில் வீதிகள் ஒளிபெறும் –

# வவுனியா நகரசபை மின்விளக்குகள் உறுப்பினர்களிடம் பகிர்ந்தளிப்பு

(வவுனியா)

வவுனியா நகரசபைக்குட்பட்ட வீதிகளில் பொருத்துவதற்காக நகர சபை உறுப்பினர்களுக்கு மின்விளக்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

வவுனியா நகரசபைக்குட்பட்ட வீதிகளில் மின்விளக்குகள் இன்மையால் பல விபத்துக்கள் இரவு வேளைகளில் இடம்பெறுவதாக பல தரப்பாலும் நகரசபைக்கு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இதற்கிணங்க நகரசபையினால் கடந்த 5 மாதங்களுக்கு முன்னர் 500 மின் விளக்குகள் கொள்வனவு செய்யப்பட்டபோதிலும் அவை வீதிகளில் பொருத்தப்படாமல் நகரசபை களஞ்சிய சாலையில் தேங்கிக் கிடந்தன. இந்நிலையில் நகர சபை உறுப்பினர்களுக்கிடையில் மின் விளக்குகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

எனினும் சில உறுப்பினர்கள் இவை நகரசபை உடமை என்ற காரணத்தாலும், மின் விளக்குகளை பொருத்துவதற்குரிய போதுமான உபகரணங்கள் இன்மையாலும் அவற்றை தாம் பொறுப்போற்க முடியாது எனக் கூறி, பகிரப்பட்ட மின் விளக்குகளை நகரசபையில் இருந்து எடுத்துச்செல்ல மறுத்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா நகரசபையின் தலைவர் கனகையா தெரிவிக்கையில்,

மின் விளக்குகள் உறுப்பினர்களிடம் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்னது. இந்த மின்விளக்குகளை பெறாதவர்கள் ஏன் பெறவில்லை எனத் தெரியவில்லை. எனினும் அவர்களுக்கும் மின்விளக்குகளை பெறுமாறு தெரிவித்திருந்தோம். மின் விளக்குகளை பெற்றவர்கள் தமது பிரதேசத்திலுள்ள வீதிகளில் அவற்றை பொருத்த வேண்டும் என்றார்.

இவ்விடயம் தொடர்பில் நகர சபை உறுப்பினர் எஸ். ரி. இராஜேஸ்வரன் தெரிவிக்கையில்,

களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த பொருட்கள் தொடர்பிலும் பழுதடைந்த நிலையில் உள்ள வாகனங்கள், பயன்படுத்தக்கூடிய வாகனங்கள் தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியிருந்தோம். அந்தவகையில், 500 மின்விளக்குகள் கடந்த 5 மாதகாலமாக களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில் ஏற்கனவே 100 மின்குமிழ்கள் மத்திய பேருந்து நிலையத்திற்கும் பூந்தோட்டம், மயானத்திற்கும் பொருத்தப்பட்டதாக நகரசபையின் செயலாளரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது எஞ்சியுள்ள 400 மன்விளக்குகளையும் உடனடியாக உறுப்பினர்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டியேற்பட்டதன் காரணமாக தலைவரின் மேற்பார்வையின் கீழ் 10 உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

தற்போது அவை உறுப்பினர்களின் வீடுகளில் வைக்கப்பட்டுள்ளதுடன் அதற்கான உதிரிப்பாகங்கள் முழுமையாக இல்லாத காரணத்தால் பொருத்தப்படாமலுள்ளன. அடுத்துவரும் சபைக் கூட்டத்திற்கு இடையில் உதிரிப்பாகங்கள் கிடைக்கப்பெற்றதும் ஒவ்வொரு உறுப்பினரும் தமது வட்டாரத்திற்குட்பட்ட பகுதிகளில் எங்கெங்கு மின் விளக்குகள் சென்றடைய வேண்டுமென இனங்கண்டு அங்கு மின் விளக்குகளை பொருத்துவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படும் என்றார்.

# சிறுவர் நாடகப் போட்டி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கலாசார அமைச்சின் சிறுவர் நாடக விழா 2012 இற்கான நாடகங்களின் தெரிவு தற்போது நடைபெற்று வருகின்றன.

வடமாகாணத்தில் இருந்து சிறந்த நாடகங்களை தெரிவு செய்வதற்காக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரியிலும், யாழ்ப்பாண இந்துக்கல்லூரியிலும் சிறுவர் நாடகங்கள் அரங்கேற்றப்பட்டன.

இந் நாடகங்களை தெரிவு செய்யும் நடுவர் குழுவில் பேராசிரியர் சாஹித்திய ரத்னா சபா. ஜெயராசா கலைஞர் கலைச் செல்வன், வதிரிசிவதாசன் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

யாழ்.பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் க.கந்தவேல் தலைமையில் நடைபெற்றது. இந்நாடக தெரிவிற்காக யாழ்ப்பாணத்திலுள்ள ஐந்து பாடசாலைகளின் நாடக குழுக்கள நாடகங்களை அரங்கேற்றின.

இதன் இறுதிச்சுற்றில் செப்டம்பர் மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. தேசிய மட்டத்தில் தெரிவாகும் சிறந்த கலைஞர்களுக்கு விருதும், பணப்பரிசும், சான்றிதழ்களும், கலாசார அமைச்சினால் வழங்கப்படவுள்ளது. யாழ்ப்பாணத்தில் சிறுவர நாடகத்துறை வளர்ச்சி குன்றியுள்ளதாக நடுவர் குழுவினர் தெரிவிக்கின்றனர். (105)

# மும்மொழித்தினம்


(வவுனியா)

வவுனியா இலங்கை திருச்சபை தமிழ் மகாவித்தியாலயத்தினால் மும் மொழித்தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.


மாணவர்கள் மத்தியில் மூன்று மொழிகளின் தேவையை உணர்த்தும் வகையில் இடம்பெற்ற இந்நிகழ்வுகளில் தமிழ், சிங்கள, ஆங்கில கலாசாரங்களை அடிப்படையாகக் கொண்ட நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தது. (160)

39. 2 லீற்றர் குளிர்பானத்தை 4 பிள்ளைகளுக்குச் சமனாகப் பங்கிடும் போது ஒரு பிள்ளைக்குக் கிடைக்கும் பானத்தின் அளவு எத்தனை மில்லிலீற்றர்? ....................


40. 12m நீளமுடைய துணியை ஐந்து சமமான துண்டுகளாக வெட்டும் போது ஒரு துண்டின் நீளம் யாது?
....................

41.




இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவு யாது?
....................

42.



இவ்வுருவின் சுற்றளவு யாது?
....................


43.


மின் கம்பியொன்றின் உச்சியிலிருந்து 1m 25cm கீழே மின் குமிழ் ஒன்று பொருத்தப்பட்டுள்ளது. மின்கம்பத்தின் உயரம் 7m ஆகும். தரை மட்டத்திலிருந்து மின் குமிழ் பொருத்தப்பட்டுள்ள உயரத்தைக் காண்க.
....................

44.


அருகில் உள்ள பெட்டியை நிரப்புவதற்கு இன்னும் எத்தனை சதுரக் குற்றிகள் தேவை?
....................

45. வரைபை நன்றாக விளங்கிக் கொண்டு கேட்கப்படும் வினாக்களுக்கு விடை தருக.




1. வரைபிலே எதனைப் பற்றிய விபரம் காட்டப்பட்டுள்ளது?
....................

2. எந்த ஆண்டுகளில் அதன் உற்பத்தி 180இற்கு மேற்பட்டது? ....................

3. எந்த ஆண்டு அது ஆகக் கூடுதலான உற்பத்தி செய்யப்பட்டுள்ளது? ....................

4. 1985இலே 190 ஆகாய விமானங்கள் உற்பத்தி செய்யப்பட்டன. எனின், அவ்விபரத்தை வரைபில் குறித்துக் காட்டுக.

46. கீழே கதைப்படம் ஒன்று உள்ளது. அதனை அவதானித்து கருத்து நிறைந்த வாக்கியங்களாக பொருத்தமான எழுவாய் பயனிலைகளுடன் ஆறு வாக்கியங்களை எழுதுக.



1. ....................
2. ....................
3. ....................
4. ....................
5. ....................
6. ....................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2012

பகுதி - II
நேரம் 1-15 நிமிடம்

# கல்வி முரசு



**இலங்கையிலுள்ள ஐந்து ஆசிரிய நட்சத்திரங்களினால் தொகுக்கப்படும் விசேட வினாத்தாள்.**

✱ கீழே தரப்படும் பாடலை வாசித்து பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. அல்லும் பகலும் நல்ல
ஆர்வத்தோடு நீங்கள்
கல்வி கற்று நன்மை
கருதி வாழ வேண்டும்

2. இந்த உலகில் நீங்கள்
இயற்றும் தொண்டில் எல்லாம்
தந்தை தாயைப் பேணும்
தருமம் ஒன்றே பெரிது

3. பலவும் படித்து நீங்கள்
பட்டம் பெற்ற போதும்
உலகத்தோடு ஒத்தே
ஒழுகிக் கொள்ள வேண்டும்.

4. கன்றை நினைத்தே உள்ளம்
கசியும் பசுவைப் போல
நன்றி புரிந்தோர் தம்மை
நாமும் நினைக்க வேண்டும்

5. பருவம் பார்த்து நாங்கள்
பயிரைச் செய்தல் போலக்
கருமந் தொடங்கும் போது
காலம் பார்க்க வேண்டும்

01. மேலுள்ள பாடலைப் பாடியவர் யார்? ....................
02. பாடலில் வந்துள்ள இணைமொழிச் சொல் யாது? ....................
03. பாடலில் வந்துள்ள உவமைச் சொல் யாது? ....................
04. உலகத்தில் பெரிய தருமம் யாது? ....................
05. முன்னிலைப் பன்மைச் சொல் யாது? ....................
06. ஐந்தாவது பாடலில் முதல் இரு அடிகளும் உணர்த்தும் பழமொழிகள் யாது? ....................
....................
07. "ஆர்வம்" என்பதன் ஒத்த கருத்துச் சொல் யாது? ....................
08. "உலகத்தோடு ஒத்து ஒழுகல்" என்றால் என்ன? ....................

09. கீழே தரப்படும் மரபுத் தொடர்களின் பொருளை கீழே எழுதுக.
i) வாட்ட சாட்டம் - ....................
ii) பொடி வைத்துப் பேசுதல் - ....................
iii) இலகுகாத்த கிளி - ....................

10. கீழே தரப்படும் சொற்றொடர்களுக்குப் பொருத்தமான பழமொழிகளை எழுதுக.
i) நட்புகழ் மங்குவதில்லை - ....................
ii) திருப்திப்படாத மனம் - ....................

11. கீறிட்ட இடங்களில் பொருத்தமான எழுத்தை எழுதிப் பூரணப் படுத்துக.
i) கு.......ந்தைகள் நி.........க் காட்சிகளைக் கண்டு க.........த்தனர்.
ii) ம......... பெய்யும் கா.........ங்களில் ஆற்றில் வெ.................ம் பெருகி ஓடும்.
iii) மெ.........குவர்த்தியின் வெ.........ச்சத்தினால் இரு......... வி.........கியது.

12. கீழே தரப்படும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்கில் எழுதுக.
i) வெக்கம் - .................... ii) கோடாலி - .................... iii) இளனி - ....................

13. கீழே தரப்படும் கணினி தமிழ்க் கலைச் சொற்களுக்குரிய பொருத்தமான ஆங்கிலக் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
i) விசைப் பலகை - ....................
ii) இறுவெட்டு - ....................
iii) எழுத்துரு - ....................

14. கீழே தரப்படும் சிங்கள உரையாடலுக்குரிய தமிழ்க் கருத்தை தமிழில் புள்ளிக் கோட்டில் எழுதுக.
வினா: ஓயா(G)கே (G)கெ(DH)தற கவு(dh)த இன்னே?

.....................................................................

விடை: ம(G)கே (G)கெதற அம்மாய், தாத்தாய், மமய் இன்னவா.

.....................................................................


✱ 15 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.

15. பின்வருவனவற்றுள் மிகச் சிறிய இலைகளைக் கொண்ட தாவரம் எது?
1. அகத்தி 2. பொன்னவரை 3. புளி 4. கீழ்க்காய் நெல்லி

16. எதிர் எதிரான இலையமைப்பைக் கொண்ட தாவரம்
1. கொய்யா 2. அன்னமுன்னா 3. மா 4. அலரி


17. கம்பிச் சுருள் போன்ற தந்துகளைக் கொண்ட தாவரம்
1. பாகல் 2. காக்கட்டான் 3. சாத்தாவாரி 4. மிளகு

18. கீழே தரப்படும் முகங்களில் மகிழ்ச்சியான தோற்றத்தின் கீழ்க் கோடிடுக.


1.  2.  3.  4. 

19. கீழே தரப்படும் பயிற்சிகளில் மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாடு அல்லாதது.
1. தியான பயிற்சி 2. மூச்சுப் பயிற்சியில் ஈடுபடல் 3. சூரிய நமஸ்காரம் 4. தனிமையில் இருத்தல்

20. பின்வருவனவற்றுள் மரக்கறிப்பயிர்களின் இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணியின் கீழ்க் கோடிடுக.


1.  2.  3.  4. 

21. புவியிலிருந்து பார்க்கக் கூடிய கோள் எது?
1. செவ்வாய் 2. சந்திரன் 3. சூரியன் 4. வெள்ளி

22. 
அருகிலுள்ள படத்தில் சந்திரனின் தோற்றம் குறிப்பது
1. அமாவாசை தினம்
2. பூரணை தினம்
3. இருத்தை தினம்
4. அட்டமி தினம்

23. நெல் வயல்களில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பூச்சி பீடைகளை அழிப்பதற்காக பயன்படுத்திய பாரம்பரிய முறை?
1. நெல்வயலில் முசுறு எறும்பைப் போடுதல் 2. கிருமி நாசினி தெளித்தல்
3. பறவைகளை வளர்த்தல் 4. நஞ்சூட்டல்

24. தாக்கப்பட்டவரின் உடலினுள் கொடுக்கு கழட்டிவிட்டு நஞ்சிப் பதார்த்தையும் இட்டுச் செல்லும் பிராணி எது?
1. மட்டைத் தேள் 2. தேள் 3. புலிமுகச் சிலந்தி 4. குளவி

25. 
கண்ணாடிக் கிளாஸ் ஒன்றை நீரால் நிரப்பி அதன் வாயை காட்போட் அட்டையினால் மூடி பின்னர் காட்போட் அட்டையை கையால் பிடித்துக் கொண்டு கிளாஸை தலைகீழாகப் பிடித்து கையை எடுக்கும் போது, காட்போட் அட்டை
1. காட்போட் அட்டை கீழே விழும் 2. உடனே கீழே விழும்
3. காட்போட் அட்டை கீழே விழாது 4. மெதுவாக கீழே விழும்




26. விற்றமின் B அதிகமாக உள்ள உணவு?
1. சிவப்பரிசித் தவிடு 2. கருவாடு 3. சோயாஅவரை 4. பலாக்காய்

27. கடவுச் சீட்டு ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு செல்ல வேண்டிய திணைக்களம்
1. பொலீஸ் திணைக்களம் 2. மாவட்ட செயலகம்
3. குடிவரவு குடியகல்வு திணைக்களம் 4. பிரதேச செயலகம்



28. மாணிக்க கங்கை ஆற்றுடன் தொடர்புபட்ட வணக்கஸ்தலம் எது?
1. தலதா மாளிகை 2. சிவனொளி பாத மலை 3. கதிர்காமம் 4. உகந்தை

29. பின்வருவனவற்றுள் மின்னைச் சோதித்தறியும் உபகரணத்தின் கீழ்க் கோடிடுக.

1.  2.  3.  4. 

30. மருந்துக் கடைகளில் மருந்துகளை வாங்கும் போது கவனிக்க வேண்டியவை?
1. உற்பத்தி செய்த ஆண்டு 2. உற்பத்தி செய்த திகதி
3. காலாவதியாகும் திகதி 4. மருந்தின் நிறை / அளவு

31. 
படத்தில் காணப்படுபவரின் கழுத்தில் கழலை தோன்றுவதற்கான காரணம்
1. அயடின் குறைபாட்டினால் 2. புரதக்குறைபாட்டினால்
3. விற்றமின் D குறைபாட்டினால் 4. விற்றமின் E குறைபாட்டினால்





32. மண்ணினுள் புதைத்து வைத்து நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியது எது?
1. கத்தரிக்காய் 2. தேசிக்காய் 3. வாழைக்காய் 4. புளியங்காய்

33. பின்வருவனவற்றுள் சவர்க்காரம் விரைவாகக் கரைவது
1. குளிர்ந்த நீரில் 2. உப்புநீரில் 3. மழைநீர் 4. சுடுநீர்

34. உடம்பில் ஏற்படும் கட்டி போன்ற நோய்களைக் குணப்படுத்துவதற்கு அரைத்துப் பூசக்கூடிய இலை எது?
1. குப்பைமேனி 2. நொச்சி 3. வாகை 4. திராய்





35. திடீரென துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கும் சந்தர்ப்பத்தில் செய்ய வேண்டியது
1. ஓடுதல் 2. நிலத்தில் படுத்தல் 3. பதுங்குதல் 4. கூட்டமாகச் சேர்ந்து இருத்தல்

36. கீழே தரப்படும் தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிந்து எழுதுக.
**(அத்தி, கொவ்வை, கருநொச்சி, கொன்றை, ஆடாதோடை, சீந்தில்கொடி)**

I.  II.  III.  IV.  V. 




(............................) (............................) (............................) (............................) (............................)

37. கீழே தரப்படும் பொருட்களை அவதானித்து கேட்கப்படும் வினாவுக்கான பொருத்தமான உபகரணத்தின் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.

1.  2.  3.  4. 

1. கப்பல், தோணி, வள்ளம் போன்றவற்றை கடலில் நிறுத்தி வைக்கப் பயன்படும் உபகரணம் (.............)
2. கம்மாலையில் பழுக்கக் காய்ச்சிய இரும்பினை எடுக்க உதவுவது (.............)
3. திசையை அறியப் பயன்படும் சாதனம் (.............)
4. பால் ரின், மீன் ரின் போன்றவற்றை வெட்டித் திறக்கப் பயன்படும் உபகரணம் (.............)

38. கீழே தரப்படும் பிராணிகளை அவதானித்து கேட்கப்படும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

1.  2.  3.  4. 

1. ஓட்டினுள் புகுந்து பாதுகாப்புப் பெறுவது (..................)
2. இடத்திற்கு இடம் தனது நிறத்தை மாற்றக்கூடியது (..................)
3. வேகமாக ஓடக்கூடியது (..................)

# தமிழகத்தில் தே.மு.தி.க. ஆட்சியை கைப்பற்றுமா




(திண்டுக்கல்)

தமிழகத்தில் தே.மு.தி.க ஆட்சியை கைப் பற்றும் என அதன் தலைவர் விஜயகாந் தெரிவித்துள்ளார். திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தே.மு.தி.க. சார்பில் கட்சியின் தலைவர் விஜயகாந்த் பிறந்த ஆகஸ்ட் மாதம் மக்களுக்காக மக்கள் பணியாற்றி வறுமை ஒழிப்பு தினமாக கொண்டாடபப்பட்டு வருகிறது. இதனையொட்டி சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திண்டுக்கல் மணிக்கூண்டு அருகில் நேற்று முன்தினம் இரவு நடந்தது.

அதில் அவர் கலந்து கொண்டு உரையாற்று கையில்

தே.மு.தி.க. சார்பில் மக்களுக்காக மக்கள் பணியை தொடங்கி செய்து வருகிறோம். தமிழ்நாட்டில் மின்சாரம் பற்றாக்குறை தொடர்ந்து இருக்கிறது. தஞ்சாவூரில் இருக்கும் விவசாயிகளின் விளைநிலங்கள் வறண்டு போய்க்கொண்டு இருக்கிறது. ஒட்டு போட்ட மக்கள் மின் வினியோகம் குறித்து மின் ஆணையத்திடம் போய் கேட்க முடியுமா? முடியாது.

சட்டம் ஒழுங்கை பார்த்தால், காலையில் நடைபயிற்சி மேற்கொள்ளும் பெண்களிடம் நகையை பறித்து செல்கின்றனர். அரசு வைத்தியசாலையில் டாக்டர்கள் பற்றாக்குறை, சிகிச்சை அளிக்க டாக்டர்கள் இல்லாத நிலை, மேலும் சரி யான சாலை வசதி இல்லை என்றார்.







# ஆடிப் பெருக்கு விழாவில் குவிந்தனர் புதுமணத் தம்பதிகள்




(திருச்சி)

விவசாயத்ததை பிரதான தொழிலாக கொண்ட காவிரி கரையோர மக்கள் வளங்களை வாரி வழங்கும் காவிரி தாய்க்கு நன்றி தெரிவிக்கும் ஆடிப்பெருக்கு விழா ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் 18ஆம் திகதி (தமிழ்திகதி) கொண்டாடப்படுகிறது. ஆடிப்பெருக்கு விழா நீர் நிலைகளுக்கு நன்றி செலுத்தும் விழாவாக தமி ழகத்தின் அனைத்து பகுதிகளிலும் நடந்தாலும், காவிரி ஆறு பாயும் திருச்சி, தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் உற்சாகத்துடன் நடைபெறுகிறது.

நேற்று நடைபெற்ற ஆடிப்பெருக்கை முன்னிட்டு அதிகாலையிலேயே திருச்சி ஸ்ரீரங்கம் அம்மா மண்டபத்தில் ஏராளமானோர் குவிந்தனர். வழக்கமாக தென்மேற்கு பருவ மழை தொடங்கி மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்பட்டு காவிரி ஆற்றில் பெருக்கெடுத்து ஓடும். ஆனால் இந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் காவிரி ஆறு வறண்டு பாலைவனம் போல் காட்சி அளிக்கிறது. இருந்த போதிலும் காவிரியில் கூடும் பக்தர்களின் குறையை போக்கும் வகையில் திருச்சி மாநகராட்சி சார்பில் ஆழ்துளை கிணறுகள் மூலம் செயற்கை நீரூற்றுகள் அமைக்கப்பட்டு இருந்தன.

# மத்திய உள்துறை அமைச்சராக சுஷில்குமார் ஷிண்டே நியமனம்

(புதுடில்லி)



மத்திய மின்துறை அமைச்சராக இருந்த சுஷில்குமார் ஷிண்டே, உள்துறை அமைச்சராக பொறுப்பேற்றார். பின்னர் அவர் நிருபர்களிடம் அவர் கூறியதாவது:- மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்குமிடையேயான விரிசல்கள் இருப்பதாக நாடாளுமன்றத்தில் அரசியல் மட்டத்தில் பேச்சு அடிபடுகிறது. இது சரிசெய்யப்படும் என நம்புகிறேன்.

இந்தியாவில் பொருளாதார மற்றும் சமுதாய நிலையில் மிகவும் பின் தங்கிய தலித் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மக்களின் மேம்பாட்டிற்காக காந்தி குடும்பத்தினர் பாடுபட்டுள்ளனர். அவர்களைப் போன்று அவர்களின் சமுதாய மேம்பட்டிற்காக பாடுபட்டு அதை நிரூபிப்பேன். தேசிய தீவிரவாத எதிர்ப்பு மையம் திறப்பது குறித்து மாநிலங்களிடையே கடுமையான எதிர்ப்பு இருந்து வருகிறது. அதுபற்றி இப்போது பேசுவதற்குமுன், முதலில் மாநிலங்களின் வளர்ச்சி பற்றி பேச இருக்கிறேன். திறந்த மனம் கொண்ட என்னை, நாட்டின் அங்கமாக உள்ள மாநிலங்களோடு முதலில் நான் பேசி, அவர்களுடைய முழு ஒத்துழைப்பை பெறவேண்டும். அதற்காக என்னை முதலில் மாநிலங்களுடன் பேச விடுங்கள். இடதுசாரி தீவிரவாத குழுக்கள் பல காரணங்களுக்காக குறிப்பாக சமுதாய காரணங்களுக்காக நக்சல்கள் தோன்றியுள்ளன. அந்த பிரச்சினைகள் பற்றி பேசி ஒரு தீர்மானம் எடுக்க வேண்டும் என்றார்.

# ஓய்ந்தது அசாமில் கலவரம்

அசாம் மாநிலத்தில் ஏற்பட்ட இனக்கலவரம் தற்போது ஓய்ந்துள்ளதால் அங்குள்ள மக்கள் இயல்பு நிலைக்கு திரும்பி வருகின்றனர். அசாமில் போடா பழங்குடியினருக்கும் சிறுபான்மை இனத்தவருக்கும் ஏற்பட்ட மோதல் பயங்கரமான இனக்கலவரமாக வெடித்ததில் 56 பேர் உயிரிழந்தனர்.

2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு அண்டை மாநிலங்களில் குடியேறினர். பாதி பேர் அசாமில் உள்ள முகாம்களில் தஞ்சமடைந்தனர்.கலவரத்தால் சேதமடைந்த பகுதிகளை பிரதமர் மன்மோகன் சிங், மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், பாரதிய ஜனதா தலைவர் எல்.கே. அத்வானி ஆகியோர் பார்வையிட்டதுடன் அங்குள்ள மக்களுக்கு ஆறுதல் கூறினர்.இந்நிலையில் அசாமில் கலவரம் ஓய்ந்து இயல்பு நிலை திரும்பி வருகின்றது. முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த மக்கள் தங்கள் சொந்த இல்லங்களுக்கு திரும்பி வருகின்றனர்.

இருப்பினும் பதற்றம் நிறைந்த பகுதிகளில் இராணுவம் தொடர்ந்து தனது அணி வகுப்புகளை நடத்தி வருகின்றது. அசாம் மாநில பொலிஸாருடன் சேர்ந்து 65 மத்திய ரிசர்வு படையினரும் பாதுகாப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# புனே தொடர் குண்டுவெடிப்பு விசாரணை நடத்த உத்தரவு

மகாராஷ்டிரா மாநிலம் புனேயில் நேற்று முன்தினம் இரவு நடந்த தொடர் குண்டுவெடிப்பு சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த அம்மாநில முதல்வர் பிருத்விராஜ் சவான் உத்தரவிட்டுள்ளார்.புனே மாநகரில் பிரபல திரையரங்கு உட்பட அதிமுக்கியமான 5 இடங்களில் தொடர்படியாக குண்டு வெடித்தன. இதில் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

6 ஆவது குண்டு ஒன்று நிபுணர்களால் செயலிழக்க செய்யப்பட்டது. இச்சம்பவம் குறித்து அம்மாநில முதல்வர் பிருத்விராஜ் சவான் கூறுகையில், குண்டு வெடிப்பு காரணமானவர்கள் யார் என்பது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், குறைந்த சக்தி கொண்ட குண்டுவெடிப்பு என்றாலும் பின்னணியில் யார் என்பது விசாரணையில் தெரியவரும் என்றார்.

# வன்னிப்....

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாயகக் கனவை அடைவதை இலக்காகக் கொண்டு போரிட்டு, பின்தள்ளப்பட்டு இன்றும் எம் மத்தியில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பல்லாயிரம் உறுப்பினர்களின் எதிர்காலத் தேவைகள், ஜீவனோபாய அம்சங்களில் அக்கறை செலுத்தத் தவறும் பட்சத்தில் வடக்கில் அதிகரித்துவரும் பாரிய குற்றச் செயல்கள், கிழக்கிலும் நாடு பூராவும் பரவக்கூடிய அபாயமுள்ளதுடன், மற்றுமொரு கோணத்தில் புதியதொரு வன்முறைக் கலாசாரம் உருவாகவும் வழி சமைக்கும்.

எத்தகைய சூழலாக இருந்தாலும் போருக்குப் பின்னரான மீள்கட்டமைப்பு மிக இன்றியமையாத இடத்தைப் பெறு கிறது. மக்களின் இயல்பு வாழ்வும் ஜீவனோபாயத் தேவைகளும் உடனடி யாக மேற்கொள்ளப்பட வேண்டியவை. யுத்தம் முடிவுற்று மூன்று ஆண்டுகள் பூர்த்தியடைந்துவிட்ட போதிலும், வடக்கில் கிராமங்களில் வாழும் மக்கள் தற்காலிக வீடுகளில், மின்சாரம், குடிநீர் வசதிகளற்று வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பெரும்பான்மைச் சிங்கள அரசிடம் வெல்வதென்பது துரித கதியில் நிகழக்கூடிய ஒன்றல்ல. அதேநேரம் ஒரு காலத்திலும் அடைய முடியாத இலக்குமல்ல. ஆயினும் மக்களின் சமகாலத் தேவைகள் குறித்த விடயங்களிலும் சமமான அக்கறை வெளிப்படுத்தப்பட வேண்டும். இன்று போரால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் வாழும் மக்கள் மத்தியிலும் புலிகள் இயக்க உறுப்பினர்களாக இருந்தவர்கள் அல்லது புலிகளின் இராணுவக் கட்டமைப்புக்குள் வலிந்து திணிக்கப்பட்ட அப்பாவிகள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள விரக்தி நிலையானது நீண்டகால நிவர்த்திக்க முடியாத தாக்கங்களை ஏற்படுத்த இடமளிக்காது சமூக நிலையைக் காப்பாற்றுவதிலும் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ..........................................

முகவரி : ..........................................

பிறந்த ஆண்டு : ..........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும்

..................................

பெற்றோர் கையொப்பம்

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது. உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள். தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.

# நாட்டைக் காப்பாற்ற போராடும் படையினரே கதாநாயகர்கள்

## - சிரியா ஜனாதிபதி புகழாரம் -



(சிரியா)

சிரியாவில் போராட்டக்காரர்களின் வசம் இருக்கும் வர்த்தக நகரை மீட்பதற்காக ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் அரசப் படையினர் உச்சகட்ட போரை நடத்தி வருகின்றனர்.

முதல் முறையாக தலைநகர் டமாஸ்கசின் கிறிஸ்தவப் பகுதியில் ஆரம்பித்த இந்த சண்டையில் இதுவரை 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

இந்த உள்நாட்டுப் போர் காரணமாக கடந்த இருவாரங்களாக மக்களின் பார்வையில் படாமல் இருந்து வரும் ஜனாதிபதி அசாத், ஆயுதப்படை நினைவு தினத்தை முன்னிட்டு படைவீரர்களுக்கு வாழ்த்து செய்தி அனுப்பியுள்ளார்.


அதில் அவர் கூறியிருப்பதாவது, ஆயுதம் தாங்கி போராடும் தீவிரவாதிகளுக்கு எதிராக சண்டையிடும் நமது படையினரை வாழ்த்துகிறேன்.

சில வாரங்களுக்கு முன்பிருந்து ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டக்காரர்கள் நடத்திவரும் சண்டை தலைநகர் டமாஸ்கஸ் மற்றும் வர்த்தக நகர் அலேப்போவின் வீதிகளில் தற்போது தீவிரமடைந்துள்ளது.

இருதரப்புக்கும் இடையே தற்போது நடந்து வரும் இந்த கடும் சண்டை நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும்.

நாட்டின் தலைவிதி மட்டுமல்லாமல் மக்களின் தலைவிதி, நாட்டின் நிகழ்காலம், இறந்த காலம், எதிர்காலம் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த சண்டையின் முடிவில் தெரியும்.

போராட்டக்காரர்களுக்கு எதிராக சண்டையிட்டு வரும் நீங்கள் நாட்டின் மிகச்சரியான காரணங்களுக்காக சண்டையிடும் கதாநாயகர்கள் என்று தெரிவித்துள்ளார்.



கொரிய போர் முடிந்து 59 வது ஆண்டு விழா வடகொரியாவில் இடம்பெற்றது. இக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்ட வடகொரியா தலைவர் கிம் ஜாங் உன் மற்றும் அவரது மனைவி ரீ சால் ஜூ வரவேற்கப்படுவதனைக் காணலாம்.

# செவ்வாயில் விண்கலம் தரையிறங்கும் காட்சி நேரடி ஒளிபரப்பு

(நியூயோர்க்)

செவ்வாய் கிரகத்தில் அமெரிக்காவின் ரோவர் விண்கலம் தரையிறங்கும் நிகழ்ச்சி நியூயோர்க்கில் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது. அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி மையம் (நாசா) கடந்த ஆண்டு நவம்பர் மாதம் செவ்வாய் கிரகத்துக்கு ரோவர் விண்கலத்தை அனுப்பியது. 250 கோடி டாலர் செலவில் அனுப்பப்பட்டுள்ள ரோவர் விண்கலம் வரும் 6 ஆம் திகதி செவ்வாய் கிரகத்தில் தரையிறங்குகிறது. செவ்வாய் கிரகத்தின் மிகப்பெரிய பள்ளத்தாக்கான கேலே பகுதியில் சரியான நேரத்தில் ரோவர் தரையிறங்கும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

இது குறித்து நாசா இணை நிர்வாகி ஜான் கிரன்ஸ்பெல்டு குறிப்பிடுகையில், செவ்வாய் கிரகத்தில் ரோவர் தரையிறங்கும் காட்சியை, நியூயோர்க்கின் டைம்ஸ் சதுக்கத்தில் பெரிய திரை வைத்து நேரடியாக ஒளிபரப்பு செய்ய உள்ளோம். இதன மூலம் பொதுமக்களுடன் எங்கள் மகிழ்ச்சியை பகிர்ந்து கொள்ள முடிவு செய்துள்ளோம். கலிபோர்னியாவின் பசடெனா ஏவுதள ஆய்வு மையத்தில் இருந்து இந்த காட்சிகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட உள்ளது என்றார்.

# அரபாத் மரண விசாரணை; நடத்துமாறு மனைவி கோரிக்கை



பாலஸ்தீன முன்னாள் ஜனாதிபதி யாசர் அரபாத்தின் மரணம் குறித்து விசாரணை நடத்துமாறு, பிரான்ஸ் அதிகாரிகளிடம் அரபாத்தின் மனைவி சுஹா அரபாத் முறைப்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த 2004 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் உள்ள இராணுவ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த யாசர் அரபாத் உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்தார்.

இவரது மனைவி சுஹா அரபாத்தினதும், அல் ஜஸீரா தொலைக்காட்சியினதும் கோரிக்கைகளுக்கு இணங்க, சுவிஸ்சர்லாந்திலுள்ள ஆய்வுகூடமொன்று நடத்திய சோதனையின் மூலம் அரபாத்தின் மாதிரிகளில் பொலோனியம் - 210 எனும் அரிய உயர் நச்சுப் பொருள் கலந்திருப்பதற்கான தடயங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் இறுதித் தீர்மானமெதையும் மேற்கொள்ள முடியாதெனவும் அரபாத்தின் எலும்புகளை ஆய்வுக்குட்படுத்த வேண்டியிருக்கும் எனவும் அந்த ஆய்வுகூடம் தெரிவித்துள்ளது.

இந்த சூழ்நிலையில் யாசர் அராபத் மரணம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்று அவருடைய மனைவி பிரான்ஸ் அரசுக்கு முறைப்படி கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் அரபாத்தின் உடலை தோண்டியெடுப்பதற்கு பலஸதீன அதிகாரிகள் இம்மாத முற்பகுதியில் அநுமதியளித்தமை குறிப்பிடத்தக்கது.

சுஹா அரபாத்தின் கோரிக்கையை ஏற்றுக்கொள்வதா என்பதை பிரெஞ்சு நீதிபதியொருவர் தீர்மானிக்கவுள்ளார்.

# ஈரான் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை

(அமெரிக்கா)

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஈரான் மீது கூடுதல் பொருளாதார தடைகளை விதித்துள்ளார்.

ஈரான் சர்வதேச ஒப்பந்தங்களை மதிக்காமல் அணு ஆயுதங்களை தயாரிப்பதாக அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்து குற்றம் சாட்டி வருகின்றன.

ஆனால் அணு மின் சக்தியை ஆக்கப்பூர்வ பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதாக ஈரான் அரசு கூறி வருகிறது.

மேலும் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தை மீறி ஈரான் செயற்படுவதாக கூறி, ஈரானின் மின் உற்பத்தி மற்றும் பெட்ரோ கெமிக்கல் துறைகள் மீது பல்வேறு பொருளாதார தடைகளை அமெரிக்கா ஏற்கனவே விதித்தது. இப்போது அதே துறைகளின் வர்த்தகத்தை தடுக்கும் வகையில் பணம் செலுத்தும் வழிகள், கச்சா எண்ணெய் விற்பனை நடைமுறைகள் மீது புதிய தடைகளை அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விதித்துள்ளார்.

இதனால் தனிநபர்களோ, நிறுவனங்களோ ஈரான் தேசிய எண்ணெய் நிறுவனங்கள், ஈரான் மத்திய வங்கியிடம் கொள்முதல், பண பரிமாற்றம் ஆகியவற்றில் ஈடுபட அமெரிக்கா தடை செய்துள்ளது.

# அமெரிக்காவில் 12 பேரை சுட்டுக்கொன்றவருக்கு மரணதண்டனை



சமீபத்தில் அமெரிக்காவின் கொலராடோ அருகிலுள்ள டென்வர் சினிமா தியேட்டருக்குள் புகுந்த மர்மமனிதன் துப்பாக்கி சூடு நடத்தியதில் 12 பேர் பரிதாபமாக இறந்தனர்.

கொலராடோ நீதிமன்ற விசாரணைக்கு இரண்டாவது முறையாக வந்த 24 வயது ஜேமேஸ் ஹோல்மேஸ்க்கு இன்னும் சில மாதங்களில் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்படும் என்று கூறப்படுகிறது.


பேட்மேன் காமிக் புத்தகத்தில் வரும் பழிவாங்கும் பாத்திரத்தை போன்று தன்னை மாற்றிக் கொண்ட ஜேம்ஸ் ஹோம்ஸ் சிறைச்சாலையிலிருந்து நீதிமன்றத்திற்கும் அவ்வாறே வந்திருக்கிறான்.

செய்தியாளர்கள், பாதிக்கப்பட்டோரின் உறவினர்கள் கூடியிருந்த நீதிமன்றத்தில் மிக சோர்வாக களைப்புடன் காணப்பட்ட அவன், தலையை கீழே குனிந்தவாறே 45 நிமிட விசாரணையில் மிகுந்த எச்சரிக்கையுடன் பதற்றமில்லாமல் பதிலளித்திருக்கிறான்.

சான்டியாகோ பகுதியைச் சேர்ந்த நியுரோ சயின்ஸ் மாணவரான ஜேமேஸ் ஹோல்மேஸ் தன்னை ஒரு ஜோக்கர் என்று கூறிக் கொள்கிறான். அவன் மனநலம் பாதிக்கப்பட்டு உள்ளான் என்றும் கூறப்படுகிறது.

சுட்டபோது அவனிடமிருந்து 223 செமி ஆட்டோமேடிக் ரைபிள், ஏ.ஆர். 15 அசால்ட் ரைபிள், 12 கேஜ் ஷாட் கன், கேலிபர் கைத்துப்பாக்கி போன்ற ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

# 10 ஆயிரம் ஆண்டு பழமையான பிரமாண்ட நிலத்தடி நீர்நிலை - விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



(நமீபியா)

ஆபிரிக்க நாடான நமீபியாவில் 10 ஆயிரம் ஆண்டு பழமையான பிரமாண்ட நிலத்தடி நீர்நிலை இருப்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

தென்மேற்கு ஆபிரிக்க நாடான நமீபியா அட்லான்டிக் பெருங்கடல் பகுதியில் அமைந்துள்ளது.

இங்கு குடிநீர் ஆதாரம் தொடர்பாக ஜேர்மனி புவி அறிவியல் மற்றும் இயற்கை வளங்கள் நிறுவனத்தின் திட்ட மேலாளர் மார்ட்டின் கிங்கர் தலைமையில் ஒரு ஆய்வு நடத்தப்பட்டது.

இந்த ஆய்வில், மிகமிக பழமையான பிரமாண்ட நீர்நிலை ஒன்று தரைக்கு அடியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மார்ட்டின் கிங்கர் கூறுகையில், ஆபிரிக்காவின் வறண்ட பகுதிகளில் ஒன்று நமீபியா. பாலைவனங்கள் அதிகம் உள்ள இப்பகுதியில் தரைக்கு கீழே சுமார் 1000 அடி ஆழத்தில் பிரமாண்ட ஏரி அளவுக்கு நீர்நிலை இருப்பது தெரியவந்துள்ளது.

தரைக்கு அடியில் நிலத்தடி நீர்ப் படுகைகள் இருப்பது சாதாரணம் தான். 10 ஆயிரம் ஆண்டு பழமையானது என்பது தான் சிறப்பம்சம். இத்தனை ஆண்டுகளாக கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது ஆச்சரியமாக இருக்கிறது.

இந்த நீர்நிலை சுமார் 70 கி.மீ. நீளம், 40 கி.மீ. அகலம் என பிரமாண்ட ஏரி அளவுக்கு இருக்கிறது. நிலத்தடி ஏரிக்கு ஓகங்வெனா- 2 என்று பெயரிட்டுள்ளோம். அங்கோலா நாட்டின் எல்லையை ஒட்டி இது அமைந்துள்ளது.

சமீப ஆண்டுகளாக சுற்றுச்சூழல் பாதிப்பு அதிகம் உள்ளதால் ஆறு, கடல் போன்றவை நிறைய மாசுபட்டிருக்கிறது. ஆனால் 10 ஆயிரம் ஆண்டுகளாக நிலத்தின் மேல் பகுதியுடன் தொடர்பில் இல்லாத தண்ணீர் என்பதால், ஓகங்வெனா ஏரியின் தண்ணீர் மிகவும் சுத்தமாக உள்ளது.

நமீபியா நாட்டின் மொத்த மக்களில் 40 சதவீதத்தினர் வடக்கு பகுதியில் வசிக்கின்றனர். இவர்களுக்கு ஓகங்வெனா ஏரி நீரைக் கொண்டு இன்னும் 400 ஆண்டுகள் வரை தட்டுப்பாடின்றி குடிநீர் வழங்க முடியும்.

அது மட்டுமின்றி பாசனத்துக்கும் பயன்படுத்தலாம். அந்தளவுக்கு அங்கு தண்ணீர் தாராளமாக இருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

ஆய்வு பணிகள் முழுமையாக நிறைவடைந்த பிறகு, தண்ணீரை எடுக்கும் பணி தொடங்கும் என்று நமீபியாவின் விவசாய துறை உயரதிகாரி ஆபிரகாம் நெகமியா தெரிவித்தார்.

# கண்ணி அகற்றல் துரிதம்

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் இனம் காணப்பட்ட மிதிவெடி உள்ள வயல்களில் மிதிவெடியகற்றும் பணி எவ்வளவு காலத்தில் முடிவடையும் என்பதனை உறுதியாகக் கூறமுடியாது. இருந்தும் இந்தப் பணி துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக கலோரஸ்ட் மனிதநேயக் கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தின் யாழ். கிளிநொச்சி மாவட்டங்களுக்கான நடவடிக்கை முகாமையாளர் bartholomewdigby தெரிவித்துள்ளார்.

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களில் கலோரஸ்ட் நிறுவனத்தின் மிதிவெடியகற்றும் நடவடிக்கையின் முன்னேற்றம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் இந்த மிதிவெடியகற்றும் பணிக்கான நிதியுதவி மற்றும் உபகரணங்கள் திருப்திகரமாக இருப்பதாகவும், ஐக்கிய இராச்சியம், அமெரிக்க ஐக்கிய நாடுகள், யப்பான், அவுஸ்ரேலியா, நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் என்பன இதற்கான நிதியுதவியை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்தப் பணியில் 1100 பணியாளர்கள் ஈடுபட்டிருக்கின்றனர். தெல்லிப்பளை, நாகர் கோயில், முகமாலை போன்ற பகுதிகளில் இந்தப் பணி துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தப் பகுதிகளில் மிதிவெடி புதைக்கப்பட்டிருக்கும் பகுதிகள் புதிதாகவும் இனங்காணப்பட்டுள்ளதாகவும், அவற்றிலும் இந்தப் பணியினை முன்னெடுக்க வேண்டிய தேவை இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதன் காரணமாக இந்தப் பணிமுடிவடையும் கால எல்லையை உறுதியாகக் கூறமுடியாது எனவும் தெரிவித்தார். இவ்வருடம் 10500 வெடிபொருட்கள் இந்தப் பகுதிகளில் இருந்து மீட்கப்பட்டிருப்பதுடன் யாழ். மாவட்டத்தில் மூன்று கண்ணிவெடியகற்றும் இயந்திரங்களும் கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு இயந்திரங்களும் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாகவும் குறிபிட்டதுடன் இந்த மனித நேயப் பணிகளுக்கும் நிறுவனங்களுக்கும் தமது நன்றியையும் தெரிவித்துக் கொண்டார். மேலும் முல்லைத்தீவு மாவட்டத்திலும் இத்தகைய பணி முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (பா)



தேசிய ஒலிம்பியாட் போட்டிக்காக வடமாகாணம் சார்பாக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆறாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவி தர்மிகா சர்வானந்தன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். இம்மாணவியை வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி நேற்று பத்தரமுல்லையிலுள்ள வடமாகாண ஆளுநர் உப அலுவலகத்தில் வைத்து பாராட்டி வாழ்த்துத் தெரிவித்து கௌரவித்ததுடன் அம்மாணவியின் பயணத்திற்காக ஒரு இலட்சம் ரூபாவையும் வழங்கினார். இந்த நிகழ்வில் ஆளுநரின் பாரியார், வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அனரன் சோமராஜா மற்றும் மாணவியின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

# கல்விச் செயலமர்வு மாணவர்கள் உற்சாகம்

(திருநெல்வேலி)

வெற்றித் தேர்வு வெளியீட்டகத்தால் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான செயலமர்வு நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

நேற்று முன்தினம் காலை 9.00 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணிவரை இடம்பெற்ற இச் செயலமர்வில் தீவகம், வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் மற்றும் பல பகுதியிலிருந்தும் பெரும் திரளான மாணவர்கள் கலந்துகொண்டனர். பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் மாணவர்களை மண்டபத்திற்கு அழைத்து வந்திருந்தனர். பல பாடசாலைகள் இதில் பங்கு கொண்டன.

பயிற்சி பெற்ற பல வளவாளர்கள் இச் செயலமர்வில் கலந்து கொண்டு மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கை நடாத்தியதுடன் பரீட்சைகளையும் நடாத்தினர். பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற ஐந்து மாணவர்கள் மேடையில் வைத்து விருந்தினர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். மேலும் 100 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம் பூபாலசிங்கம் புத்தகசாலையின் அனுசரணையுடன் இடம்பெற்ற இந்நிகழ்வில் புத்தகசாலையின் பணிப்பாளர் ப.மகாலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். பிரதான வளவாளராக விரிவுரையாளர் சரா.புவனேஸ்வரன் கடமையாற்றினார்.

மிகவும் கலகலப்பாக நடைபெற்ற இச்செயலமர்வு மாணவர்களுக்கு பெரும் உதவியாக அமைந்ததாகப் பெற்றோர் பலர் பாராட்டுத் தெரிவித்தனர். (137)

## இஸட் புள்ளி...

மாணவர்கள் கோஷங்களை எழுப்பினர். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சுனில் காமினி நவரட்ணவுடன் கலந்துரையாடுவதற்காக அதிகாரிகளால் தமக்கு தீர்வு வழங்கப்படாவின் சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொள்வதற்கு தாம தயாராகுவதாக பாதிக்கப்பட்ட மாணவர் ஒருவர் தெரிவித்தார்.

## யாழ். நுழை...

பத்திரங்களைக் கோரவுள்ளது. மீண்டும் யாழ். வளைவு மகர தோரணம் வருமா என்ற கேள்விக்குத் தற்போது விடை கிடைத்துள்ளபோதும் புதிய யாழ். வளைவு மகரதோரணம் எவ்வாறான வடி வத்தில் அமைக்கப்படும் என்ற கேள்வி தற்போது ஏற்பட்டுள்ளது. (சிகரம்)

## வர்ததகர்கள்...

குளிர்பானங்கள் மற்றும் இனிப்பு பண்டங்களை சிறுவர்கள் மற்றும் வயோதிபர்கள் உட்கொண்ட பின்னர் உணவு விஷமாகி பாரிய அசௌகரியம் ஏற்படுகிறது. இதனை வர்த்தகர்கள் கவனத்திற்கொண்டு பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யுமாறும், அவ்வாறு காலாவதியான பொருட்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவுள்ளதாகவும் பாவனையாளர் அதிகார சபையின் யாழ். மாவட்ட அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## புங்குடுதீவில்...

அளவிலும் மற்றும் எப்போதும் பாதுகாப்பான குடிநீரையே (கொதிததாறிய) பருகுங்கள், குழந்தைகள், பெரியவர்கள் அனைவரது மலமும் பாதுகாப்பாக மலகூடத்தினுள் அகற்றப்பட வேண்டும்.

உணவுப் பொருட்களை சமைத்தவுடன் உண்ணுங்கள் மற்றும் உணவுப் பொருட்களை மூடி வைத்திடுங்கள். உணவினைத் தொடுவதற்கு முன், மலசல கூடத்திற்கு சென்று வந்த பின் மற்றும் கைகள் அழுக்கடையக்கூடிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் கைகளை நன்றாக சவர்க்காரமிட்டுக் கழுவுங்கள். சமைக்காது உண்ணும் உணவுப் பொருட்களை எப்போதும் நன்றாக கழுவிய பின் (உப்பு நீரில்) உண்ணுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## தீயில் கருகிய பெண் மரணம்

எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் நேற்று முன்தினம் மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்த இளம் யுவதி ஒருவர் நேற்றுக்காலை சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார். சிவன்கோயில் வீதி சாவகச் சேரியைச் சேர்ந்த ஏ.சுதர்சினி (வயது 19) என்ற இளம் யுவதியே இவ்வாறு சிகிச்சை பயனின்றி மரணமானார். மன்னாரைச் சேர்ந்த இந்த யுவதி குறித்த சாவகச்சேரிப பகுதியில் கடந்த மாதம் திருமணம் முடித்து கணவரது வீட்டில் தங் கியிருந்த சமயமே தீச் சம்பவத்தில் எரிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் நேற்றுமுன்தினம் பிற்பகல் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை வீட்டின் சமயலறையில் குக்கரில் இருந்து தீ பரவி யுவதியின் ஆடையில் தீ பிடித்ததன் காரணமாகவே யுவதி எரிகாயங்களுக்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதும் இந்தச் சம்பவம் குறித்து சாவகச்சேரி பொலிஸார் விசாரணையை மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (பா)

## நிறைவடையும்...

மீள்குடியேற்றப்படுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் மேலும் குறிப்பிட்டுள்ளார். யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள சுமார் 1,500 பேர் மாத்திரமே முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள்குடியேற்றப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். முல்லைத்தீவு மாவட்டத்தின் மீள்குடியேற்றப் பணிகள் பெரும்பாலும் இந்த மாதத்திற்குள் நிறைவு பெறும் என மாவட்ட அரச அதிபர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## தொடரும்...

தடவைகள் சுட்டிக்காட்டிய போதும் அவை தவிசாளரால் திட்டமிட்டுப் புறக்கணிக்கப்பட்டுள்ளன. மக்களுக்கான திட்டங்களை இனங்காணும் போது பிரதேசத்தின் குறிப்பான நிலைமையில் இருந்து நடைமுறைக்குச் சாத்தியமான திட்டங்களை இனங்கண்டு அவற்றை நடைமுறைப் படுத்த வேண்டுமே தவிர சாத்தியமற்ற திட்டங்களைத் தமது உறுப்பினர்களின் பெரும்பான்மைப் பலத்துடன் நிறைவேற்றிய பின் அவற்றை நடைமுறைப்படுத்தாதிருப்பது சபையின் வளங்களையும் காலத்தையும் வீணடிக்கும் செயற்பாடுகளாகும்.

கடந்த வருடம் ஆகஸ்ட்டில் பசும்பாலைப் பொதிசெய்து பிரதேச எல்லைக்குள் வாழும் மக்களுக்கு விற்பனை செய்வது என்ற சாத்தியமற்ற திட்டம் சபையில் தவிசாளரால் தமது உறுப்பினர்களின் பெரும்பாண்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டு 10 மாதங்கள் கடந்துவிட்ட நிலையில் அத்திட்டம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது.

டெங்கொழிப்பு என்பதன் பெயரால் சேகரிக்கப்பட்ட கழிவு இரும்புகளை விற்ற பணத்திற்கான கணக்கு விபரங்கள் மற்றும் பொது அமைப்புக்களிடம் இருந்து வசூலிக்கப்பட்ட நிதி விபரங்கள் எவையும் பல மாதங்களாகியும் சபையின் கவனத்திற்காக சமர்ப்பிக்கப்படவில்லை.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கு மைதானம் ஒன்றை வழங்குவதாகச் சபையில் தீர்மானிக்கப்பட்டு அவற்றுக்கான பணிகளை ஆரம்பித்த பின் இடைநடுவே அப்பணிகள் கைவிடப்பட்டுப் பல மாதங்களாகிவிட்டன.

அவ்வாறே சபையின் கீழ் இயங்கும் நூலகங்களுக்குப் பதில் நூலகத் தொழிலாளர் வெற்றிடங்களை நிரப்புவதற்குச் சபையில் அனுமதி கோரிய பொழுது அதற்கு நாம் எமது ஆதரவினைத் தெரிவித்திருந்தோம். இருந்தும் அவ் வெற்றிடங்களை நிரப்பும் பொழுது தகுதிவாய்ந்த பெண்களை உள்வாங்காமல் திட்டமிட்டு தவிசாளரால் பெண்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட சபையின் தீர்மானமோ அங்கீகாரமோ இன்றி உள்ளூர் அமைப்புக்களிடம் இறைச்சிக்கடைகளை புனரமைப்பதற்கு ஒப்பந்தங்கள் தவிசாளரால் தனிப்பட்ட முறையில் அவரது சுயவிருப்பின் பேரில் கையளிக்கப்பட்டிருக்கின்றன. இவை சபையின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் முறைகேடுகள் இடம்பெறுவதை அனுமதிக்கும் செயற்பாடுகளாகும்.


ஆவரங்கால் சந்தையினை அகற்றி அச்சுவேலி பொதுச் சந்தையுடன் இணைப்பது என சபையில் தீர்மானிக்கப்பட்ட போது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மதிப்பீடுகள் சபைக்கு சமர்ப்பிக்காமலும் அவ்வேலைத்திட்டத்திற்கான ஒப்பந்தங்களை எந்த பொது அமைப்புக்களிடம் கையளிப்பது என்பதனைச் சபையில் தீர்மானிக்காது புனரமைப்பு வேலைகள் முடிவடைந்த நிலையில் குறித்த வேலையினைப் பெரிய பொக்கணை கணேஸ்வரா சனசமூக நிலயைத்திற்குக் கையளிப்பதாகவும் அதற்கு 11 இலட்சத்து 80 ஆயிரம் ரூபா செலவு எனவும் அதனை கையளிப்பதற்காகச் சபைக்குத் தீர்மானம் கொண்டுவர தவிசாளர் முயற்சிப்பது சபையின் சட்ட ஒழுங்கு விதிகளுக்கு முரணானதொரு செயற்பாடாகும்.

கடந்த வருடத்தில் துவிச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் பாதுகாப்பிற்கு என முறையே 3 ரூபாவும் 5 ரூபாவும் வரி அறவிடப்பட்டது. அதனைச் சபையில் 5 ரூபாவாகவும் 10 ரூபாவாகவும் அதிகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தைக கொண்டு வந்தபொழுது அதனை நாங்கள் எதிர்த்தபொழுது 4 ரூபாவாகவும் 7 ரூபாவாகவும் தீர்மாணம் நிறைவேற்றப்பட்டது. இருந்தும் தீர்மானங்களை நிறைவேற்றி அதனைத் தாமே மறுதலித்து 5 ரூபாவாகவும் 10 ரூபாவாகவும் அதிகரிக்க முயற்சிப்பது சபையில் நிறைவேற்றிய தீர்மானங்களை தாமே மறுதலித்துத் திட்டங்கள் சுமூகமாக முன்னகர்த்தப்படுவதை வேண்டுமென்றே குழப்பும் ஒரு முயற்சியாகும்.

சபையின் உப அலுவலகங்களில் திட்டங்களுக்கான செலவீனங்களை மதிப்பீடு செய்யவென தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட நிலையில் அவர்களின் மதிப்பீட்டு அறிக்கையைப் பெற்றுக் கொள்ளாது ஊரி மண் கொண்டு மேற்கொள்ளப்பட்ட வீதி செப்பனிடும் பணிக்கான எரிபொருள் செலவீனங்களை சபை நிதியிலிருந்து வழங்குவது நிதிமோசடிகள் இடம்பெறுவதற்கு வழிவகுக்கும் என்பதை நாம் சுட்டிக்காட்டியிருந்த போதும அவை தவிசாளரினால் செவிமடுக்கப்படவில்லை.

வலி கிழக்குப் பிரதேச சபையின் இவ்வாறான நடவடிக்கைகள் அப்பகுதி மக்களின் பிரதேச அபிவிருத்தி குறித்த எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் நிராகரிக்கும் செயற்பாடுகளாகவே அமைந்திருப்பதால் இவ்வாறான முறைகேடுகளைத் தடுத்துநிறுத்த பிரதேச உள்ளூர் அமைப்புக்கள், கல்விச் சமூகத்தினர் மற்றும் நலன்விரும்பிகள் அனைவரும் முன்வர வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நொச்சிமுனை மாதர்சங்கத் தலைவி சாகும்வரை உண்ணாவிரதம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, நொச்சிமுனை மீள்குடியேற்ற மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவி சந்திரமோகன் அனுசியா எட்டு அம்ச குற்றச்சாட்டுக்களை முன் வைத்து சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டமொன்றை ஆரம்பித்துள்ளார்.

மட்டக்களப்பு நகரிலுள்ள காந்தி சிலைக்கு முன்பாக நேற்று காலை முதல் இப்போராட்டத்தினை ஆரம்பித்துள்ளார்.

மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் தமது கோரிக்கைகளை நிராகரித்தமை, மட்டக்களப்பு மாநகர சபை ஊழல் மோசடி செய்தமை, மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழு நீதி வழங்க மறுத்தமை, மட்டக்களப்பு மத்தியஸ்த சபை உறுப்பினர் பக்கச்சார்பாக நடந்து கொண்டமை, மட்டக்களப்பு காத்தான்குடிப் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தனது கிராமத்தையும் தன்னையும் சட்ட விரோதமாக நடத்தியமை, மட்டக்களப்பு மாவட்ட செயலகத்திற்கு சகல பிரச்சினைகளை அறிவித்தும் அதற்கான தீர்வு தராமை, நொச்சிமுனை அரச காணிகளை விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

தனது கோரிக்கைகளுக்கான தீர்வு கிடைக்கும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடருமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.




| Rank | Country | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | சீனா | 18 | 10 | 4 | 32 |
| 2 | அமெரிக்கா | 14 | 8 | 9 | 31 |
| 3 | தென்கொரியா | 7 | 2 | 4 | 13 |
| 4 | பிரான்ஸ் | 6 | 3 | 6 | 15 |
| 5 | பிரித்தானியா | 4 | 6 | 4 | 14 |
| 6 | வடகொரியா | 4 | 0 | 1 | 5 |
| 7 | ஜேர்மனி | 3 | 8 | 4 | 15 |
| 8 | இத்தாலி | 3 | 5 | 2 | 10 |
| 9 | ரஷ்யா | 3 | 4 | 6 | 13 |
| 10 | கஜகஸ்தான் | 3 | 0 | 0 | 3 |
| 10 | தென்ஆபிரிக்கா | 3 | 0 | 0 | 3 |
| 12 | ஜப்பான் | 2 | 4 | 11 | 17 |
| 13 | ஹங்கேரி | 2 | 1 | 1 | 4 |

### புங்குடுதீவில்

# மாணவனை மோதிய வான் நிற்காது ஓடித் தப்பியது

(யாழ்ப்பாணம்)

நயினாதீவில் இருந்து யாழ். வந்த சுற்றுலாப் பயணிகள் வான் புங்குடுதீவில் மாணவன் ஒருவனை மோதிய பின் தரித்து நிற்காது தப்பியோடி விட்டது.

நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் புங்குடுதீவு மத்திய மகா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் மதிவண்ணன் கிருஷாந்தன் என்ற மாணவன் படுகாயமடைந்தார்.

குறித்த மாணவன் உடனடியாகப் புங்குடுதீவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்ககா யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

இதேவேளை மாணவனை மோதிய வான் தரித்து நிற்காது அங்கிருந்து ஓடித் தப்பியுள்ளது.

குறித்த வான் பற்றி போதனா வைத்தியசாலையில் உள்ள பொலிஸார் விசாரணை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டதாம். (85)

# வழியனுமதி பெற்ற சிற்றூர்திகளுக்கு எரிபொருள் மானியம் தயார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பயணிகள் வழி அனுமதிப் பத்திரம் பெற்று தனியார் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் பேருந்துகள், சிற்றூர்திகளின் உரிமையாளர்கள் யாழ். மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்திற்கு எதிர்வரும் 8 ஆம் திகதிக்கு முன்னர் நேரில் சமுகமளித்து எரிபொருள் மானியம் தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நேரில் வருகை தந்து விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்து வழங்காத உரிமையாளர்கள் விபரம் கொழும்பு தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் உரிமையாளர்கள் நேரில் வருகை தரும்பொழுது தற்போது நடைமுறையில் பாவனையில் உள்ள வங்கிக் கணக்குப் புத்தகத்தின் மூலப்பிரதி மற்றும் புகைப்படப் பிரதியுடனும், பயணிகள் சேவை வழி அனுமதிப்பத்திரத்துடனும், தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் புகைப்படப் பிரதி என்பவற்றுடனும் வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அலுவலக நாட்களில் மு.ப. 8.30 இல் இருந்து பி.ப. 4.30 மணி வரை மேற்படி விண்ணப்பத்தினைப் பெற்று பூர்த்திசெய்ய முடியும் என அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.



இலங்கை வந்துள்ள பிரித்தானிய நாடாளுமன்றத் தூதுக் குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் காலை சந்தித்து உரையாடினர். ஒன்பது உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழுவுக்கு பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் ஜேம்ஸ் வோர்டன் தலைமை வகிக்கிறார். இச்சந்திப்பில் அமைச்சர்களான ஜீ.எல்.பீரிஸ் சரத் அமுனுகம, கெஹெலிய ரம்புக்வெல, எஸ்.பி.திஸாநாயக்க, மகிந்தானந்த அலுத்கமகே மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

# பால் உற்பத்தி அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் திரவப் பால் உற்பத்தி கடந்த இரண்டு வருடங்களில் இரண்டு மடங்கால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்துக்குச் சொந்தமான மில்கோ நிறுவனம் இதனைத் தெரிவித்துள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் 2 லட்சத்து 25 ஆயிரம் லீற்றர்களாகக் காணப்பட்ட திரவப் பால் உற்பத்தி தற்போது 5 இலட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பாலுற்பத்தியாளர்களின் பங்களிப்பு இதில் முக்கிய இடத்தைக் கொண்டுள்ளதாக மில்கோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

### 5 மாதத்தில்

# 2.7 மில்லியன் பேருக்கு சாரதி அனுமதிப் பத்திரம்

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான ஐந்து மாதக் காலப்பகுதியில் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் 2 இலட்சத்து 75 ஆயிரத்து 443 சாரதி அனுமதிப் பத்திரங்களை விநியோகித்துள்ளதாகப் போக்குவரத்துப் பிரதி அமைச்சர் ரோஹனகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் மாதாந்தம் 20 ஆயிரத்து 754 சாரதி அனுமதிப் பத்திரங்களைப் புதிதாக விநியோகிப்பதாகவும் நாளொன்றுக்கு 1216 சாரதி அனுமதிப் பத்திரங்களை புதிதாக விநியோகிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஐந்து மாதங்களில் சட்டவிரோதமாக வாகனங்களைச் செலுத்தியதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட 608 வாகனச் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# மினிபஸ் சேவை ஸ்தம்பிதம்

(திருநெல்வேலி)

யாழ். நகருக்கும் மணியம் தோட்டம் - கொழும்புத்துறை தனியார் சேவை பஸ் சாரதியையும், நடத்துநரையும் சில இளைஞர்கள் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்ட புகாரையடுத்து இச் சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை 5.30 மணிக்கு இந்தத் தனியார் மினிபஸ் சேவையில் ஈடுபட்டு ஈச்சமோட்டையில் வந்துகொண்டிருந்தபோது சில இளைஞர்களால் சாரதியும், நடத்துனரும் தாக்கப்பட்டுள்ளனர்.

உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். சாரதியும் காயமடைந்தார்.

இதுபற்றி யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். ஏனையவர்களைப் பொலிஸார் தேடி வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. சுப்பிரமணியம் பாஸ்கரன் (வயது-19) என்பவரே படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நடத்துநராவார். (137)

# இயற்கையின் அதிசயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், அரியாலை மேற்குப் பிரதேசத்தில் கலைமகள் வீதியை சேர்ந்த தேவராசா தேவசெந்தூரன் என்பவரின் இல்லத்தில் ஒருதேங்காயில் இருந்து இரு தென்னைகள் முளைத்து உள்ளன.

# பாதுகாப்புக் கருத்தரங்கு தடல்புடல் ஏற்பாடு

(கொழும்பு)

இறுதியான அமைதி மற்றும் உறுதிப்பாட்டை நோக்கி என்ற தொனிப்பொருளில் கொழும்பில் நடைபெறவுள்ள பாதுகாப்புக் கருத்தரங்கு வரும் 8 ஆம் நாள் கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது.

வரும் 12 ஆம் நாள் வரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் பங்கேற்கும்படி, 63 நாடுகளுக்கு அரசு அழைப்பு அனுப்பியிருந்தது.

இந்த அழைப்பை ஏற்று இதில் கலந்துகொள்ள உள்ளதாக இதுவரை 29 நாடுகள் உறுதிசெய்துள்ளன. இந்த நாடுகளின் சார்பில் சேர்ந்த 49 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பங்கேற்பதாக உறுதி செய்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

பங்களாதேஷ், பிரேசில், புருணி, சீனா, ஈரான், கென்யா, மலேஷியா, மாலைதீவு, நேபாளம், நெதர்லாந்து நைஜீரியா, பாகிஸ்தான், சவூதி அரேபியா, தாய்லாந்து, உகண்டா, பிரித்தானியா, அமெரிக்கா, வியட்னாம், செனகல், அவுஸ்ரேலியா, கானா, இந்தோனேசியா, ரஸ்யா, சூடான். துருக்கி, உக்ரேன், நமீபியா, சாம்பியா, இந்தியா ஆகிய நாடுகளே தமது பங்கேற்பை உறுதிசெய்துள்ளன.

அதேவேளை, கொழும்பிலுள்ள அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது. அவுஸ்ரேலியா, கானா, இந்தோனேசியா, ரஷ்யா, சூடான், துருக்கி, உக்ரேன், நமீபியா, சாம்பியா போன்ற நாடுகள் இந்தியாவில் உள்ள தமது பாதுகாப்பு ஆலோசகர்களை அனுப்பவுள்ளன.

ஜப்பானும், ரஷ்யாவும் கொழும்பிலுள்ள தமது பாதுகாப்பு ஆலோசகர்களை அனுப்பவுள்ளன என்றும் அவர் மேலும கூறியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஆகஸ்ட் 03 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.